REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 பெப்ரவரி 23 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022
வரு. 91 இல. 46 | Thursday 23, February, 2023 | 16 பக்கங்கள் | 50/-




## சவால்களை ஏற்க பயந்தவர்களே இன்று விமர்சனங்களில் ஈடுபாடு

### பாராளுமன்றில் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நியமனம் அரசியலமைப்புக்கிணங்கவே இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் விமர்சிப்போர் அரசியலமைப்பையே கேலிக்குள்ளாக்குவதாக இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சவால்களை எதிர்கொள்வதற்கு பயப்படுபவர்களே, இவ்வாறு விமர்சனங்களை மேற்கொண்டுவருவதாகதெரிவித்த அவர், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடத்திய சர்வ கட்சி மாநாட்டுக்கும் இவர்கள் வரவில்லை. அதே போன்று பொறுப்புக்களை ஏற்பதற்கு அழைத்தபோதும் இவர்கள் வரவில்லை. இவ்வாறான 06

## அரசாங்க நிதி தெரிவுக் குழுவின் தலைமைப் பதவி எதிரணிக்கே

### விட்டுக்கொடுக்க அரசு தயார் என்கிறார் பிரசன்ன

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கத் தயாரென்றும், எதிர்க்கட்சி தரப்பிலிருந்து இருவரின் பெயர்கள் இதற்கெனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். எனினும், இது தொடர்பான தீர்மானத்தை தெரிவுக் குழுவே எடுக்க வேண்டுமென்றும் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளையின்படி, அரசாங்க நிதி தொடர்பான 06



ரோயல் கல்லூரியின் பழைய மாணவர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவையும் கௌரவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் ரோயல் கல்லூரி அதிபர் ஆர்.ஏ. ரத்னாயக்க நினைவுச்சின்னங்களை வழங்கி கௌரவித்த போது.

### எமது மீனவர்களையும் வளங்களையும் பாதுகாப்பதற்கே முன்னுரிமை

# இலங்கை - இந்திய மீனவர்களது பிரச்சினைக்கு நீண்ட கால தீர்வு

### தீர்க்கமான பேச்சுவார்த்தையில் இருநாட்டு தலைமைகளும் ஈடுபாடு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை, இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு நீண்டகால தீர்வை வழங்கும் வகையில் உரிய கவனம் செலுத்தப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்த அவர், எமது மீனவர்களையும் வளங்களையும் பாதுகாப்பதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் என்றும் தெரிவித்தார்.

தொடரும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வாக பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்திய மீனவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டு அவர்கள் எவ்வளவு தூரம் வர முடியும் என்பதை அவதானிப்பது அவசியம். அத்துமீறிய மீனவர்களின் லைசென்ஸ் மூலம் பெறப்படும் பணத்தை எமது மீனவர்களுக்கு பகிர்ந்தளிப்பதும் ஒரு யோசனையாக முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும் எமது மீனவர்கள் அதனை ஏற்றுக் கொள்வார்களா? என்பதும் கேள்வியாக உள்ளதென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொழும்பு துறைமுக 06

> 'லைசென்ஸ்' முறை ஒன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டு ஆலோசனை முன்வைப்பு
> பாராளுமன்றில் அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

## சட்டவிரோத கடற்றொழிலில் ஈடுபடுவோருக்கு கடும் நடவடிக்கை

### முழுமையாக தடுத்து நிறுத்த அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு



நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் முழுமையாக நிறுத்தப்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஒளி பாய்ச்சி மீன் பிடித்தல், அனுமதியற்ற சுருக்கு வலை தொழிலில் ஈடுபடுதல் உட்பட நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை, கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடினார்.

இதன்போது நீர்க் கட்டணம் மற்றும் மின் கட்டண அதிகரிப்புக்களால், உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளன. இதனால், ஐஸ் கட்டிகளின் விலையை அதிகரிக்கும் கோரிக்கையை உற்பத்தியாளர்கள் 06

## தமிழ் மக்களது சுய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

### அதற்கு அவர்களுக்கு வாய்ப்புகள் வழங்குதல் அவசியம்

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சபையில் தெரிவிப்பு



02

## தேர்தலுக்காக ஜே.வி.பி இதுவரை 03 பில்லியன் ரூபா வரை செலவு

### இவ்வளவு தொகை எங்கிருந்து வந்தது? இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் கேள்வி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து மக்கள் விடுதலை முன்னணியினர் இதுவரை 03 பில்லியன் ரூபாவுக்கு அதிகமான நிதியை, தேர்தல் நடவடிக்கைகளுக்காக செலவழித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் 06

## தோட்ட தொழிலாளர்களுக்கு ரூ. 3,250 சம்பளம் வேண்டும்

### வெள்ளிக்கிழமைக்குள் முடிவு அவசியம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 3,250 ரூபாவாக அதிகரிக்க ஜனாதிபதி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொழும்பு துறைமுக நகர பொருளாதார 06

## முட்டையின் நிர்ணய விலை அதிகாரசபையால் வெளியீடு

### வெள்ளை ரூ.44, சிவப்பு ரூ. 46



முட்டைக்கான அதிகப்பட்ச விலை 44 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியின் பிரகாரம், இவ்விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய வெள்ளை முட்டை ஒன்றின் விலை 44 ரூபாவாகவும், சிவப்பு முட்டையின் விலை 46 ரூபாவாகவும் 06

## ஜனநாயகத்தை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகளை வரவேற்க முடியாது

### இம்தியாஸ் பாக்கிர் மார்க்கார் MP



நாட்டில் தற்போது மிகப்பெரிய ஜனநாயகப் பிரச்சினை எழுந்துள்ளதாகவும், இது போன்ற ஜனநாயகத்தை கடுமையாக மீறும் செயல்கள் வேறு எந்நாட்டிலும் இடம்பெறவில்லையெனவும் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்துள்ளார். மக்கள் சந்திப்பில் (19) கலந்து கொண்டு 06

## அரசின் உத்தரவாத விலைக்கு அம்பாறையில் நெல் கொள்வனவு

### அரச அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் தலைமையில் நேற்று ஆரம்பம்



**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் இம்முறை பெரும்போக நெற்செய்கையாளர்களிடமிருந்து உத்தரவாத விலைகளுக்கு நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது. இதற்கான வேலைத்திட்டம் (22) அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் தலைமையில் ஆரம்பமானது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவின் கீழ் நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகளிடமிருந்து அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கு நெல் கொள்வனவு செய்யப்பட்டது. 06



### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குற்றச்சாட்டு

## மைத்திரியின் மேன் முறையீடு குறித்து மார்ச் 01 இல் தீர்மானம்

### மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்று அறிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு மீதான தீர்ப்பு, எதிர்வரும் மார்ச் (01) அறிவிக்கப்படும் என, மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (22) தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கக்கோரி, 06

## லேக் ஹவுஸ் ஸ்தாபகர் டி.ஆர். விஜேவர்தனவின் 137 ஆவது பிறந்த தினம்



இலங்கை அச்சு ஊடகத் துறையினதும், வெளியீட்டுத் துறையினதும் முன்னோடியும் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகருமான மறைந்த டி.ஆர். விஜேவர்தன அவர்களின் 137 ஆவது 06

## பண்டாரவளையில் தொழிலாளர் பயணித்த பாரவூர்தி விபத்து

02

### 19 பெண்கள் உட்பட 22 பேர் காயம்

### காணியற்ற ஒன்பது குடும்பங்களுக்கு

## சொந்தக் காணியை பகிர்ந்தளித்த பெண்

### கனடாவில் குடியேறியவரின் செயல்

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் யாழ் நகரிலுள்ள அவரது காணியை, காணியில்லாதோருக்கு பகிர்ந்தளித்துள்ளார்.

யாழ். வேலணை, கரம்பொன் மேற்கைச் சொந்த 06

## புத்தல, வெல்லவாய பகுதியில் சிறு நில அதிர்வு நேற்று பதிவு

புத்தல, வெல்லவாய பகுதிகளில் நேற்று காலை மீண்டும் சிறு நில அதிர்வொன்று ஏற்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. இது ரிக்டர் அளவீட்டு கருவியில் 3.3 மெக்னிடியூட் அளவில் பதிவாகியுள்ளது.

வெல்லவாய பகுதியை 06



## டலஸ், பீரிஸ் எம்முடன் இணைந்தால் மன்னிப்பு

### மஹிந்தானந்த அழுத்கமகே எம்.பி தெரிவிப்பு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்திலிருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ், டலஸ் அழகபெரும தலைமையிலான தரப்பினரை மன்னிக்கிறோம். அவர்கள் மீண்டும் எம்முடன் இணைந்துகொள்ளலாமென முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே எம்.பி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (22) நடைபெற்ற கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான இரண்டு கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலே, 06

### ஒன்பது வருடங்களுக்கு முன்னர் கைதான

## தமிழ் அரசியல் கைதிகள் 21 பேர் அதிரடியாக விடுவிப்பு

### அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுதலை



விடுதலைப் புலிகள் அமைப்பை மீள் உருவாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டனரென்ற சந்தேகத்தின் பேரில் 2014 ஆம் ஆண்டு வடக்கிலும் கொழும்பிலும் கைது செய்யப்பட்ட 21 தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றம் எதுவித 06

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

2023 பெப்ரவரி 23 வியாழக்கிழமை
தினகரன்
THINAKARAN
தினகரன்

**தொழுகை நேரம்**
சுபஹ் - 05.11
லுஹர் - 12.26
அஸர் - 03.47
மஃரிப் - 06.22
இஷா - 07.33

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் மாசி 11
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# புதிதாக சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவோருக்கு முதலுதவி பயிற்சி

## புதிய திட்டம் அமுலாகிறது



வாகன சாரதிகளுக்கு அடிப்படை முதலுதவி பற்றிய அறிவை வழங்கும் நோக்கில் புதிய திட்டமொன்று கட்டாயமாக்கப் பட்டுள்ளதாக, மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

“சாரதி அனுமதிப்பத்திரத்துக்காக புதிதாக விண்ணப்பிக்கும் அனைவருக்கும் முதலுதவி தொடர்பான அடிப்படை தெளிவூட்டலை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சாரதி அனுமதிப் பத்திரத்துக்காக புதிதாக விண்ணப் பிக்கும் அனைவரும் தமது திணைக்களத்தால், ஏற்பாடு 06

# தமிழ் மக்களது சுய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

## இதற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு வழங்கப்படுவது அவசியம்

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

தமிழ் மக்களும் இந்நாட்டில் எம்முடன் ஒன்றாக வாழும் இனத்தவர் என்பதை உணர்ந்து, அவர்களுக்கான சுய உரிமை பாதுகாக்கப்படும் வகையில் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இன, மத பேதங்களுக்கப்பால் சிந் தித்து, இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமென்றும் அவர் தெரிவித்தார்.

பல் தன்மை ஒருமைப்பாட்டுடன் இவ்வாறு ஆரம்பிக்கப்படும் பயணமே, வெற்றி பெற முடியுமென்றும் அதன் மூலமான பொருளாதார முன்னேற்றமே நிலையானதாக அமையுமென்றும் அவர் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற துறைமுக நகர முதலீடுகள் தொடர்பான சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர், மேலும் தெரிவித்ததாவது,

பல் தன்மை ஒருமைப்பாட்டுடனான பயணம் எமது பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியம். அவ்வாறான நிலை ஏற்படும் போது தான், எம்மால் சுயாதீனமாக செயல்பட முடியும். அவ்வாறில்லாவிட்டால் எப்போதும் சர்வதேசத்துக்கு கடன்காரர்களாகவே நாம் இருக்க நேரிடும். அப்போது எமது நாட்டின் சுயாதீனம் என்பது வெறும் கனவாகவே அமையும்.

அதேபோன்று எந்த நாட்டுடனும் நாம் பகைமையுடன் செயல்பட முடியாது அனைத்து நாடுகளுடனான நல்லுறவு எமக்கு மிக அவசியமானது. குறிப்பாக மேற்கத்தைய நாடுகளுடனான சிறந்த நல்லுறவு அவசியமாகும்.

இறுதி யுத்தத்தின் போது, இலங்கைக்கு வந்த ஒன்பது கப்பல்களை எமது படையினர் வெற்றிகரமாக அழிப்பதற்கு அமெரிக்கப் புலனாய்வுத் தகவல்களே உறுதுணையாக அமைந்தன. இதை மறந்து விடக்கூடாது.

சர்வதேச நாடுகளுடனான நல்லுறவுக்கு, முன்னாள் வெளிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் செயற்பாடுகள் மிகவும் காத்திரமானதாக அமைந்ததாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# அரச வைத்தியசாலைகளுக்கு 20 மில்லியன் லீற்றர் டீசல்

## ஜனாதிபதி முன்னிலையில் ஒப்பந்தம் கைச்சாத்து



நாடு முழுவதுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்காக டீசலை விநியோகிப்பதற்கு 46 மில்லியன் டொலரை மனிதாபிமான உதவியாக வழங்க ஜப்பான் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அது தொடர்பான ஒப்பந்தத்தை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று (22) பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நடைபெற்றது.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன மற்றும் ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிதெய்கி ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி ஜப்பான் அரசாங்கம் 20 மில்லியன் லீற்றர் டீசலை இலங்கைக்கு பெற்றுக் கொடுக்கவுள்ளதோடு தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கை வைத்திய சேவைகளை இலகுபடுத்துவதற்காக இந்த மனிதாபிமான உதவியை வழங்கியுள்ளது.

# IMF உதவியை விரைவாக பெற ஆதரவு தாருங்கள்

## இந்தியா, பாரிஸ் கிளப் உறுப்பு நாடுகளிடம் வேண்டுகோள்

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இயலுமானவரை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு ஆதரவளிக்குமாறு இந்தியா மற்றும் பாரிஸ் கிளப் உறுப்புநாடுகளிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியா மற்றும் பாரிஸ் கிளப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்களுக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்குமிடையிலான சந்திப்பொன்று கடந்த திங்கட்கிழமை வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது.




இச்சந்திப்பில், இலங்கை சார்பில் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் 06

# கொரிய புசான் மாநகர சபையின் தூதுக்குழு சபாநாயகருடன் சந்திப்பு

கொரிய குடியரசின் இலங்கைக்கான தூதுவர் வூஜின் ஜியோங் *(Woonjin Jeong)* தலைமையிலான கொரியாவின் புசான் மாநாகர சபையின் *(Busan Metropolitan City Council)* 13 பேர் அடங்கிய தூதுக் குழு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை பாராளுமன்றத்தில் (17) சந்தித்தது.

புசான் நகரில் நடத்த எதிர்பார்க்கப் படும் 2030 உலகக் கண்காட்சி *(2030 World Expo)* தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கை கொரிய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான யதாமினி




குணவர்த்தன, கருணாதாச கொடிதுவக்கு மற்றும் பதவியணித் தலைமை அதிகாரியும், பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.


இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

**ரூ. 35,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்**

22.50% 2025 “A” தொடர்களின் கீழ் ரூ. 15,000 மில்லியனையும் 20.00% 2027 “A” தொடர்களின் கீழ் ரூ. 20,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2023 பெப்ரவரி 27ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 22.50% 2025 'A' | 20.00% 2027 'A' |
|---|---|---|
| ISIN* | LKB00325A156 | LKB00527I150 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 15,000 மில்லியன் | ரூ. 20,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 22.50% ஆண்டொன்றிற்கு | 20.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2022 சனவரி 15 | 2022 செத்தெம்பர் 15 |
| **முதிர்வுத் திகதி** | **2025 சனவரி 15** | **2027 செத்தெம்பர் 15** |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 15 சனவரி & 15 யூலை | 15 மார்ச் & 15 செத்தெம்பர் |
| ஒன்று சேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 2.7970 | ரூ.100 இற்கு ரூ. 9.2265 |
| ஏலவிற்பனைத் திகதி | 2023 பெப்ரவரி 27, திங்கட்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித்திகதியும் நேரமும் | 2023 பெப்ரவரி 27, திங்கட்கிழமை மு.ப.11.00 மணி | |
| **தீர்ப்பனவுத் திகதி** | **2023 மார்ச் 01** | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்கு கொடுப்பனவு திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர்/ISIN தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக் கொள்ளலாம்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 | என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* **பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்**

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/ பதிவாளர்**

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**


ரூபவாஹினியில் நாளை காமினி பொன்சேக்காவின்

# 'சாகரயக் மெத' 10 மணிக்கு ஒளிபரப்பு

இலங்கை ரூபவாஹினியில் 2023 பெப்ரவரி 24 ஆம் திகதி இரவு 10.00 மணிக்கு தேசிய அலைவரிசையூடாக காமினி பொன்சேக்கா நடித்த 'சாகரயக் மெத' திரைப்படம் ஒளிபரப்பாகவுள்ளது.

இத் திரைப்படம் தொடர்பான விமர்சனம் ஒன்றும் அன்று இரவு 9.30 தொடக்கம் 10.00 மணி வரை ஒளிபரப்பாகவுள்ளது. ஆனந்த அபேநாயக்கவின் தயாரிப்பில்1981 ஆம் ஆண்டு வெளிவந்த இத் திரைப்படத்தை காமினிபொன்சேக்கா இயக்கியிருந்தார்.

வீணா ஜயக்கொடி கதாநாயகியாக நடித்த இத்திரைப்படத்துக்கு 1982 ஆம் ஆண்டு சிறந்த தயாரிப்பு, சிறந்த திரைப்படம், சிறந்த இயக்குநர், சிறந்த திரைக்கதை, சிறந்த எடிட்டிங்,சிறந்த ஒப்பனை, சிறந்த கலை இயக்குநர் மற்றும் சிறந்த துணை நடிகைக்கான தேசிய விருதுகளும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலா பயணிகளுக்கு பயண அட்டை அறிமுகம்

இலங்கை சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதற்காக பயண அட்டை *(Travel Card)* அறிமுகம் செய்யப் பட்டுள்ளது.

இந்தப்பயண அட்டை அறிமுகம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் நடைபெற்றது.

இந்தப் பயண அட்டையால், சுற்றுலாத்துறையில் சேவைகளை வழங்குவோர் சிறப்புச் சலுகைகளைப் பெறுவர்.

சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்தவர்களுக்கே இச்சலுகைகள் கிடைக்கவுள்ளன. இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுதல், தாங்கள் கொண்டு வரும் டொலர்களை வங்கியில் நேரடியாகப் பரிமாற்றம் செய்தல் போன்ற தரமான சேவைகளை இவர்களால் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன், இந்த அட்டை மூலம் பொருட்கள், சேவைகளை சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பாகப் பெற முடியுமென்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சிறிதம்ம தேரரின் மனு நிராகரிப்பு

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் கல்வெள சிறிதம்ம தேரர் முன்வைத்த அடிப்படை உரிமை மனுவை, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், தாம் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமையினால், தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு கோரி, தேரர் அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தார்.

பல காரணிகள் தொடர்பில் 06

# பலபிட்டி ஆஸ்பத்திரியில் பாரிய தீ மருந்துப் பொருட்கள் எரிந்து நாசம்

பலபிட்டிய ஆதார வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலையில் ஏற்பட்ட தீ, தற்போது முற்றாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும்,குளிர்சாதனப் பெட்டியிலிருந்த மருந்துகள் தீயில் எரிந்து சேதமடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மின் கசிவு காரணமாக இத் தீ ஏற்பட்டிருக்கலாமென, பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவ்வைத்தியசாலையின் மருந்துப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த கட்டடத்தில்,நேற்று முன்தினம் (21) மாலை 5.45 மணியளவில் புகை மூட்டம் தென்படத் தொடங்கியது.

இதையடுத்து, வைத்தியசாலை ஊழியர்கள் உடனடியாகச் செயற்பட்டு அம்பலாங்கொடை பொலிஸாருக்கு அறிவித்து தீயைக் கட்டுப்படுத்த முயற்சித்தனர்.

பின்னர், காலி தீயணைப்பு பிரிவினர் வரவழைக்கப்பட்டு தீ அணைக்கப்பட்டது. இதனால், பல மருந்துகளை தீயிலிருந்து மீட்டதாக அம்பலாங்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

தீயினால் மருந்துகளுக்கு ஏற்பட்ட சேதம் இதுவரை கணக்கிடப்படவில்லை. அம்பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பண்டாரவளையில் தொழிலாளர் பயணித்த பாரவூர்தி விபத்து; 19 பெண்கள் உட்பட 22 பேர் காயம்

பண்டாரவளை – ஐஸ்லெபி தோட்டப் பகுதியில் தோட்டத் தொழிலாளர்கள் பயணித்த பாரவூர்தியொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில், சாரதி உட்பட 22 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர்களில் 19 பெண்களும், 03 ஆண்களும் அடங்குகின்றனர்.

இவர்கள், பண்டாரவளை மற்றும் தியத்தலாவை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தடுப்புத் தொகுதி செயற்படாமல் போனமையினால், பாரவூர்தி வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. வேலையிலிருந்து வீடு நோக்கிச் சென்ற தொழிலாளர்கள் பயணித்த பாரவூர்தியே விபத்துக்குள்ளானது.

# ரயிலில் மோதி ஒருவர் பலி; வட்டவளையில் சம்பவம்

**(கினிகத்தேனை தினகரன் நிருபர்)**

வட்டவளை ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று புதன்கிழமை (22) இடம்பெற்ற விபத்தில், ஒருவர் உயிரிழந்தார்.

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த புகையிரத்திலேயே இவர் மோதுண்டு உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ள நபர் தொடர்பான 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 247.01 | 258.31 |
| கனடியன் டொலர் | 266.36 | 277.87 |
| யூரோ | 384.45 | 399.49 |
| ஜப்பான் யென் | 2.7062 | 2.8094 |
| சிங்கப்பூர் டொலர் | 269.78 | 280.64 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 431.81 | 447.74 |
| சுவிஸ் பிராங்க் | 384.84 | 402.89 |
| அமெரிக்க டொலர் | 360.09 | 370.26 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 960.04 | கட்டார் ரியால் | 99.31 |
| குவைத் டினார் | 1,183.80 | சவூதி ரியால் | 96.47 |
| ஓமான் ரியால் | 940.10 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.54 |

**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன்**

# கிண்ணையடியில் சிவராத்திரி விழா



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளுக்கு அமைவாக கோறளைப் பற்று பிரதேச இந்து அறநெறிப் பாடசாலைகள் ஒன்றியமும், கிண்ணையடி அருள்மிகு ஆதிலிங்கேஸ்வரர் ஆலயமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த மட்டக்களப்பு மாவட்ட மகாசிவராத்திரி விழா கடந்த 18.02.2023 ஆம் திகதி சனிக்கிழமை இரவு வாழைச்சேனை, கிண்ணையடி அருள்மிகு ஆதிலிங்கேஸ்வரர் ஆலய முன்றலில் பிரமாண்டமாக அமைக்கப் பட்டிருந்த கலை அரங்கில் கொட்டும் மழைக்கும் மத்தியில் சிறப்பாக நடைபெற்றது.

கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆர். கங்காதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிண்ணையடி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.மா. குலேந்திரரூப சர்மா, மட்டக்களப்பு மாவட்ட செயலக மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கி.குணநாயகம், கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஆர். சிவகுமார், இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் நே.பிருந்தாபன், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி டுகேந்தினி சிறிஸ்கந்தராசா, தமிழ் சைவ பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் கலைவாணன் ஐயா, லண்டன் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாட்டுமன்ற மட்டக்களப்பு மாவட்ட சமூகநல தொண்டர் க.துரைராஜா மற்றும் இம்மன்றத்தின் உறுப்பினர்கள், கிண்ணையடி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம், மகாவிஷ்ணு ஆலயம், மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், முத்துமாரியம்மன் ஆலயம், நாகதம்பிரான் ஆலயம் மற்றும் கிராமமட்ட அமைப்புக்கள், கோறளைப்பற்று பிரதேச ஆலயங்கள் ஆகியவற்றின் நிருவாகிகள், கலைமன்றங்கள், அறநெறிப்பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கிரான் கிறிஸ்தாலயா நடன கலைமன்றம், மட்டக்களப்பு சிவசக்தி பஜனை மன்றம், கோறளைப்பற்று பிரதேச அறநெறிப் பாடசாலைகள், கலைமன்றங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் கரகாட்டம், கோலாட்டம், சிவதாண்டவம், புஷ்பாஞ்சலி, கதம்ப நடனம், வில்லுப்பாட்டு, நாடகம், சிவகீர்த்தனை, பரதநாட்டியம், நடனங்கள், அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சைவசமய பொது அறிவு வினாவிடைப்போட்டிகள் நடைபெற்றன. நிகழ்வில் கலந்து கொண்டிருந்த அதிதிகளின் சிறப்புச் சொற்பொழிவுகள் முதலான நிகழ்வுகளும் இடம்பெற்றன.





ந்நிகழ்வில் விசேட அம்சமாக மட்டக்களப்பு மாவட்ட சிவதொண்டர் திருக்கூடத்தினரால் ஆலயத்தில் விரதமிருந்த அடியார்களுக்கு உருத்திராக்கம் அணிவிக்கப்பட்டது.

தொடர்ந்து கலை நிகழ்வுகளில் பங்குபற்றிய கலைமன்றங்கள், அறநெறிப்பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள், நெறிப்படுத்திய ஆசிரியர்கள் மற்றும் சைவசமய பொது அறிவுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்கள் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**முருகுப்பிள்ளை கோகிலதாசன்...**

# கல்விக்கு உதவுவோம் விசேட வேலைத்திட்டம்

**அட்டாளைச்சேனை பிரதேசத்தில் முன்னெடுப்பு**



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வருமானம் குறைந்த மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றன. தற்போது ஏற்பட்டுள்ள பொருட்களின் விலையேற்றம் மற்றும் அதிகரித்த வாழ்க்கைச் செலவு காரணமாக குறித்த குடும்பங்கள் பல்வேறு கஷ்டங்களுடன் வாழ்ந்து வருகின்றன.

வருமானம் குறைந்த, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களில் உள்ள பாடசாலை செல்லும் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைக்கு தேவையான கற்றல் உபகரணம் மற்றும் புத்தகப்பை, பாதணி ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்கு முடியாமல் உள்ளனர்.



இதனைக் கருத்திற் கொண்டு அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வருமானம் குறைந்த பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் விசேட வேலைத்திட்டமொன்றினை SECDO SRILANKA அமைப்பு முன்னெடுத்துள்ளது.

குறித்த வேலைத்திட்டத்தின் ஊடாக முதற்கட்டமாக 30மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு அமைப்பின் காரியாலயத்தில் இடம்பெற்றது. அமைப்பின் தலைவரும், சட்டத்தரணியுமான ஏ.எல்.நியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.ஜி.அஷ்ரத் பிரதம அதிதியாகவும், கிராம உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஸ்வர் விசேட அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர். இதன் போதுஅமைப்பின்உறுப்பினர்கள்,பாடசாலை மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அமைப்பின் தலைவர் சட்டத்தரணி ஏ.எல். நியாஸ் கருத்துத் தெரிவிக்கையில்,"SECDO SRILANKA அமைப்பு அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பெண்கள் தலைமை தாங்கும் மற்றும் வருமானம் குறைந்த குடும்பங்களில் உள்ள மாணவர்களை இணங்கண்டு அவர்களின் கல்வி நடவடிக்கைக்குத் தேவையான பொருட்களை வழங்கி வருகின்றது.



கல்விக்கு உதவுவோம் விசேட திட்டத்தின் ஊடாக முதற்கட்டமாக 30மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் புத்தகப்பை மற்றும் பாதணிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக மேலும் பலருக்கு உதவ திட்டமிட்டுள்ளோம்.

எமது அமைப்பின் கல்விக்கு உதவுவோம் விசேட வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த வேலைத்திட்டத்திற்கு உதவி புரிந்த சகோதரர்கள், நண்பர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் அமைப்பின் உறுப்பினர்கள் என சகலருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்" என்றார்.

**ஏ.எல்.எம். றியாஸ்...**
(பாலமுனை விசேட நிருபர்)




தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மாசி மாதம் 11ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷஃபான் பிறை 02

### குறள் தரும் சிந்தனை



இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்

மனமாறுபாடு காரணமாக ஏற்படுகிற பகையுணர்வு மக்களை ஒன்று சேர்ந்து வாழ முடியாமல் செய்கின்ற தீய பண்பாகும்.

# வலுவான பொருளாதாரத்துக்கு முறையான திட்டமே அவசியம்

பொருளாதார ரீதியில் நாடொன்றை கட்டியெழுப்புவதற்கு வலுவான திட்டம் மிகவும் அவசியமானது. அவ்வாறான திட்டங்களைக் கொண்டுள்ள நாடுகள் பொருளாதார ரீதியில் பாரிய வளர்ச்சியை அடைந்துள்ளன.

அந்த வகையில் அவ்வாறான வலுவான திட்டங்களின் தேவையும் அவசியமும் தற்போது இலங்கையிலும் பரவலாக உணரப்பட்டுள்ளது. இதற்கு கடந்த வருடம் இந்நாடு முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியும் அதன் விளைவான தாக்கங்களும் பாதிப்புகளும் அழுத்தங்களும் காரணமாக அமைந்துள்ளன. கடந்த வருடத்தில் நிலவியது போன்ற பொருளாதார நெருக்கடியையும் சவால்களையும் தவிர்த்துக் கொள்ள இவ்வாறான திட்டங்கள் இன்றியமையாததாகும்.

அதுதான் உண்மையான தேவைப்பாடு. இந்நாடும் ஏனைய நாடுகளைப் போன்று பொருளாதார ரீதியில் வலுவான முறையில் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இந்நாடு சுதந்திரமடைந்து 75 வருடங்களைக் கடந்திருக்கிறது. பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளும் போது ஜப்பானுக்கும் தாய்லாந்துக்கும் அடுத்த இடத்தில்தான் இலங்கை இருந்தது.

இந்நாடு சுதந்திரமடையும் போது அன்றைய 'லண்டன் ரைம்ஸ்' பத்திரிகை, இலங்கை கீழைத்தேயத்தின் சுவிற்சர்லாந்தாக விரைவில் உருவாகுமென எதிர்பார்ப்பதாகத் தெரிவித்திருந்தது. இலங்கைக்கு சுதந்திரம் வழங்கியதோடு நின்றுவிடாது, 900 மில்லியன் ரூபாவையும் இலங்கைக்கு பிரித்தானியா ஒதுக்கியது.

பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைவதற்குத் தேவையான அத்தனை சாதக நிலைமைகளையும் இலங்கை சுதந்திரம் பெற்றுக் கொள்ளும் போதே கொண்டிருந்தது என்பதையே இவை எடுத்துக்காட்டுகின்றன.

ஆனால் சுதந்திரமடைந்து 75 வருடங்கள் கடந்தும் இன்னும் பொருளாதார ரீதியில் வலுவான நிலையை இந்நாடு பெற்றுக் கொண்டதாக இல்லை. அதன் விளைவாகவே மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு கடந்த வருடம் நாடு முகம்கொடுத்தது. அதனால் நாட்டில் மின்சாரம், எரிபொருள், எரிவாயு, மருத்துப்பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. விவசாய உற்பத்திகள் பெரிதும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டன. விவசாயத்திற்குத் தேவையான பசளையை விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. நாட்டின் பொருளாதாரம் முடங்கிப் போனது. மக்கள் மிகவும் கடினமான சூழ்நிலைக்கு முகம்கொடுத்தனர்.

இந்தச் சூழலில் நாட்டின் தலைமைப் பதவியை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்துவரும் பொருளாதாரத் திட்டங்களின் பயனாக கடந்த வருடம் முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடிகள் ஓரளவு குறைவடைந்துள்ளன. இது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு வலுவான திட்டங்களின் அவசியத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இதன்படி, இந்நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் இற்றைவரையும் பொருளாதாரத்தை வலுவாகக் கட்டியெழுப்பக் கூடிய முறையான திட்டங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு முறையான திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டிருந்தால் இந்நாடு கடந்த வருடம் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்திருக்க வாய்ப்பு இருந்திருக்காது. இந்நிலையில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமை அளித்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார். அதன் பயனாகவே கடந்த வருடம் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியில் இருந்து படிப்படியாக மீட்சிபெற்று வருகின்றது. அதன் பிரதிபலன்கள் மக்களையும் சென்றடைகின்றன.

'நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்கள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்பில் சில அரசியல் கட்சிகள் பொய் கூறி அரசியல் நாடகம் ஆடுவதாகக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, 'நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்துடன் எவரும் விளையாட முடியாது. என்ன தடைகள் வந்தாலும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நிறுத்தப் போவதில்லை' என்றுள்ளார்.

பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இவ்வாறு உறுதிமிக்க தலைமைத்துவம் மிகவும் அவசியம். அவ்வாறான தலைமையினால்தான் வலுவான பொருளாதாரக் கொள்கையின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும்.

இதை விடுத்து சில அரசியல் கட்சிகள் மக்களிடம் பொய் கூறி நாடகமாடுவதானது நாட்டையும் மக்களையும் தொடர்ந்தும் பின்னடைவுக்கே இட்டுச் செல்லும். அவ்வாறான நிலைமை நாட்டில் மீண்டும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதுதான் ஒவ்வொருவரதும் வேணவாவாக உள்ளது.

ஆகவே முறையான திட்டங்களுடன் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முன்னெடுக்கும் திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அதுவே வளமானதும் சுபிட்சமானதுமான தேசத்திற்கான பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# நந்தவனம் பவுண்டேசன் ஏற்பாட்டில் தமிழ்மாமணி விருது வழங்கும் விழா

திருக்குயில் நந்தவனம் பவுண்டேசன், அனைத்துலக தமிழ் மாமன்றம் இணைந்து நடத்திய உலகத்தாய்மொழி நாள் விழா மற்றும் தமிழ்மாமணி விருது வழங்கும் நிகழ்வு ஆகியன நேற்றுமுந்தினம் (21. 02. 2023) அன்று திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள பிரீஸ் ரெசிடென்சி ஹோட்டலில் சிறப்பாக நடைபெற்றன.

நந்தவனம் பவுண்டேசன் தலைவர் நந்தவனம் சந்திரசேகரன் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். அனைத்துலக தமிழ் மாமன்றத் தலைவர் மருத்துவ கலாநிதி வே.த.யோகநாதன் தலைமையேற்றார்.

ரோட்டரி மாவட்டம் 3000 முன்னாள் ஆளுநர் மருத்துவர் ஜமீர் பாட்ஷா முன்னிலை வகித்தார்.

இயக்குநர், மக்கள் நன்மதிப்பு 2022 2023 ரோட்டரி மாவட்டம் 3000 ஸ்ரீரங்கம் நகர நலச்சங்கம் மக்கள் செய்தித் தொடர்பாளர் கே.சீனிவாசன், தஞ்சாவூர் பாரத் கல்விக்குழும நிறுவனர் புனிதா கணேசன், கனடா கலை அருவி நுண்கலை பயிலக நிறுவனர் ரேணுகா விக்னேஸ்வரன், திருச்சி சசிகலா செல்வராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

பழந்தமிழ்க் காவிரி அறக்கட்டளை நிறுவனர் மணவை தமிழ் மாணிக்கம் சிறப்புரையாற்றினார்.

அவர் உரையாற்றும் போது "என் தாயைப் பழித்தாலும் விடேன், என் தமிழைப் பழித்தால் விடவே மாட்டேன் என்று பாடிய கவிஞர்கள் வாழ்ந்த மண் இந்தத் தமிழ்மண். அதனால்தான் நமது தாய்மொழியான தமிழுக்கு அதிக மதிப்பும் மரியாதையும் தந்து கொண்டிருக்கிறோம். தாய்மொழியான தமிழுக்காக தன்னுரையே தீக்குப் பலியாக்கிக் கொண்ட கீழப்பழுவூர் சின்னச்சாமி உலாவிய மண்ணிது. கவிஞர் கண்ணதாசனிடம் 'நீங்கள் எப்படி இவ்வளவு சிறப்பாக எழுதுகிறீர்கள்?' என்று கேட்டபோது "எனது அறியாப் பருவத்தில் அன்னைத் தமிழை நன்றாகக் கற்றுக் கொண்டேன்

அது தான் என்னை எழுதத் தூண்டுகிறது, சிந்திக்கத் தூண்டுகிறது. என்னை வாழவைத்துக்கொண்டிருக்கிறது, அதுதான் நான் இறந்தபின்னும் இந்தத் தலைமுறையை வாழவைக்கும் என்று தாய்மொழியின் சிறப்பு குறித்து குறிப்பிடுகிறார்.



இந்தத் தாய்மொழி நாளில் பேரறிஞர் அண்ணாவைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஏனென்றால் ஒரு தனையன் தாய்க்கு பெயர் சூட்டியது யார் என்றால் அது அண்ணாதான். நமது தாய்த்திருநாட்டிற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டிய பெருமை அண்ணாவுக்கு உண்டு.

அண்ணாவின் வருகைக்குப் பின்புதான் எழுத்துத் தமிழ், உரைநடைத் தமிழ், பேச்சுத் தமிழ் என்றெல்லாம் இந்த மண்ணில் மலர்ந்தன. தமிழ்மொழிப் பேச்சால்தான் நமக்கு ஆளுமைத் திறன் வளர்ந்தது. உலகத்தாய்மொழி நாளில் கொண்டாடப்பட வேண்டிய தலைவர் அறிஞர் அண்ணா ஆவார். செம்மொழியான மொழிகளில் உயிர்ப்புடன் இருக்கின்ற மொழி நம்முடைய தமிழ்மொழிதான்" என்று குறிப்பிட்டார்.



இவ்விழாவில் சென்னை தனுஷ்கோடி, பொன் .தாமோதரன், மீ.செந்தில்குமார், நல். செ.சிவலிங்கம், பிரான்ஸ் ஈழபாரதி, கன்னியாகுமரி கோ. ராஜேஷ் கோபால், திருவண்ணாமலை சி.சிவகாமி, திருச்சி பா.சேதுமாதவன், கள்ளக்குறிச்சி மா.அ.ஆயுதா, மலேசியா பாவலர் கோவதன், சோலை முருகன், தேனி ஜோதிபாரதி, கருமனூர் மா.சங்கர், ஸ்ரீரங்கம் ந.விஜயசுந்தரி, நெய்வேலி ச.மா.கார்த்திகேயன் ஆகியோருக்கு தமிழ்மாமணி விருது வழங்கப்பட்டது

விழாவின் நிறைவாக சமூக சேவகர் லாவண்யா அனைவருக்கும் நன்றி கூறினார். துளசி பாலசுப்பிரமணியன் நிகழ்வை சிறப்பாக ஒருங்கிணைத்தார்.

# மருத்துவப்பணியை மக்கள் தொண்டாக கருதி சேவையாற்றியவர் டொக்டர் விக்கினேஸ்வரா

## அமரரின் முதலாம் வருட நினைவு தினம் நேற்று

மருத்துவ கலாநிதி ப.விக்கினேஸ்வரா அவர்கள் அமரராகி ஒரு வருடமாகிறது. ஆனால் அவரிடம் சிகிச்சைபெற்ற மக்கள் இன்றும் அவரது திறமைகளையும், சேவைகளையும் புகழ்ந்து நினைவு கூருகின்றனர்.

மிகவும் பிரபல்யமான வைத்தியர்களாக விளங்கிய அமரர்களான டொக்டர் S.A.வெற்றிவேல்,டொக்டர் S.A. தர்மலிங்கம் ஆகிய இருவரும் டொக்டர். ப. விக்கினேஸ்வராவின் மாமனா ர்களாவர். யாழ்ப்பாணம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வெ. யோகேஸ்வரன் இவரது மைத்துனராவார்.

டொக்டர் விக்கினேஸ்வரா கொழும்புத்துறையில் சாமியார் வீதியில், யோகர் சுவாமிகளின் ஆச்சிரமத்திற்கு அருகாமையில் உள்ள இல்லத்தில் 1930ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி சபாரத்தினம் பரமநாதன் சண்முகம்_அப்புக்குட்டி தங்கரத்தினம் தம்பதிகளின் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தார்.

தனது மாமனார் டொக்டர் வெற்றிவேல் அவர்களிடமிருந்து பொறுமை, சகிப்புத்தன்மை, இரக்கம், உண்மையாக நடத்தல், கடின உழைப்பு ஆகிய நற்பண்புகளைக் கற்றுக் கொண்டார். கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் ஆசீர்வாதம் எப்பொழுதும் கிடைத்துக் கொண்டிருந்தது. நல்லூர்க் கந்தப் பெருமானைத் தினமும் சென்று வழிபாடு செய்திருந்தார். யாழ்ப்பாணம்



சென் ஜோன்ஸ் கல்லூரியில் ஆரம்ப வகுப்பு முதல் உயர்கல்வி பயின்றார்.

அதனைத் தொடர்ந்து கொழும்பு மருத்துவக் கல்லூரியில் அனுமதி பெற்று சிறந்த பெறுபேறு பெற்று மருத்துவராக வெளியேறினார். 1968ஆம் ஆண்டு சுன்னாகம் தனியார் வைத்திய நிலையத்தை தனது மைத்துனர் டொக்டர் நவரட்ணம், விக்னேஸ்வராவிடம் ஒப்படைத்துவிட்டு உயர் வைத்தியக் கல்விக்காக லண்டன் பயணமானார்.

விக்னேஸ்வரா முழுநேர வைத்தியராகச் சேவையாற்றினார். புன்சிரிப்புடன் கூடிய பண்பான, அன்பான உரையாடலும், அழகான கம்பீரமான தோற்றமும் எல்லோரையும் கவர்ந்திருந்தன. பொறுமையாக நோயாளியை பரிசோதிப்பார்.

எல்லாவிதமான சிகிச்சைகளையும் தனியாக தன்னம்பிக்கையுடன் மேற்கொண்டவர். நச்சு இரசாயனங்களால் ஏற்படும் விபத்துகளின் காரணமாக விரைந்து வரும் விவசாயிகளின் உயிரைக் காப்பாற்றி விடுவார். தன்னிடம் வரும் நோயாளிகளை அரச மருத்துவமனையில் அனுமதிக்கும்படி சிபார்சு செய்து அனுப்பியபின் தானும் அங்கு சென்று அவர்களுக்கு ஆறுதல் கூறுவார்.

இவரது வைத்திய நிலையத்துக்கு இவரைச் சந்திப்பதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வி. தர்மலிங்கம் உட்பட பல பிரமுகர்களும் வருகை தந்திருந்தனர். நிறைவான வாழ்க்கையை நடத்திய டொக்டர் அவர்கள் 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி காலமானார்.

டொக்டர் விக்னேஸ்வரா சிகிச்சை அளித்த காலத்தை 'நோயாளிகளுக்கு ஒரு பொற்காலம்' என மக்கள் வர்ணிக்கின்றனர். பலர் இவரை அரசியல், சமூக செயற்பாடுகளில் ஈடுபடுத்த முற்பட்டபோது 'நோயாளிகளுக்கு சேவை செய்வதைவிட மேலானது வேறு ஒன்றும் இல்லை' என்று கூறி அவர்களின் கோரிக்கையை நிராகரித்து விடுவார். ஆனால் தேசப்பற்று மிக்கவர். பிள்ளைகளுக்கும் தேசப்பற்றை வளர்த்திருந்தார்.

விக்னேஸ்வராவின் நினைவாக 'ஈழத்தில் மாட்டுவண்டிச் சவாரியும் தமிழர் மரபும்' என்ற நூல் பேராசிரியர் பாலசுகுமார் அவர்களால் தொகுக்கப்பட்டு அனாமிகா வெளியீடாக வெளி வந்தது. அவரது பிள்ளைகளின் தேசப்பற்றை இது எடுத்துக்காட்டுகின்றது.

விக்னேஸ்வரா அவர்களின் இழப்பு ஈடு செய்ய முடியாதது எமக்கு மட்டுமல்ல. வைத்திய உலகுக்கும் ஆகும். அவர் காலமான செய்தியைக் கேட்டதும் இப்பகுதி மக்கள் பல்வேறு வழிகளிலும் விக்கினேஸ்வரா அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

**க.செல்வகுமாரன்...**
MA, ஓய்வுநிலை அதிபர்
சுன்னாகம்

# சென்னை அண்ணாசாலையில் நேற்றுக்காலை திடீரென குலுங்கிய அடுக்குமாடி கட்டடங்கள்!

சென்னை அண்ணாசாலையில் நேற்றுக் காலையில் நிலநடுக்கம் உணரப்பட்டது. கட்டடங்கள் குலுங்கியதால் மக்கள் அதிர்ச்சியடைந்தனர். அண்ணாசாலை அருகே லொயிட்ஸ் ரோட் பகுதியில் நேற்று இலேசான நில அதிர்வு உணரப்பட்டது. மூன்று மாடிக் கட்டடத்தில் அதிர்வு உணரப்பட்டதால் அங்கிருந்த ஊழியர்கள், பொதுமக்கள் அச்சத்துடன் வெளியேறி வீதிக்கு வந்தனர்.

சென்னை ராயப்பேட்டையில் லொயிட்ஸ் ரோட் பகுதியில் நேற்றுக் காலை 10.15 மணிளவில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. அங்குள்ள தனியார் நிறுவனத்தில் கடமையிலிருந்த ஊழியர்கள் அடுக்குமாடி கட்டடத்தில் இருந்து அச்சத்தினால் வெளியே ஓடிவந்தனர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

தொடர்ந்து நிலநடுக்கம் ஏற்படுமா என்ற அச்சத்தில் மக்கள் காணப்பட்டனர். ஆனால் இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் எத்தனை புள்ளிகள் பதிவானது என்ற விபரம் உடனடியாக தெரியவில்லை. மெட்ரோ பணிகள் நடைபெறுவதால் கட்டடம் குலுங்கியதா என்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். அதே நேரத்தில் சென்னையில் நிலஅதிர்வு ஏற்பட மெட்ரோ ரயில் பணிகள் காரணமல்ல என ரயில்வே நிர்வாகம் சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அந்த பகுதிகளில் மெட்ரோ ரயில் பணிகள் எதுவும் தற்போது நடைபெறவில்லை எனவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் அருகில் உள்ள தனியார் நிறுவனத்தில் போர் போடும் பணி நடைபெற்று வருவதாகவும் இதனால் அருகில் இருந்த கட்டடங்கள் குலுங்கியதாகவும் இதை நிலநடுக்கம் என நினைத்து அதிர்ச்சியடைந்த ஊழியர்கள் வெளியே ஓடி வந்ததாகவும் மற்றொரு தகவல் பரவியது. ஆனால் அந்தத் தகவல் உறுதி செய்யப்படவில்லை. அண்ணாநகரிலும் சில பகுதிகளில் நேற்றுக் காலை நிலஅதிர்வு உணரப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.



இதனிடையே அந்த நிலஅதிர்வு குறித்து அந்தக் கட்டடத்தில் பணிபுரியும் சிலர் செய்தியாளர்களிடம் பேசியுள்ளனர்.

"காலை 10.30 மணிக்கு டீ குடிக்கலாம் என எழுந்த போது கட்டடம் இலேசாக அதிர்ந்தது. அப்போது பயந்து போய் கட்டடத்தை விட்டு வெளியே ஓடி வந்தோம். சில நிமிடங்கள் அதிர்வு உணரப்பட்டது" என்று அவர்கள் தெரிவித்தனர்.

சென்னையில் அவ்வப்போது நிலஅதிர்வு ஏற்படுவது வழக்கம். கடந்த 2021ஆம் ஆண்டு சென்னையில் பெசன்ட் நகர், ஆழ்வார்பேட்டை, அடையாறு, அண்ணாநகர், தியாகராய நகர், நுங்கம்பாக்கம் ஆலந்தூர், மயிலாப்பூர், மாதவரம், கொளத்தூர் உள்ளிட்ட சில இடங்களில் இலேசான நிலஅதிர்வை மக்கள் உணர்ந்தனர். இதை தேசிய நில அதிர்வு கண்காணிப்பு மையமும் உறுதிப்படுத்தியது. நேற்றைய தினம் ஏற்பட்டது நிலஅதிர்வுதானா என்பது பற்றி உடனடியாக எவரும் உறுதிப்படுத்தவில்லை.

இது ஒருபுறமிருக்க, துருக்கியைத் தொடர்ந்து இந்தியாவை மையமாக கொண்டு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாக புவியியல் ஆய்வாளர்கள் அதிர்ச்சி தகவலை வெளியிட்டிருந்தனர்.

இதனிடையே உத்தராகண்டில் எந்த நேரத்திலும் மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்படலாம் என்று தேசிய புவி இயற்பியல் ஆய்வுக் கழகத்தின் தலைமை விஞ்ஞானி பூர்ண சந்திரராவ் கூறியிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இதனிடையே, சென்னையில் இன்று காலை 10.15 மணிக்கு திடீரென நிலநடுக்கம் உணரப்பட்டது.

தமிழ்நாட்டில் மிகக்குறுகிய இடத்தில் கோடிக்கணக்கான மக்கள் வசிக்கின்ற பகுதியாக சென்னை உள்ளது. நாளுக்கு நாள் சென்னையை நோக்கி படையெடுக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்தபடி உள்ளது. இந்த மக்கள் கூட்டத்தை சமாளிப்பதற்காக நகர் முழுவதும் பல்வேறு அடுக்குமாடிக் குடியிருப்புகள் எழுந்த வண்ணம் உள்ளன. அடுக்குமாடி அலுவலகங்களும் வேகமாக உருவாகி வருகின்றன.

இந்த நிலையில் சென்னையில் நிலநடுக்கம் இடம்பெற்றால் மிக மோசமான பாதிப்புகள் ஏற்படுமென்று அஞ்சப்படுகின்றது.

தேசிய புவி இயற்பியல் ஆய்வுக் கழகத்தின் தலைமை விஞ்ஞானி என். பூர்ண சந்திர ராவ் எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், நிலநடுக்கங்கள் ஏற்படக் காரணமானவை கண்டத் தட்டுகள் நகருதல் ஆகும். இந்திய கண்டத் தட்டு அல்லது டெக்டானிக் பிளேட் என்பது ஆண்டுக்கு 5 செ.மீ. நகர்ந்து கொண்டே இருக்கிறது. இது இந்தியாவில் மிகப் பெரிய நிலநடுக்கத்துக்கான சாத்தியங்களை அதிகப்படுத்தி இருக்கிறது என்கிறார் அவர்.

மேலும் இமயமலையில் நேபாளத்தின் வடக்கு மற்றும் இந்தியாவின் இமாச்சல பிரதேச மாநிலம் இடையே பெரும் இடைவெளி உருவாகி கொண்டிருக்கிறது. இது உத்தரகாண்ட்டில் மிக மோசமான நிலநடுக்க பாதிப்பை எந்த நேரத்திலும் ஏற்படுத்தும் எனவும் விஞ்ஞானி என். பூர்ண சந்திர ராவ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## மக்கள் அச்சத்தினால் வீதிகளில் தஞ்சம்!






# இலங்கையின் அச்சு ஊடகத்துறை வரலாற்றில் என்றும் அழியாத நாமம் டி.ஆர். விஜேவர்தன

## பத்திரிகைத்துறைக்கு புத்துயிரூட்டிய முன்னோடி



அமரர் டி.ஆர் விஜேவர்தன இலங்கை பத்திரிகைத் துறையின் முன்னோடி ஆவார். ஏரிக்கரை பத்திரிகைகளின் இல்லமாக விளங்கும் லேக் ஹவுஸ் (அசோசியேட்டட் நியூஸ்பேர்ப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட்) நிறுவனத்தின் ஸ்தாபகர் அவராவார்.

'தினமின' சிங்கள மொழிப்பத்திரிகையை எச்.எஸ். பெரேராவிடம் இருந்து வாங்கி வெளியிடத் தொடங்கியதன் மூலம் பத்திரிகை வெளியீட்டுத்துறைக்குள் பிரவேசித்த இவர், இரண்டு தசாப்த காலப்பகுதிக்குள் பத்திரிகை வெளியீட்டு துறைக்கென தனியான நிறுவனத்தை ஸ்தாபித்தவராகவும் மூன்று மொழிகளில் தனித்தனி பத்திரிகைகளை ஒரே நிறுவனத்தில் வெளியிடக்கூடிய பாரம்பரியத்தை ஆரம்பித்து வைத்த பெருமைக்குரியவராகவும் தமிழ் பேசும் மக்களுக்குகென தமிழ் மொழிப்பத்திரிகையை வெளியிட்டு வைத்த முதலாவது பெரும்பான்மை இனத்தவராகவும் விளங்குகிறார்.

இவ்வாறு பல்வேறு சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள அமரர் டி.ஆர். விஜேவர்தன, 1886 பெப்ரவரி 23 ஆம் திகதி பிறந்தார். தமது 60 வருட வாழ்வுக் காலத்தில் இத்தேசத்திற்கும் ஊடகத்துறையின் மேம்பாட்டுக்கும் அச்சு வெளியீட்டுதுறையின் வளர்ச்சிக்கும் அவர் ஆற்றியுள்ள பங்களிப்புகள் இந்நாட்டு வரலாற்றில் அழியாத்தடம் பதித்துள்ளன.

ஒன்பது பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் மூன்றாவது மகனாகப் பிறந்த இவர், கல்கிசையிலுள்ள சென் தோமஸ் கல்லூரியில் ஆரம்பக்கல்வி பெற்றார். அதனைத் தொடர்ந்து இங்கிலாந்து சென்று கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் இணைந்து உயர்கல்வி

எச்.எஸ். பெரேரா என்பவரால் 1909 இல் ஆரம்பிக்கப்பட்ட 'தினமின' பத்திரிகை 1914 ஆம் ஆண்டாகும் போது கடும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டது. அப்பத்திரிகையைத் தொடர்ந்தும் வெளியிட முடியாத நிலையை அடைந்திருந்த சூழலில், டி.ஆர். விஜேவர்தன அப்பத்திரிகையை வாங்கி தனது சகோதரருடன் இணைந்து புதிய மெருகூட்டலுடன் வெளியிடலானார். அதற்கென புதிய பணியாளர் குழாமொன்றை நியமித்த அவர், இப்பத்திரிகை வெளியீட்டுக்கென புறக்கோட்டை நொரிஸ் வீதியில் அமைந்திருந்த கட்டடமொன்றில் அலுவலகமொன்றையும் ஆரம்பித்தார்.

டி.ஆர். விஜேவர்தன இப்பத்திரிகையை வெளியிடத் தொடங்கியதும் மக்கள் மத்தியில் தினமினவுக்கு நல்ல வரவேற்பும் ஆதரவும் கிடைக்கப் பெற்றன. அதனால் அவர் ஆங்கிலமொழிப் பத்திரிகையொன்றை வெளியிடுவது குறித்தும் கவனம் செலுத்தலானார். இந்நிலையில் அன்றைய காலகட்டத்தில் கடும் நிதிநெருக்கடியோடு 'சிலோனிஸ்' என்ற ஆங்கிலப் பத்திரிகையும் வெளிவந்து கொண்டிருந்தது. இது சேர். பொன்னம்பலம் அருணாசலத்தினால் ஆரம்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டு வந்த பத்திரிகையாகும். இப்பத்திரிகையை வாங்கிய டி.ஆர். விஜேவர்ன, அதனை 1918 முதல் 'சிலோன் டெய்லி நியூஸ்' என்ற பெயரில் வெளியிடலானார். இப்பத்திரிகைக்கும் மக்கள் பேராதரவு அளிக்கலாயினர்.

இவ்விரு பத்திரிகைகளும் ஆரம்பத்தில் ஆனந்த வீதியின் முன்பாக அமைந்திருந்த சிலோனிஸ் பத்திரிகை அலுவலகத்தில் அச்சிட்டு வெளியிட்டன.

றினார் டி.ஆர். விஜேவர்தன. இதுவே இலங்கையில் மிகப்பெரிய பத்திரிகை வெளியீட்டு நிறுவனமாக அன்று முதல் விளங்கி வருகிறது.

இதேவேளை, 1930 இல் 'சிலுமின' பத்திரிகையை ஆரம்பித்தார். அதன் பின்னர் இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் 1932.03.15 இல் 'தினகரன்' என்ற பெயரில் இந்நாட்டு தமிழ் பேசும் மக்களுக்கென தனியொரு பத்திரிகையை வெளியிடலானார். அதன் ஊடாக இந்நாட்டின் தமிழ் பேசும் மக்களுக்காகத் தனியொரு தமிழ்ப்பத்திரிகையை ஆரம்பித்து வெளியிட்டு வைத்த முதலாவது பெரும்பான்மை இனத்தவர் என்ற பெருமையையும் அவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்நாட்டின் சுதந்திரப் போராட்டம் தொடர்பான தகவல்களையும் செய்திகளையும் தமிழ் பேசும் மக்களுக்கு கொண்டு செல்வதையும் இச்சுதந்திரப் போராட்டத்தில் இங்கு வாழும் தமிழ் பேசும் மக்களையும் இணைத்துக் கொள்வதையும் அவர்களது பங்களிப்பைத் தேசியமயப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு அவர் இப்பத்திரிகையை வெளியிடலானார். ஏனெனில் அக்காலப்பகுதியில் இந்நாட்டில் வெளிவந்து கொண்டிருந்த தமிழ்மொழிப் பத்திரிகைகள் இந்திய சுதந்திரப் போராட்டம் பற்றிய செய்திகளையே பெரிதும் பிரசாரம் செய்து கொண்டிருந்தன. அப்பத்திரிகைகள் இலங்கை சுதந்திரப் போராட்டத்திற்கு

> இலங்கை அச்சு ஊடகத் துறையினதும், வெளியீட்டுத் துறையினதும் முன்னோடியும் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகருமான மறைந்த டி.ஆர். விஜேவர்தன அவர்களின் 137 ஆவது பிறந்த தினம் இன்று (23.2.2023) ஆகும்















கற்றார். அங்கு சட்டத்துறையில் கற்று பட்டதாரியானதோடு, அத்துறையிலேயே பரிஸ்டர் பட்டமும் பெற்றார்.

இதேவேளை, இவர் இங்கிலாந்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த சமயம் இலங்கை பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்குள்ளாகி இருந்தது. இந்நிலையில் பிரித்தானியாவில் இருந்த டி.ஆர் விஜேவர்தனவுக்கு இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு பங்களித்துக் கொண்டிருந்த பல தலைவர்களின் அறிமுகம் கிடைக்கப் பெற்றது.

அதேநேரம் வெகுஜன ஊடகத்தின் சக்தியையும் பெறுமதியையும் அவர் அறிந்து கொண்டார். அக்காலப் பகுதியில் பிரித்தானியாவில் வெளியாகிக் கொண்டிருந்த பெரும்பாலான பத்திரிகைகள் நூறு வருடங்களைக் கடந்திருந்தன.

இவ்வாறான நிலையில் தாய்நாட்டின் சுதந்திரத்தில் டி.ஆர். விஜேவர்தனவும் கவனம் செலுத்தி ஆர்வம் காட்டவும் தொடங்கினார். இந்நிலையில் ஒரு நாள் அவர், இலங்கைக்கே உரித்தான சிங்கக்கொடியான இன்றைய தேசியக் கொடி லண்டன் அருங்காட்சியகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை அவதானித்தார்.

இவ்வாறான சூழலில் உயர்கல்வியை நிறைவு செய்து கொண்டு தாயகம் திரும்பிய டி.ஆர். விஜேவர்தன, புதுக்கடையில் அமைந்துள்ள உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பொதுவாழ்வில் பிரவேசித்தார். அவர் சிறிது காலம் சட்டத்துறையில் பணியாற்றிய போதிலும், சொற்ப காலத்தில் அச்சு ஊடகத்துறையிலும் பதிப்பகத்துறையிலும் பிரவேசித்தார்.

> தமிழ், சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளை இலங்கையில் ஆரம்பித்து, அனைத்து மொழி பேசும் மக்களுக்கும் ஊடகப்பணி புரிந்தவர் அமரர் டி.ஆர். விஜேவர்தன

இவை இவ்வாறிருக்க, 1834 இல் பிரித்தானியரால் ஆரம்பிக்கப்பட்டு 90 வருடங்கள் வெளிவந்து கொண்டிருந்த 'டெய்லி ஒப்சேவர்' பத்திரிகையை 1923 இல் அவர் வாங்கினார். இப்பத்திரிகையே சுமார் ஒரு நூற்றாண்டு காலமாக 'சண்டே ஒப்சேவர்' என்ற பெயரில் தொடராக வெளிவந்து கொண்டிருகிறது.

இவ்வாறு அச்சு ஊடகத் துறையிலும் வெளியீட்டுத் துறையிலும் கட்டம் கட்டமாக அகலக் கால்பதித்து வந்த டி.ஆர். விஜேவர்தன, இந்நாட்டின் வர்த்தக பத்திரிகைக் கைத்தொழிலில் பாரிய நிறுவனமொன்றை ஆரம்பிப்பதற்கு தயாரானார். அதற்கேற்ப 1926 இல் அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் என்ற நிறுவனத்தை உருவாக்கினார். இந்நிறுவனத்தின் செயற்பாட்டுப் பணிகளை முன்னெடுக்கவென கொழும்பின் இதயப் பகுதியாக விளங்கும் ஏரிக்கரையில் கட்டடமொன்றை ஸ்தாபித்தார். அதுவே லேக் ஹவுஸ் ஆகும். தமது அச்சு ஊடக மற்றும் வெளியீட்டுத்துறைப் பணிகளை 1929 இல் அதற்கு மாற்

உரிய இடம் அளிக்கவுமில்லை, விழிப்பூட்டல்களை முன்னெடுக்கவுமில்லை. இக்குறைபாட்டை நிவர்த்திக்கும் வகையில் இவர் தினகரன் பத்திரிகையை வெளியிடலானார்.

இப்பத்திரிகைகள் ஊடாக நாட்டின் சுதந்திரத்தின் தேவையும் அதற்கு அரசியல் ரீதியிலான சீர்திருத்தங்களின் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டி வந்தார். இவ்வாறான சூழலில் இடம்பெற்ற மனிங், டொனமூர், சோல்பரி யாப்பு சீர்திருத்தங்களுக்கு இவர் தமது பத்திரிகைகள் ஊடாக முன்னெடுத்த பிரசாரம் நிழலாக அமைந்திருந்தது என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேநேரம் இன, மத பிரதேச பேதங்களுக்கு அப்பால் எல்லோரும் ஒன்றுபட்டு ஐக்கியமாக பிரித்தானியரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான கருத்துக்களையும் அவர் மக்கள் மத்தியில் விதைத்தார். சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி அவர் மக்கள் மத்தியில் ஐக்கியத்தைக் கட்டியெழுப்பினார்.

நாட்டின் சுதந்திரத்தை இலக்காகக் கொண்டு அச்சு ஊடகத் துறையில் பிரவேசித்த இவர், மூன்று தசாப்த காலம் (1914_1948) முன்னெடுத்த போராட்டம் இந்நாட்டில் வாழும் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து 1948 இல் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்தது. இதன் ஊடாக தாயகத்தின் சுதந்திரக் கனவை அவரது வாழ்நாளில் அவர் கண்டு கொண்டார்.1950 ஜூன் 13 இல் அவர் காலமானார். அவரது மறைவைத் தொடர்ந்து லேக் ஹவுஸ் பத்திரிகைகள் அவரது மகனது தலைமையில் தொடர்ந்து வெளிவரலாயின.

சுதந்திரத்திற்கு முன்னரும், பின்னரும் இந்நாட்டு அரசியலில் லேக் ஹவுஸ் பத்திரிகைகள் அதிக செல்வாக்கு செலுத்தக் கூடியனவாக இருந்து வந்தன. இந்நிலையில் 1973 இல் அரசாங்கம் இந்நிறுவனத்தையும் அதன் பத்திரிகைகளையும் அரசுடைமையாக்கியது. அதனைத் தொடர்ந்து இற்றைவரையும் லேக் ஹவுஸ் அரச நிறுவனமாக விளங்கி வருகின்றது.

பத்திரிகைகள் ஊடாக உண்மையை ஆராய்வதில் அச்சமற்ற அர்ப்பணிப்புடன் செயற்பட்டார் டி.ஆர். விஜேவர்தன. அதன் ஊடாக இந்நாட்டின் செய்திப் பத்திரிகைத் துறையிலும் வெளியீட்டுத் துறையிலும் மாபெரும் புரட்சியை அவர் ஏற்படுத்தினார்.

மேலும் தன் சிந்தனைக்கு அமையவே லேக் ஹவுஸ் கட்டடத்தை வடிவமைத்து நிர்மாணித்தார் இவர். அதன் பயனாக மரபுரிமைக் கட்டடங்களில் ஒன்றாக இக்கட்டிடம் பட்டியலிடப்பட்டுள்ளது. அதற்கு இக்கட்டடம் கொண்டுள்ள வடிவமைப்பும் வேலைப்பாடுகளும் காரணமாக அமைந்துள்ளன. இக்கட்டடம் நாட்டிலுள்ள மக்களால் நீடித்து நிலைக்கக்கூடிய நினைவுச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

லேக் ஹவுஸ் நிறுவனத்தை உருவாக்கிய போது அன்றைய காலகட்டத்தின் நவீன அச்சு இயந்திரத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியே அவர் இதனைத் தொடங்கினார். அவரது நிறுவன ஊழியர்களுக்கு பணியாற்றுவதற்கு ஏற்ற சிறந்த சூழலையும் அவர் உருவாக்கினார். டி.ஆர். விஜேவர்தன அறிமுகப்படுத்திய பாரம்பரியத்தைப் பின்பற்றி லேக் ஹவுஸ் நிறுவனம் தொடர்ந்தும் நவீன தொழில்நுட்பங்களை நாட்டுக்கு அறிமுகப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

லேக் ஹவுஸ் நிறுவனமும் அதன் பத்திரிகைகளும் ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்தை குறுகிய காலப்பகுதியில் அடைந்து கொண்டதோடு, நாடு சுதந்திரம் பெற்று 75 வருடங்கள் கடந்தும் நீடித்து நிலைத்து நிற்கின்றது. அவை இன்னும் பல நூற்றாண்டுகள் நீடித்து நிலைக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இந்நிறுவனத்திற்கும் அதன் பத்திரிகைகளுக்கும் அந்தளவுக்கு ஆழ அகலமாக அடித்தளமிட்டிருக்கிறார் அமரர் டி.ஆர் விஜேவர்தன.

இப்பத்திரிகை வெளியீட்டுத் துறையின் ஊடாக அவர் நாட்டுக்கும் நாட்டு மக்களின் அறிவியல் துறைக்கும் ஆற்றியுள்ள பங்களிப்பு அளப்பரியது. அதன் ஊடாக இலங்கை அச்சு ஊடகத்துறையில் என்றும் ஒளிரும் நாமமாக டி.ஆர் விஜேவர்தன விளங்குகிறார்.

மர்லின் மரிக்கார்...

## புதிதாக சாரதி... 02ஆம் பக்கத் தொடர்

செய்யப்படும் முதலுதவி கருத்தரங்கில் பங்கேற்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வாகன விபத்துக்கு முகம்கொடுக்க நேரிடும் சந்தர்ப்பத்தில் அடிப்படை முதலுதவி பற்றிய அறிவில்லாததால், பாதிப்பு அதிகமாகிறது.

ஆகவே, சாரதிகளுக்கு அடிப்படை முதலுதவி பற்றிய அறிவை வழங்கும் நோக்கில், இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## IMF உதவியை... 02ஆம் பக்கத் தொடர்

கலாநிதி எஸ்.சமரதுங்க ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இச்சந்திப்பின்போது, நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறையில் அடையப்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் தொடர்பில், வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரியினால் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

மிகவும் காத்திரமான தற்போதைய சூழ்நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு தரப்பினரதும் பரந்துபட்ட ஆதரவு அவசியமென்றும் அமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கி ஆளுநர், திறைசேரியின் செயலாளர் உள்ளிட்டோர் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## சிறிதம்மன்... 02ஆம் பக்கத் தொடர்

ஆராய்ந்த உயர் நீதிமன்றின் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம், இம்மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது நிராகரித்தது.

## ரயிலில் மோதி ... 02ஆம் பக்கத் தொடர்

தகவல் இதுவரையில் தெரியவரவில்லை எனவும், சடலத்தை அடையாளம் காணும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துத் தொடர்பான விரிவான விசாரணையை, வட்டவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வளர்ந்து வரும் இந்தியாவின் வர்த்தக சந்தை நாட்டின் பொருளாதாரத்துக்கு ஆசீர்வாதம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இந்தியாவின் முன்னேற்றம் தொடர்பில் நாம் அச்சம் கொள்ளத் தேவையில்லை. அது, எமது நாட்டுக்கான ஆசீர்வாதமே என, பாராளுமன்றத்தில் உரையாற்றிய வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்

2030 இல், இந்தியா உலகின் மூன்றாவது பொருளாதார அபிவிருத்தி நாடாக உயரும். அந்நாட்டின் வர்த்தக சந்தை இலங்கைக்கு மிகவும் முக்கியமானதாக அமையுமென்றும் அவர் தெரிவித்தார்.

எமது நாட்டின் இறைமையைப் பாதுகாத்து நாட்டுக்கு பொருத்தமான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதே, நாட்டின் தற்போதைய தேவையாக உள்ளதென குறிப்பிட்ட அவர், எவருடைய பிரச்சினையிலும் நாம் தலையிட்டு பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை என்றும் தெரிவித்தார்.

எந்த நாட்டுடனும் பகைகளை ஏற்படுத்திக்கொள்ளாது அனைத்து நாடுகளுடனும் ஒற்றுமையாக பயணிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் செயற்படுகின்றதென குறிப்பிட்ட அமைச்சர், அனைத்து நாடுகளோடும் நல்லுறவை ஏற்படுத்தி செயற்படுவதே எமது முன்னேற்றத்திற்கு உறுதுணையாக அமையும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் இரண்டு கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்; காலத்துக்குக் காலம் ஒவ்வொரு கட்சிகளும் துறைமுக நகரம் தொடர்பான நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டுள்ளன. சர்வதேச ரீதியில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பொருளாதார நகரங்கள் காணப்படுகின்றன. அவற்றில் நூற்றுக்கும் மேற்பட்டவை துறைமுக நகரங்களாகும். இந்நிலையில், நாம் எமது வளங்களை பயன்படுத்தி எவ்வாறு வருமானத்தை அதிகரித்து வெளிநாட்டு முதலீடுகளை அதிகரித்துக் கொள்ள முடியும் என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். அரச வருமானத்தை அதிகரித்தாலேயே நாட்டை முன்னேற்ற முடியும். அரச சேவைக்கே தற்போது அதிகளவில் நிதியை செலவிட வேண்டியுள்ளது. இந்தியாவில் 107 பேருக்கு ஒருவர் என்ற ரீதியிலும் பாகிஸ்தானில் 101 பேருக்கு ஒருவர் என்ற ரீதியிலும், பங்களாதேஷில் 140 பேருக்கு ஒருவர் என்ற ரீதியிலும் அரச ஊழியர்கள் காணப்படுகின்றனர். ஆனால், இலங்கையில் 16 பேருக்கு ஒருவர் என்ற ரீதியில் அரச ஊழியர்கள் உள்ளனர்.

அரச வருமானத்தில் 80 வீதத்தை அரச சேவையை நடத்திச் செல்லவும், அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கவுமே பயன்படுத்தப்படுகின்றது. வரிகளை அதிகரித்தாலும் நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் கடனுக்கான வட்டிகளை அதிகளவில் செலுத்த வேண்டியுள்ளது. லெபனான், ஈரான், துருக்கி உள்ளிட்ட நாடுகளில் பணவீக்கம் அதிகரித்திருந்தன. லெபனான் போன்ற நாடுகளில் மின்வெட்டு நேரத்தைக்கூட கூற முடியாதளவுக்கு நிலைமை காணப்படுகிறது.

## லேக் ஹவுஸ் ஸ்தாபகர்...

பிறந்த தினம் இன்று (23.2.2023) ஆகும். அன்னாரின் பிறந்த தினத்தை முன்னிட்டு லேக் ஹவுஸ் நிறுவனத்தில் நேற்றிரவு விசேட பிரார்த்தனை நிகழ்வுகள் நடைபெற்றன. இன்றைய தினம் தான நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அமரர் டி. ஆர். விஜேவர்தன தொடர்பான விசேட கட்டுரையொன்று இன்றைய தினகரனில் 5 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

## A/L விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் ஒத்திவைப்பு

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் நேற்று (22) முதல் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், பணிகள் தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார். போதுமானளவு ஆசிரியர்கள் விண்ணப்பிக்காமையாலே, விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளுக்காக வழங்கப்படும் கொடுப்பனவு தொடர்பான சிக்கல் இதற்கு காரணமாகியுள்ளதாக அறிய முடிகிறது. க.பொ த.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளுக்காக வழங்கப்படும் கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு, அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அனுமதி கிடைத்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறினார்.

## சவால்களை ஏற்க பயந்தவர்களே...

நிலையில்தான், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சவால்களை ஏற்றார் என்றும் அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொழும்பு துறைமுக நகர முதலீடுகள் தொடர்பான சட்ட மூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே, இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நெருக்கடி நிலைமைகளில் பிரச்சினையின் பக்கம் நிற்காமல், தீர்வின் பக்கம் நின்று செயல்படுவதே முக்கியமாகும்.

வரலாறு தொட்டே, அதிகாரம் தொடர்பில் பேராசை தொடர்ந்து வருகிறது. இப்போதும் அது தொடர்கிறது. நாட்டின் தற்போதைய நிலைமையில், நாம் குரோதத்துடன் செயல்படாமல் ஒன்றிணைந்து செயல்படுவதே அவசியமாகும். அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டுமென நான் ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்கின்றேன். இதற்காக போட்டியிடுவதற்கு நான்கு பேர் உள்ளமை தெரிகிறது. இதன் போது வேலை செய்யக்கூடிய குழுவினருடன் இணைந்து செயல்பட முடியும். நாட்டை மேலும் அதல பாதாளத்தில் தள்ளும் அரசியலை விடுத்து, நாடு தொடர்பில் சிந்தித்து ஒன்றாக இணைந்து செயல்படுவது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசாங்க நிதி தெரிவுக் குழுவின்...

தெரிவுக் குழுவின் தலைவராக, பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவை நியமிக்குமாறு முன்வைக்கப்பட்ட பரிந்துரையை சபாநாயகர் ஏற்றுக் கொண்டுள்ளார். எனினும், இதுவரை அதற்கான அறிவிப்பு சபையில் இடம்பெறாதது ஏன்? என/ எதிர்க்கட்சி எம்.பி க்கள் சபையில் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார்.இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக் குழுவின் தலைவர் பதவி விடயம் தொடர்பில், தெரிவுக் குழு பேச்சுவார்த்தை நடத்தி ஒரு தீர்மானத்திற்கு வர வேண்டியுள்ளது. அவ்வாறு எட்டப்படும் தீர்மானத்துக்கு,

பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் செயற்படத் தயாரெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று (22) பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷவின் தலைமையில் கூடியது.

சபையில் இது தொடர்பில் நேற்று தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி ஹர்ஷ டி சில்வா, அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவர் பதவிக்கு எனது பெயரை பரிந்துரை செய்ததாகவும், அதனை சபாநாயகர் ஏற்றுக்கொண்டதாகவும் எதிர்க்கட்சியின் பிரதம கொரடா தெரிவித்தார்.

ஆனால், அது தொடர்பான அறிவிப்பு இதுவரை பாராளுமன்றத்தில் வெளியிடப் படவில்லை எனத் தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த அமைச்சர்,பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கு புறம்பாக தெரிவுக் குழுக்களை நியமிக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது. அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக் குழுவின் தலைவர் பதவிக்கு, எதிர்க்கட்சி தரப்பிலிருந்தே இருவரது பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சட்டவிரோத கடற்றொழிலில்...

இங்கு முன்வைத்தனர். இது தொடர்பாகவும் இக்கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது. இதேவேளை, இன்று 23,24,25 ஆகிய திகதிகளில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிழக்கு மாகாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார். கிழக்கில் மேற்கொள்ளப்படும் கடற்றொழில் செயற்பாடுகள் மற்றும் நீர்வேளாண்மை உற்பத்திகள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் அமைச்சர் கலந்துரையாடவுள்ளார். இந்நிலையில், கடற்றொழில் அமைச்சுக்கு நேற்று வருகைதந்த முன்னாள் அமைச்சர் மில்றோய் பெர்னான்டோ, சிநேகபூர்வமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தலுக்காக ஜே.வி.பி இதுவரை...

தசநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் மூன்று கூட்டங்களை அவர்கள் நடத்தியுள்ளதாகவும், ஒரு கூட்டத்துக்கு ஒரு கோடி ரூபா என்ற வகையில் மூன்று கோடி ரூபா இதற்காக செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக் குழு தொடர்பான சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

அந்தக் கட்சியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க, பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய நாளிலிருந்து ஒரு ரூபாவைக் கூட சம்பாதிக்கவில்லை. இந்நிலையில் ஒரு கூட்டத்திற்கு ஒரு கோடி ரூபா என்ற ரீதியில் செலவழிப்பதற்கு இவர்களுக்கு எங்கிருந்து நிதி வருகிறது என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

ரோஹண விஜேவீர மற்றும் ரணசிங்க பிரேமதாச ஆகியோர் அன்று மோதிக்கொண்டதைப் போல, இப்போதும் சஜித் பிரேமதாச அனுர திசநாயக்க ஆகியோர் மோதிக்கொள்கின்றனர். யார்? தேர்தல் நடத்துவதில்லை என்று கூறியது? மார்ச் (09) தேர்தல் நடைபெறும். தனது பகுதியில் உள்ள தெமோதர தமிழ் வித்தியாலயத்தில் வாக்களிப்பதற்கு தயாராகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## டலஸ், பீரிஸ் எம்முடன்...

மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டடார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது. கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழுவை அடிப்படையாக கொண்டு பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. பொருளாதார திட்டங்களை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக இடைநிறுத்தியதால் பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்துள்ளது.

கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியினர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர். கடற்பரப்பை மண்ணாலும், கற்களாலும் நிரப்ப வேண்டும். இந்த செயற்திட்டத்தை நிறைவு செய்யும் போது, நாட்டில் பாறை வளம் இல்லாமல் போகுமென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தெரிவித்தார்.

அவர் ஒரு பொய்யர் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவர். கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியில் கொழும்பு துறைமுக நகர பணிகள் வெற்றிகரமாக தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

அரசாங்கத்திலிருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் ஜீ.எல்.பீரிஸ் ,டலஸ் அழகபெரும போன்றவர்கள் தேர்தல் தொடர்பில் பேசுகின்றனர். மக்களாணை இருக்குமாயின் முதலில் அவர்கள் கிராமிய அபிவிருத்து சங்கத்தின் தேர்தலிலாவது வென்று காட்டாட்டும்.

நீங்கள் தனியாக கட்சியை அமைத்துள்ளீர்கள்.நீங்கள் எமது நண்பர்களே. எமது கட்சியிலிருந்து பிரிந்து வந்து உங்களுடன் இணைவார்கள் என்றே நினைத்தீர்கள். எங்களின் பொதுஜன பெரமுன அப்படியே இருக்கின்றது.

நண்பர்களே நீங்கள் மீண்டும் எங்கள் பக்கம் வாருங்கள். உங்களை மன்னிக்க நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். எங்களுடன் வாருங்கள் மீண்டும் இணைந்து செயற்படுவோம். உள்ளூராட்சித் தேர்தலுக்கு நாங்கள் கட்சி என்ற ரீதியில் தயாராக உள்ளோம்.திட்டமிட்ட வகையில் தேர்தலை நடத்தாவிட்டால் நாங்களும் பாரிய நெருக்கடிகளை எதிர்க்கொள்வோம். பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிட தயாராக உள்ளவர்கள் பாதிக்கப்படுவர்.இதனால், தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம் என்றார்.

## தமிழ் அரசியில் கைதிகள்...

குற்றசாட்டுகளுமின்றி இவர்களை (21) விடுதலை செய்துள்ளது.

21 சந்தேக நபர்களின் வழக்கு விசாரணையும் நேற்று கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. இதன்போது, சந்தேக நபர்கள் சார்பாக சட்டத்தரணி வி.எஸ் நிரஞ்சன் மற்றும் சட்டத்தரணி ரனித்தா ஞானராஜ் ஆஜராகியிருந்தனர். 21 தமிழ் அரசியல் கைதிகளும் 2014 ஆண்டு பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு, வவுனியா, கிளிநொச்சி, பூசா ஆகிய முகாம்களில் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டனர். பின்னர், சில மாதங்கள் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், சிறைக்கைதிகள் சிறைச்சாலையில் சாகும் வரை உண்ணாவிரத போராட்டம் மேற்கொண்டனர்.

இதன்போது அவர்களது உறவினர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் நாடு முழுவதும்,இவர்களது விடுதலைக்காக பல சாத்வீக போராட்டங்களை மேற்கொண்டனர்.இதன் காரணமாக 2015 2016 ஆண்டு பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில் 21 நபர்களும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் இந்நபர்களின் வழக்கு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரனைகளின் பின்னர் 21 பேரும் குற்றசாட்டுக்களின்றி அனைத்து வழக்குகளிலிருந்தும் விடுதலையாகினர்.

## இலங்கை இந்திய மீனவர்களது ...

நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் இரண்டு கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றிய சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி முன்வைத்த கருத்துக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

இலங்கையின் கடற்பகுதிக்குள் தினமும் 2,000 முதல் 3,000 இந்திய மீன்பிடிப்படகுகள் வருகின்றன. அவற்றை முழுமையாக தடுக்கக் கூடிய நிலை கிடையாதென எமது கடற் படையினர் தெரிவித்து வருகின்றனர்.

இதனைக் கவனத்தில் கொண்டே ''லைசென்ஸ் ''முறை மூலம் அந்தப் படகுகளின் வருகைகள் கட்டுப்படுத்தப்படவுள்ளன.

இந்த ''லைசென்ஸ் '' மூலம் கிடைக்கும் பணத்தை எமது மீனவர்களுக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு வருகிறது.

எவ்வாறெனினும், இழுவை மடி வலை மீன்பிடி நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் அனுமதி வழங்கப் போவதில்லை.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கைக்கு அண்மையில் வருகை தந்த போது, நாம் இதனைப்பற்றிப் பேசினோம்.அதே போன்று வெளிவிவகார அமைச்சிலும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவுடன் அதிகாரிகளையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.

வடக்கிலுள்ள மீனவர்களை பாதுகாக்க வேண்டும் என்பதே எமது முதலாவது பிரதான நோக்கம். இரண்டாவதாக எமது மீன் வளங்களை எவ்வித பாதிப்பும் இல்லாமல் பாதுகாக்க வேண்டும்.மூன்றாவதாக இதற்காக ஒரு நீண்டகால தீர்வு அவசியம்.இவற்றை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பது தொடர்பிலேயே தற்போது பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன.

இதில் ஒரு தீர்வாக இந்திய மீனவர்களுக்கு ''லைசென்ஸ் '' ஒன்று வழங்க வேண்டுமென அவர்கள் கூறுகின்றனர்.

அப்படி ''லைசென்ஸ் '' வழங்குவதென்றால் அவர்கள் எமது பகுதிக்குள் எவ்வளவு தூரத்திற்கு வரலாம். அந்த லைசென்ஸுக்கு பெற்றுக் கொள்ளும் பணத்தை எமது மீனவர்களுக்கு பிரித்துக் கொடுக்கலாமா? அதை எமது மீனவர்கள் ஏற்றுக்கொள்வார்களா? என்பது பற்றி நாம் கலந்துரையாடி வருகின்றோம். எமது மீனவர்களின் தேவைகளுக்குத்தான் முதலிடம் என்பதனை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அதேநேரம் இலங்கை இந்தியாவுக்கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தவும் முடியாது. அதனால்தான், இரு நாடுகளுக்கிடையில் சாத்தியமான கலந்துரையாடல் இடம்பெற்று ஒப்பந்தமொன்றுக்கு வரமுடியுமானால் ''லைசென்ஸ் ''வழங்கி இந்திய கடற்படை மூலம் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த முடியும்.அடுத்ததாக ஒரு தரப்புக்கு ''லைசென்ஸ் '' கொடுத்தால் ''லைசென்ஸ் '' இல்லாதவர்கள் வருவதற்கு ''லைசென்ஸ் '' உள்ளவர்கள் விடமாட்டார்கள்.இதன்மூலம் அவர்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைகளுக்கு வடக்கு மக்களின் பிரதிநிதிகளையும் அழைப்போம். வடக்கிலுள்ள தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துவோமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## தோட்ட தொழிலாளர்களுக்கு...

ஆணைக்குழு சட்டத்தின் இரண்டு கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

எவர் ஆட்சி செய்த போதும், எமது மலையக மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதில்லை. இருநூறு வருடங்களாக எமது மக்கள் பெரும் கஷ்டங்களுடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். உணவு பொருட்களின் விலையேற்றம், மின் கட்டண அதிகரிப்பு உள்ளிட்ட பிரச்சினைகளில் அவர்கள் சிக்கியுள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்கு அமைச்சரவையோ பாராளுமன்றமோ தீர்வை வைத்துள்ளதா? அவர்களின் காணிப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளதா? நாட்டில் அதிக வேலை செய்து குறைந்த சம்பளம் பெறும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை, எப்போது அதிகரிக்கப் போகின்றீர்கள் ? அவர்களுக்காக போராட்டத்தை நடத்துவதற்கும் எங்களை அர்ப்பணிப்பதற்கும் நாம் தயாராகவே உள்ளோம்.

வெள்ளிக்கிழமைக்குள் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும். அவர்களின் சம்பளத்தை 3,250 ரூபாவாக அதிகரிக்க வேண்டும். சம்பள நிர்ணய சபையின் ஊடாகவாயினும் அதனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முட்டையின் நிர்ணய விலை...

நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, முட்டைக்கு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டுப்பாட்டு விலையில் மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபாரிகள் இலாபமீட்ட முடியாதுள்ளதாலேயே, முட்டைக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை அகில இலங்கை கறிக்கோழி உற்பத்தியாளர் சங்கத் தலைவர் அஜித் குணசேக்கர தெரிவித்துள்ளார். இதையடுத்து, முட்டை தட்டுப்பாட்டை நிவர்த்திக்க முட்டைகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர்,குறிப்பிட்டுள்ளார். முட்டை பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்கப்படாவிடின்,எதிர்வரும் சில நாட்களில் அனைத்து ஹோட்டல்களும் மூடப்படுமென அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத்தும் தெரிவித்துள்ளார்.

## ஜனநாயகத்தை அச்சுறுத்தும்...

உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.இங்கு கருத்து தெரிவித்த அவர்,

நமக்கு வழிகாட்டிய லிபரல்வாத, ஜனநாயகவாத தலைவர்கள் இப்போது எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள். கட்டுப்பணத்தை ஏற்றுக் கொள்ள வேண்டாமென அமைச்சரவை தீர்மானம் எடுத்து, மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு கடிதங்களும் அனுப்பப்பட்டன. வேறு எந்தவொரு நாட்டிலும் இப்படி நடக்கவில்லை. பாராளுமன்றத்தில் இது குறித்து கேள்வி எழுப்பினால், அவ்வாறானதொரு அமைச்சரவை தீர்மானம் மேற்கொள்ளவில்லை என பிரதமர் கூறுகிறார்.

இது, ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள பாரிய தாக்குதலாகும். மக்களின் இறையாண்மைக்கு எதிராக அரசியல் ரீதியான தீர்மானங்களை எடுப்பது சர்வதிகார போக்காகும். மக்கள் அபிப்பிராயம் மற்றும் மக்கள் ஆணையை குறைத்து மதிப்பிட வேண்டாமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசின் உத்தரவாத விலைக்கு...

இதன்படி, ஒரு கிலோ உலர்ந்த நெல் 100 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுகிறது. விவசாயி ஒருவரிடமிருந்து குறைந்தபட்சம் 2,000 கிலோ நெல் கொள்வனவு செய்யப்படும். அதேவேளை, அதிகபட்சமாக 5,000 கிலோ நெல்லும் அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது.

இம்முறை, அம்பாறை மாவட்டத்தில் செய்கை பன்னப்பட்ட 81,000 ஹெக்டேயர் நெற்செய்கையில், சுமார் 03 இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றுள் சுமார் 25 சதவீத அறுவடை நெல்லை அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்ய உத்தேசித்திருப்பதாகவும் அம்பாறை மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. கலீஸ் இதன்போது தெரிவித்தார்.

## மைத்திரியின் மேன் முறையீடு...

தமக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து வழக்குகளையும் நிராகரித்து, அவ்வழக்குகளிலிருந்து தன்னை விடுவிக்குமாறு கோரியே, மைத்திரிபால சிறிசேன இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட இருந்தது. எனினும், மேல்மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி, உத்தரவை வெளியிடுவதை மார்ச் (01) ஒத்திவைத்தார். உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலைத் தடுப்பதற்கு,புலனாய்வுப் பிரிவினருக்கு போதியளவு தகவல் கிடைத்திருந்தது.இருந்தபோதும், நடவடிக்கை எடுக்கத் தவறியதற்காக, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோருக்கு எதிராக பாதிக்கப்பட்டவர்கள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் 108 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர்.

## சொந்தக் காணியை...

இடமாகக் கொண்ட வரதா சண்முகநாதன் என்பவரே,இப்புண்ணிமிக்க செயலைப் புரிந்துள்ளார்.

ஒன்பது குடும்பங்களுக்கு தலா 02 பரப்பு வீதம்,காணியைப் பகிர்ந்தளித்துள்ளார். இக்காணிகளிக் உறுதிகளை இவர்களுக்கு வழங்கும் நிகழ்வு, கடந்த சனிக்கிழமை (18) மேலைக் கரம்பொன் முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் கிராம சேவையாளர் புருசோத்தமன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில், வரதா சண்முகநாதனை பின்பற்றி புலம்பெயர் நாடுகளில் வாழ்பவர்கள் காணியற்றோருக்கு உதவ வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

## புத்தல, வெல்லவாய...

அண்மித்த இடத்தில், 07 கிலோமீற்றர் ஆழத்தில், இலங்கை நேரப்படி 11.44 அளவில் இந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாக புவிசரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில், பொதுமக்கள் அச்சமடைய தேவையில்லையென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கோரியுள்ளது.

இதேவேளை, கடந்த (10) நாட்டின் தென்கிழக்கு நகரங்களில் 3.0 மெக்னிடியூட் அளவில் சிறிய நில அதிர்வு ஏற்பட்டது. எனினும், இதனால் எந்த ஆபத்துகளும் ஏற்பட்டிருக்கவில்லை. இது ஓர் அதிர்வு மட்டுமே, பூகம்பமல்ல" என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன் Business

# வெப் 3 இணைய முதலீட்டுக்கு வாய்ப்பு எப்ஏபிசி கிளை இலங்கையில் அறிமுகம்



இலங்கையில் உள்ள நான்கு பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களை தெரிவு செய்து அவர்களுக்கு வெப் 3 தொடர்பான அறிவூட்டல் பயிற்சி நெறி, எதிர்கால சந்ததியினர் கணினி வலையமைப்பின் ஊடாக முதலிட்டு நாட்டுக்கு வருமானத்தை பெறும் புதிய முதலீட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளதாக எக்ஜிக்கா நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் டாக்டர் ஹில்மி தெரிவித்தார்.

சப்பிரகமுவ, களனி, கிழக்கு மற்றும் ஊவா ஆகிய பல்கலைக்கழகங்களுக்கும் எக்ஜிக்கா நிறுவனத்திற்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ளதாக தெரிவித்த அவர், இலங்கையில் கல்வி கற்கும் 10 ஆயிரம் பட்டதாரி மாணவர்கள் வெப் 3 பயிற்சி நெறியினை வழங்க உள்ளதாகவும் கூறினார்.

மேற்படி பயிற்சி நெறிகள் இணையத்தளம் ஊடாக தற்போது நடைபெற்று வருவதாக தெரிவித்த அவர், ஒரு மாத காலத்தின் பின்னர் சிறந்த 30 மாணவர்களை தெரிவு செய்து துபாயில் வேலைவாய்ப்பு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். துபாயில் உள்ள வெப் 3 கம்பனி துபாய் நகரை மையமாகக் கொண்டு இயங்கி வருவதுடன் இலங்கையில் எக்ஜிக்கா என்ற பெயரில் கிளை நிறுவனமாக தனது சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இரு நிறுவனங்களுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை அண்மையில் ஹில்டன் ஹோட்டலில் கைச்சாத்திடப்பட்டது. அவ்வாறே, மாணவர்களுக்கு சிறந்த வெப் 3 பிளக் செயின் கனனி அறிவு, வெப் டிசைன், சந்தைப்படுத்துதல், களஞ்சியம், வங்கி, கணக்கியல், கட்டிட நிர்மாணம், போன்ற பலதுறைகளில் வெப் 3 கட்டமைப்பு செயற்பட உள்ளதாகவும் கம்பனியின் நிறைவேற்று அதிகாரி சக்தி விஸ்கன் ராஜகரு தெரிவித்தார்.


## என்ரஸ்ட் செக்கியூரிட்டீஸ் பிஎல்சி
**கம்பனியின் பதிவு இல - PB 173**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவுகளிற்கு அமைவாக கம்பனி கலைப்பு அறிவித்தலும் கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தலும்

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : என்ரஸ்ட் செக்கியூரிட்டீஸ் பிஎல்சி |
| பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி | : தேசிய சேமிப்பு வங்கி<br>இல. 255, காலி வீதி,<br>கொழும்பு--03<br>மற்றும்<br>இல. 431/A2, இ. டபிள்யூ.<br>பெரேரா மாவத்தை<br>புறக்கோட்டை |
| நீதிமன்றம் | : வர்த்தக உயர் நீதிமன்றம்<br>மேல் மாகாணம் கொழும்பு<br>(குடியியல்) |
| வழக்கு இல | : 83/2021/CO |
| நீதிமன்ற கட்டளைத் திகதி | : 17.06.2022 |
| கோரிக்கை தாக்கல் செய்த திகதி | : 01.11.2021 |
| கம்பனி கலைப்பாளரின் பெயர் முகவரி | : Gerard Jeevananthan David<br>Chartered Accountant<br>SJMS Associates<br>Level 03, No. 11, Castle Lane<br>Colombo-4 |
| அமுலாக்கப்பட்ட நியமன திகதி | : 01-02-2023 |


# இலங்கையில் அல்சைமர் நோயை இல்லாதொழிக்க AIA இன்ஷூரன்ஸ்

## LAF நிறுவனத்துடன் கைகோர்ப்பு



AIA லங்கா அல்சைமர் மற்றும் வேறு வகையான ஞாபக மறதி நோய்களுக்கான விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கில் லங்கா அல்சைமர் பவுண்டேசன் நிறுவனத்துடன் கூட்டிணைப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆசியாப் பிராந்தியத்தில் 2050 ஆம் ஆண்டளவில் இலங்கையின் சனத்தொகையில் கிட்டத்தட்ட அரை மில்லியன் மக்கள் ஞாபக மறதியுடன் தொடர்புடைய நோய்களினால் பாதிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமிருப்பதாக ஆய்வொன்றில் மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் ஒரு பொறுப்பு வாய்ந்த பெறுநிறுவனம் என்ற வகையில் AIA இன்ஷூரன்ஸ் அந்த நோயின் அபாயத் தன்மையினை அறிந்து கொண்டுள்ளமையினால் இலங்கை மக்கள் அனைவரும் நீண்ட ஆயுளுடன், ஆரோக்கியமாக, சிறந்த வாழ்க்கையினை வாழ்வதற்கு உதவுவதை நோக்காகக் கொண்டு மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. இந்த நோக்கத்திற்காக AIA இன்ஷூரன்ஸ் LAF நிறுவனத்திற்கு தனது நன்கொடையினை வழங்கியுள்ளதுடன், அல்சைமர் நோயினை ஆரம்பத்தில் கண்டறிதல் மற்றும் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகளையும் மற்றும் விழிப்புணர்வையும் அதிகரிக்கும் நோக்கில் தனது முழுமையான ஆதரவினையும் LAF இற்கு வழங்கியிருக்கின்றது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் AIA மேற்கொண்டுள்ள பல பங்களிப்புகளில் இந்த சமூக உதவியும் ஒன்றாகும்.

## பிரதேச அபிவிருத்தி வங்கியின் புதிய தலைவர் நியமனம்



நாட்டின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஏழாவது தலைவராக சுதத் சில்வா நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டு பதவியேற்றுக் கொண்டார். இவர் இலங்கை பொற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் உட்பட பல முக்கிய பதவிகளை வகித்தவராவார்.

கூட்டாண்மை அறிக்கையிடல்

# 100 பொது நிறுவனங்களில் யூனியன் வங்கிக்கு 14ஆவது இடம்




கூட்டாண்மை அறிக்கையிடலில் சிறப்பை பேணியமைக்காக யூனியன் வங்கி, சிறந்த 100 பொது வரையறுக்கப்பட்ட நிறுவனங்களில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்காக, ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்காவினால் (TISL) முன்னெடுக்கப்பட்டிருந்த கூட்டாண்மை அறிக்கையிடல் மதிப்பீட்டின் பெறுபேறினூடாக இந்த உயர் கௌரவம் யூனியன் வங்கிக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த கௌரவிப்பு வழங்கப்பட்ட 100 நிறுவனங்களில் 14 ஆம் இடத்தை யூனியன் வங்கி பெற்றுக் கொண்டதுடன், கூட்டாண்மை அறிக்கையிடலில் வெளிப்படைத்தன்மையை பேணியிருந்தமைக்காக மொத்தமாக வழங்கப்பட்ட 10 புள்ளிகளில் 8.39 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது. நிறுவனசார் வெளிப்படைத்தன்மையில் முழுமையான வெளிப்படுத்தலைக் கொண்டுள்ளதாகவும், மோசடி தவிர்ப்பு மற்றும் உள்ளக நிதி அறிக்கையிடல் ஆகியவற்றில் பெருமளவு வெளிப்படைத்தன்மையை கொண்டுள்ளதாகவும் தரப்படுத்தப்பட்டிருந்தது. வெளிப்படையான கூட்டாண்மை அறிக்கையிடல் மதிப்பாய்வு 2022 என்பது, இலங்கையின் சிறந்த 100 பொது வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் மத்தியில் சுயாதீனமான முறையில் TISL இனால் மேற்கொள்ளப்படும் கூட்டாண்மை வெளிப்படுத்தல் தொடர்பான மதிப்பாய்வாக அமைந்துள்ளது.


ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board

செவ்வாய்க்கிழமை 2023.02.21 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத் — சீட்டிழுப்பு இலக்கம் 5038 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 36,149,100.00 — ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 0 4 6 7 9 4

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 347 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,627,606.00 — வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 01 08 23 54 — விசேட இலக்கினம் தனுசு

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1386 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 302,161,722.00 — ஆங்கில எழுத்து J — சுப்பர் இலக்கம் 20 — வெற்றி இலக்கங்கள் 25 28 61 76 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1493 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,101,294.80 — வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 7 1 2 4 2 0

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3280 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,653,519.20 — ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 29 56 61 76

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1068 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,602,606.80 — ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 12 13 24 44


# புதிய விக்ராந்த் – 2 விமானந் தாங்கியை உருவாக்க இந்தியா முடிவு

## பிரமாண்டமான மூன்றாவது கப்பலும் கட்டப்படவுள்ளது

இந்தியாவிலேயே முற்றிலுமாகக் கட்டப்பட்ட விமானந்தாங்கிக் கப்பலான ஐ.என்.எஸ்.விக்ராந்த், கடந்த செப்டம்பரில் வெள்ளோட்டம் விடப்பட்ட நிலையில், இக்கப்பலை விட மேலும் பெரிய விமானந்தாங்கிக் கப்பலைக் கட்டுவதற்கு இந்தியக் கடற்படை தீர்மானித்துள்ளது.

இந்தியாவின் முதலாவது விமானந்தாங்கிக் கப்பலான விக்கிரமாதித்யா சேவையில் இருந்து ஓய்வுபெறவுள்ள நிலையில் புதிய கப்பலின் தேவை உணரப்பட்டிருப்பதாக கடற்படைத் தளபதி ஆர்.ஹரி குமார் தெரிவித்துள்ளார். கடந்த வாரம் நடைபெற்ற ஏரோ இந்தியா விமான கண்காட்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரையில், விக்ராந்த் அளவு விமானந் தாங்கியை கொச்சின் கப்பல் கட்டும் தளத்தில் எட்டு வருட காலத்தில் கட்டி முடிக்க முடியுமெனவும் அது 65,000 தொன் நிறை கொண்டதாகவும், புதிய தொழில்நுட்ப பயன்பாடுகளை உள்ளடக்கியதாகவும் இருக்குமென அவர் குறிப்பிட்டார்.

இதே சமயம் விக்ராந்தை விட நீளத்திலும் அகலத்திலும் பெரிதான நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய ஒரு விசாலமான விமானந்தாங்கிக் கப்பலை உருவாக்கும் எண்ணம் கடற்படைக்கு உள்ளதெனவும் ஆனால் அதன் பிரமாண்டம் காரணமாக அதை உருவாக்கக் காலம் எடுக்கும் என்பதாலேயே விக்ராந்த் அளவு கப்பலை உடனடியாகக் கட்டத் தீர்மானமானதாக தெரிய வருகிறது.

ஐ.என்.எஸ். விக்ரமாதித்யா 2020 முதல் பழுது பார்க்கப்பட்டு வருகிறது. விரைவில் அது மீள் வெள்ளோட்டம் விடப்படும். இதே சமயம் வெள்ளோட்டம் விடப்பட்ட விக்ராந்த் தற்போது பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.


நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சு

**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**கண்டி, ரஜபிஹில்லவிலுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் சுற்றுலா விடுதிக்கான புதுப்பித்தல் - I ஆம் கட்டம்**

ஒப்பந்த (விலைமனு) இலக்கம்: 1473/22

1. பெசேவ நீங்கலாக 25.3 மில்லியன் ரூபாவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் கீழே விபரிக்கப்பட்டதுமானதும் கண்டி, ரஜபிஹில்ல, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் சுற்றுலா விடுதிக்கான I ஆம் கட்ட புதுப்பித்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

   இப்பணியானது இடித்தல் வேலை, அகழ்தல், கொன்கிறீட் வேலை, மேசன் வேலை, நீர் உட்புகாத கட்டமைப்பு, உலோக வேலை, மர வேலை, கூரை மூடுதல் மற்றும் கூரை குழாய் இணைத்தல் வேலை மற்றும் சுகாதார நிறுவுதல் வேலை, மின்னியல் வேலை, மெருகூட்டல் மற்றும் பெயிண்ட் பூசுதல் ஆகியன அடங்கலான தற்போதுள்ள கட்டிடத்தின் நிர்மாணம் மற்றும் பழுது பார்த்தல் வேலைகள். நிர்மாணக் காலப்பகுதியானது 91 நாட்களாகும்.

2. ''விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும. இந்த பெறுகையின் கீழான நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியானது பெசேவ மற்றும் ஏனைய வரிகள் நீங்கலாக 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், 04/2016 (iii) என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன பிரயோகப்படுத்தப்படும்''.

3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.

   நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் சி-5 அல்லது சி-4 தரத்தில் கட்டிட நிர்மாணத்திற்காக செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவைக் கொண்டிருப்பதுடன் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழான பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு அமைந்திருத்தல் வேண்டுமென்பதுடன் ஆனால் மட்டுப்படுத்தப்பட மாட்டாது.
   - அ. கடந்த 10 வருடங்களில் நிகரான தன்மையில் ஆகக் குறைந்தது 02 செயற்றிட்டங்களின் நிர்மாணம் அல்லது புதுப்பித்தல் அனுபவம். ஒவ்வொரு செயற்றிட்டத்தின் ஆகக் குறைந்த ஆகுசெலவானது 19.00 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - ஆ. கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட வருடாந்த நிர்மாண வேலையின் சராசரிப் பெறுமதியானது ஆகக் குறைந்தது 38.0 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - இ. திரவச் சொத்துக்கள் மற்றும்/அல்லது கடன் வசதிகள் 25.30 மில்லியன் ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும். கடந்த சமீபத்திய 3 வருடங்களுக்கான நிதியிடல் திடநிலையை (கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கீடுகள்) ஆதாரப்படுத்துவதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் (2019/2020, 2020/2021, 2021/2022).

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பெற்று எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் கொழும்பு-02,தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, 3 ஆம் மாடியின் (ES & C) பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். (தொலைபேசி: 0112389510. தொலைநகல்: 0112438130)

6. 2023.02.23 ஆம் திகதியிலிருந்து 2023.03.15 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000 ரூபாவை மேலே குறிப்பிட்டுள்ளவாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், கொழும்பு-02, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, 3 ஆம் மாடி, **(ES&C)** பிரதி பொது முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணவைப்பாகவேயிருத்தல் வேண்டும்.

7. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2023.03.16 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியான பிரதி பொது முகாமையாளர் **(ES&C)**, 3 ஆம் மாடி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு-02 என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

8. விலைமனுக்கள் அவைகளை சமர்ப்பித்தலுக்கான இறுதி திகதியிலிருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. அனைத்து விலைமனுக்களும் 253,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2023.07.12 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
   - அ. ரஜபிஹில்ல தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் சுற்றுலா விடுதியில் 2023.03.10 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்றும் தளவிஜயமும் ஒழுங்கு செய்யப்படும்.
   - ஆ. இந்த விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு விலைமனுதாரரின் நியமிக்கப்பட்ட பிரதிநிதியானவர் சமுகமளிப்பதற்கு அழைக்கப்படுகின்றார்.
   - இ. கூட்டத்திற்கு முடிந்தளவில் ஒரு வாரத்திற்கு குறையாத காலப்பகுதியில் தொழில் வழங்குநரை வந்தடையும் தன்மையில் எழுத்து மூலமாக அல்லது தொழில்நகலூடாக எந்தவொரு வினாக்களையும் அனுப்புமாறு விலைமனுதாரர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
**கொழும்பு-02.**

# கிழக்கின் குரல்



## அம்பாறை மாவட்டத்தில் உத்தரவாத விலையில் நெல் கொள்வனவு ஆரம்பம்

அட்டாளைச்சேனை தினகரன், வாச்சிக்குடா, ஒலுவில் விசேட நிருபர்கள்



அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 20222023 பெரும்போக நெற்செய்கையாளர்களிடமிருந்து அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கு நெல் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ள இவ்வேலைத்திட்டத்தில் முதற்கட்டமாக சம்மாந்துறை பிரதேசத்தில் விவசாயிகளிடமிருந்து நேற்று முன்தினம் (21) நெல் கொள்வனவு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, நேற்று (22) அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகளிடமிருந்து உத்தரவாத விலைக்கு நெல் கொள்வனவு செய்யும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அக்கரைப்பற்று, சம்மாந்துறை முறையே தெரிவு செய்யப்பட்ட 3 அரிசி ஆலைகளினூடாக நெல் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது. விவசாயியொருவரிடமிருந்து குறைந்த பட்சம் 2,000 கிலோகிராம் நெல்லும் அதிக பட்சம் 5,000 கிலோகிராம் நெல்லும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, ஒரு கிலோகிராம் உலர்ந்த வெள்ளை சிவப்பு நாடு நெல் 100 ரூபா உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யப்படுவதாக, அம்பாறை மாவட்ட விவசாய பணிப்பாளர் எம்.எஸ். ஏ.கலீஸ் தெரிவித்தார். அத்துடன், உரிய தரத்தில் இல்லாத வெள்ளை சிவப்பு நாடு நெல் ஒரு கிலோகிராம் 88 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் 81 ஆயிரம் ஹெக்டேயரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் அறுவடை கிடைக்குமென்று எதிர்பார்ப்பதுடன், சுமார் 25 சதவீத அறுவடை நெல்லை உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்வதற்கு உத்தேசித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

நெல்லின் ஈரப்பதன் 14 சதவீதத்துக்கு குறைவாகவும் நெற்புதரின் அளவு 9 சதவீதத்துக்கு குறைவாகவும் இனக்கலப்பு நெல் 6 சதவீதத்துக்கு குறைவாகவும் இருக்க வேண்டுமென்பதுடன், கிருமிநாசினி மற்றும் சேறு அற்றதாகவும் நெல் காணப்பட வேண்டுமெனவும் விவசாயிகளுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் நெல்லுக்கு அரச வங்கிகளினூடாக 24 மணித்தியாலங்களுக்குள் பணம் வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யப்படும் நெல் அரிசி பொதி செய்யப்பட்டு வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கு இலவசமாக அரசாங்கத்தினால் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் வாராந்தம் சுமார் 100 பேருக்கு டெங்கு பாதிப்பு

மட்டக்களப்பு விசேட நிருபர்



மாரி காலம் முடிவடைந்துள்ள போதிலும், தற்போது இடைக்கிடையில் பெய்து வரும் மழையினால் டெங்கு நுளம்புகள் பெருகுவதுடன், டெங்குக் காய்ச்சல் பரவி வருவதாக, மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுகுணன் குணசிங்கம் தெரிவித்தார்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் வாராந்தம் 100 பேருக்கு மேற்பட்டோர் டெங்கு நோயினால் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்த அவர், தொடர்ந்து 3 நாட்களுக்கு காய்ச்சல் நீடித்தால், உடனடியாக இரத்தப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டுமெனவும், தெரிவித்தார்.

கடந்த 17ஆம் திகதி செங்கலடியைச் சேர்ந்த இளைஞரொருவர் டெங்கு நோய்த் தொற்றுக்குள்ளாகி காலதாமதமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமானார்.

ஆகையினால், டெங்கு நுளம்புகள் பரவாமல் தமது சுற்றுச்சூழலை பொதுமக்கள் துப்புரவாக வைத்திருக்குமாறும், அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மூவாயிரம் பேருக்கு உணவுப் பொதிகள்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி சுகாதார வைத்தியதிகாரி பணிமனைப் பிரிவில் போசாக்குக் குறைபாட்டை எதிர்நோக்கியுள்ள 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை வைத்திருக்கும் 171 பேருக்கு தலா 15,000 ரூபா பெறுமதியான போசாக்கு உணவுப் பொதிகள், சமரிடன் பேர்ஸ் சர்வதேச நிவாரண நிறுவனத்தினால் நேற்று (22) வழங்கி வைக்கப்பட்டன.

ஆரையம்பதி பிரதேச சுகாதார வைத்தியதிகாரி, வைத்தியர் இ. உதயகுமார் தலைமையில் இவ்வுணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் சமரிடன் பேர்ஸ் சர்வதேச நிவாரண நிறுவனத்தினால் போசாக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருவதுடன், சுமார் 3,000 போசாக்கு உணவுப் பொதிகளை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளதாக, மேற்படி நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி எஸ்.ரமணதாஸ் தெரிவித்தார்.

## கல்முனை தரவைச் சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம்

### இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்



487 ஆண்டுகள் பழமையான கல்முனை தரவைச் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகிறது. இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் வருடாந்த உற்சவம், மார்ச் மாதம் ஆறாம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறும்.

12 நாட்கள் நடைபெறும் இந்த உற்சவத்தின், ஐந்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முத்துச்சப்பர பவனி நடைபெறும்.

இந்த உற்சவ காலத்தில் நடைபெறும் விசேட பூஜை வழிபாடுகளுடன், தினமும் மாலை 6 மணி தொடக்கம் 6:30 வரையும், கல்முனை 03 பண்ணிசை மன்றத்தினரின் கூட்டுப்பிரார்த்தனை இடம்பெறும். அதே நேரம், இரவு ஆறு முப்பதிலிருந்து 7 மணி வரையும் தெய்வீகப் பேருரைகள் இடம் பெற இருக்கின்றன.

உற்சவ காலத்தின் பிரதம குருக்களாக சிவ ஸ்ரீ மா. கு. சதாசிவ குருக்கள், சிவஸ்ரீ முத்துக்குமார குருக்கள் ஆகியோர்கள் பணியாற்றுவார்கள். ஆலய பிரதம குரு, இளம் சைவப்புலவர் விஷ்வ பிரம்மஸ்ரீ சு. ஹரிஹரன் அவர்களும் பணிகளில் ஈடுபடுவார். மகோற்சவத்தின் இறுதி நாளான எதிர்வரும் ஆறாம் திகதி நல்லம்மா பூபால பிள்ளை அவர்களினால் வழங்கப்படும் அன்னதானம் இடம்பெறும்.

## வீதியில் ரூ. 5 இலட்சத்தை கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்த இளைஞர்

ஒலுவில் விசேட நிருபர்



வர்த்தகரொருவர் தொலைத்த 5 இலட்சம் ரூபா பணத்தை வீதியிலிருந்து கண்டெடுத்த இளைஞரொருவர், உரியவரிடம் ஒப்படைத்த சம்பவம், அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேசத்தில் நேற்று முன்தினம் (21) இடம்பெற்றுள்ளது.

கல்முனை பிரதேசத்திலுள்ள அரச வங்கியொன்றில் 35 இலட்சம் ரூபா பணத்தை வைப்பிலிடுவதற்கு மேற்படி வர்த்தகர் சென்றுள்ளார். பணத்தை வைப்பிலிடுவதற்கு வர்த்தகர் தயாராகிய போது, அவர் கொண்டு சென்ற பணத்தில் 5 இலட்சம் ரூபா காணாமல் போயிருந்ததை அவதானித்துள்ளார்.

இது தொடர்பாக வங்கி முகாமையாளருக்கு வர்த்தகர் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து, வங்கியின் அருகிலிருந்த சி.சி.ரி.வி. கமெராப் பதிவை பார்வையிட்ட போது, வர்த்தகர் தொலைத்த பணத்தை இளைஞரொருவர் எடுத்துச் செல்வது தெரியவந்துள்ளது. இப்பணம் தொலைந்தமை தொடர்பாக கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்காக வர்த்தகர் சென்ற அதேவேளை, அப்பொலிஸ் நிலையத்துக்கு அப்பணத்தைக் கண்டெடுத்த இளைஞரும் அப்பணத்துடன் வருகை தந்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலையை சேர்ந்த இளைஞரே இப்பணத்தைக் கண்டெடுத்து பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கு பொலிஸ் நிலையத்துக்கு வந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீரூடாக உரிய வர்த்தகரிடம் அவரது காணாமல் போன பணம் ஒப்படைக்கப்பட்டது.

அத்துடன், உண்மையுடன் நடந்து கொண்ட இளைஞரை வர்த்தகரும் பொலிஸாரும் பாராட்டியுள்ளனர்.

## அன்னமலை மகா வித்தியாலயத்தில் முதல் பெண் அதிபர் நியமனம்

காரைதீவு குறூப் நிருபர்



அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை வலயத்துக் குட்பட்ட நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தின் 87 வருட வரலாற்றில் முதல் பெண் அதிபராக நிலந்தினி ரவிச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

1936ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில், அவர் தனது கடமைகளை நேற்று முன்தினம் (20) பொறுப்பேற்றுக்கொண்டார். இப்பாடசாலையின் அதிபராக ஏற்கெனவே இருந்து வந்த சீ.பாலசிங்கன் அண்மையில் ஓய்வு பெற்றதை அடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை வலய கல்வி பணிமனையின் பிரதி கல்வி பணிப்பாளர் எம்.வை. யாசிர் அரபாத், கோட்ட கல்வி பணிப்பாளர் பி.பரமதயாளன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## பொத்துவில் வைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்கள் வழங்கல்

பாலமுனை விசேட நிருபர்



அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் அவசரத் தேவையாகக் காணப்பட்ட ஒரு சில மருந்துப் பொருட்களை பொத்துவில் ஜெஸ்பா மருந்தகம் நேற்று முன்தினம் (21) இலவசமாக வழங்கி வைத்துள்ளது.

வைத்தியசாலையில் வைத்து இம்மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டதுடன், வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் எம்.ஐ.எம். றகீமிடம் இம்மருந்துப் பொருட்களை ஜெஸ்பா மருந்தக உரிமையாளர் எம்.எச்.எம்.ஜெஸிருல் லாபி கையளித்துள்ளார்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தினர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, தனது சொந்த நிதியிலிருந்து இம்மருந்துப் பொருட்களை ஜெஸ்பா மருந்தக உரிமையாளர் வழங்கியுள்ளார்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்களை வழங்கி உதவி செய்த ஜெஸ்பா மருந்தக உரிமையாளருக்கு வைத்தியசாலை நிர்வாகத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர்.

## மட்டக்களப்பில் உணவகங்களின் தரத்தை பரிசீலிக்க வேண்டுகோள்



மட்டக்களப்பு விசேட நிருபர்

பொதுமக்களின் சுகாதார நலனைக் கருத்திற்கொண்டு மட்டக்களப்பு மாநகர சபையினால் தரப்படுத்தப்பட்டுள்ள உணவகங்களில் சுகாதார நிலைமையை பரிசீலனை செய்யுமாறு, சுகாதார நிலையியல் குழு உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான சுகாதார நிலையியல் குழுவின் முதலாவது கூட்டம் நேற்று (22) கூட்ட மண்டபத்தில் அதன் தலைவர் சிவம் பாக்கியநாதன் தலைமையில் நடைபெற்ற போதே, அவர்கள் இவ்வேண்டுகோளை முன்வைத்துள்ளனர்.

தற்போது மின்கட்டணம் உயர்வடைந்துள்ளதைத் தொடர்ந்து உணவுகளின் விலை அதிகரித்துக் காணப்படுவதினால், உணவகங்களின் தரம் அவசியமாக பரிசீலிக்கப்பட வேண்டுமெனவும், சுகாதார நிலையியல் குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

## நன்னீர் தடாக மீன்வளர்ப்பு விநாயகபுரத்தில் ஊக்குவிப்பு

காரைதீவு குறூப் நிருபர்



அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் மீன் வளர்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் விநாயகபுரம் 03 கிராம அலுவலர் பிரிவிலுள்ள குளமொன்றில் 28,000 மீன் குஞ்சுகள் கடந்த திங்கட்கிழமை (20) விடப்பட்டன.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் நன்னீர் தடாக மீன் வளர்ப்புத் திட்டம், நாடளாவிய ரீதியில் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் அப்பிரதேச செயலாளர் த.கஜேந்திரனின் வழிகாட்டலின் கீழ் இத்திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுடன் இணைந்து மீன் குஞ்சுகள் குளத்தில் விடப்பட்டன.

திருக்கோவில் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினுடைய கைத்தொழில் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.ரவிந்திரன் இத்திட்டத்தை ஒழுங்குபடுத்தினார்.

இந்நடவடிக்கையில் இணைந்து திருக்கோவில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா, கிழக்கு மாகாண மீன்பிடி பிரிவின் மாவட்ட நீரியல் வள உத்தியோகத்தர் அ.ராஜிதன் உள்ளிட்டோர் தமது பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

## வரிப்பண மோசடி மீது விசாரணை தேவை

### இ.ம.கா. கல்முனை அமைப்பாளர்

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

கல்முனை மாநகரசபை நிதிப் பிரிவில் வரிப்பணம் மோசடி செய்யப்பட்டமை தொடர்பாகக் கண்டறிந்து, அப்பிரிவில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் சிலர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக தான் அறிவதாக, அம்மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனை அமைப்பாளருமான எம்.ஐ.எம்.அப்துல் மனாப் தெரிவித்தார்.

மேலும், வரிப்பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக விசாரணை மேற்கொள்வது பொருத்தமானதாக அமையுமெனவும், அவர் தெரிவித்தார்.

கல்முனையில் கடந்த திங்கட்கிழமை (20) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"2019ஆம் ஆண்டில் கல்முனையில் 100 மீற்றர் நீளமுடைய வீதிக்கு 75 மின்விளக்குகள் பொருத்தியதாகத் தெரிவித்து இடம்பெற்ற ஊழல் அடங்கலாக திரும்பும் திசைகளெல்லாம் ஊழல் நிறைந்தே காணப்படுகின்றது. மோசடி செய்தவர்களை கல்முனை ஆணையாளர் அடையாளம் கண்டு, பணி இடைநிறுத்தம் செய்தமை வரவேற்கப்பட வேண்டியதாகும்" என்றார்.

பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் மக்கள் வரிப்பணத்தை செலுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.




# வலி வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளை பொறுப்பேற்குமாறு உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்

*யாழ்.விசேட நிருபர்*



வலி வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளை உரிமையாளர்கள் கையேற்பதில் தயக்கம் காட்டுவதாக யாழ்.மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த சில வாரங்களுக்கு முன் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட காங்கேசன்துறையில் இராணுவத்தினரிடமிருந்தும் கடற்படையினரிடமிருந்தும் 108 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டது.

விடுவிக்கப்பட்ட இடங்களிலுள்ள காணி உரிமையாளர்கள் தங்களுடைய காணிகளை முழுமையாக கையேற்காத நிலைமை காணப்படுகிறது. விடுவிக்கப்பட்ட பகுதியிலுள்ள தமது காணிகளை கையேற்று, உரிய பாவனைக்குட்படுத்தினால் மாத்திரமே தொடர்ச்சியாக காணிகளை விடுவிப்பதற்கு உதவியாக இருக்கும். விடுவிக்கப்பட்ட காணிகளில் இராணுவத்தினர் வெளியேறிய பின்னர் அந்த கட்டடங்களை விட்டுச் சென்றுள்ளனர். எனவே விடுவிக்கப்பட்ட இடங்களில் மக்கள் தங்களுடைய சொந்த காணிகளை கையேற்பதன் மூலமே நாங்கள் மேலதிகமாக படையினரிடமுள்ள காணிகளை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். எனவே விடுவிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் தமது காணிகளை பொறுப்பேற்பதற்கு முன்வர வேண்டும் எனவும் தெரிவித்தார்,

# பேசாலையில் விபூதி புதன் நிகழ்வுகள்



*(தலைமன்னார் விசேட நிருபர்*

கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் அனுசரிக்கும் நாற்பது நாட்களை கொண்ட தவக்காலம் (நோன்பு காலம்) சாம்பல் புதனாகிய நேற்று (22) ஆரம்பமாகியது.

இதனைமுன்னிட்டு பேசாலை புனித வெற்றி அன்னையின் ஆலயத்தில் விசேட விபூதி புதன் நிகழ்வுகள் இடம்பெற்றன. பேசாலை பங்கு தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார், உதவி பங்குத் தந்தை அருட்பணி எஸ்.டிக்சன் அடிகளார் இத்திருச்சடங்கை நடாத்தினர்.

கத்தோலிக்க தேவாலயங்களில் திருப்பலி வேளையில் குருவானவர் ஒவ்வொருவரினதும் நெற்றியில் சாம்பலை சிலுவை அடையாளமிடுவார். இதன்மூலம் 'மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய் மீண்டும் மண்ணுக்கே திரும்புவாய்' என மறு உலக வாழ்வு நினைவூட்டப்படும்.

# 'வளம் மிகுந்தது வலிகாமம் கிழக்கு' நூல் வெளியீடு



நீர்வேலியூர் த.பரராஜசிங்கம் எழுதிய 'வளம் மிகுந்தது வலிகாமம் கிழக்கு' என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரசஅதிபர் ம.பிரதீபனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் சுபாஜினி மதியழகனும் கௌரவ விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் இ. பகீரதனும் கலந்து கொள்வர். நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பியும் மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ச.லலீசனும் வழங்குவர்.

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி அதிபர் சி. திரிகரன் மற்றும் அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் கு.ரவிச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவர். நீர்வேலி தெற்கைச் சேர்ந்த சி. சிவலிங்கம் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக் கொள்வார்.

# வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய கார் மீட்பு

*சாவகச்சேரி விசேட நிருபர்*

நாவற்குழி எரிபொருள் நிரப்பு நிலைய வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் கார் ஒன்றினை சாவகச்சேரிப் பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு மீட்டுள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன்பாக நாவற்குழியில் தனியார் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் ஒருவர் மீது மோட்டார் சைக்கிளில் சென்றோர் வாள்வெட்டுத்தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்துச் சென்றிருந்தனர்.

இந்நிலையில் இதுதொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரிப் பொலிஸார் சி.சி.ரி.வி கமரா பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு இச்சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் கார் ஒன்றினை மீட்டுள்ளனர்.

பொலிஸாரின் சைகையை மீறி பயணித்த காரினை நாவற்குழிகோவிலாக்கண்டிப் பகுதியில் வைத்து பொலிஸார் மீட்டுள்ளனர். இதன் போதுகாரில்இருந்தவர்கள்தப்பித்துச் சென்றிருப்பதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# இசை நிகழ்ச்சியில் லேசர் கதிர் வீச்சு ; 50இற்கு மேற்பட்டோருக்கு கண்கள் பாதிப்பு

*சாவகச்சேரி விசேட நிருபர்*

சாவகச்சேரி பகுதியில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சுமார் 50ற்கும் மேற்பட்டவர்களுக்கு கண்களில் பாதிப்புகள் ஏற்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

சாவகச்சேரி கைதடி பகுதியிலுள்ள சனசமூக நிலையமொன்றில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியிலேயே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது.

சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற இசைநிகழ்ச்சியில் லேசர் கதிரொளிகள், புகைகள் (ஸ்மோக்) போன்றவை அளவுக்கதிகமாக பாவிக்கப்பட்டமையாலேயே இவ்வாறு கண்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கண்எரிவு , கண்வீக்கம் ,தொடர்ச்சியாக கண்ணீர் வருதல் போன்ற பாதிப்புகளினால் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உள்ளிட்ட சுமார் 50ற்கும் மேற்பட்டவர்கள் கண்களில் பாதிப்பை எதிர் கொண்டுள்ளனர்.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தாய்மொழி தின நிகழ்வுகள்





கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னெடுத்த உலகத் தாய்மொழி தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்றன. இதில் பேராதனை பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரன் கலந்து கொண்டு மொழி கற்றலின் அவசியம் குறித்து பேருரை ஆற்றினார்.

இந்நிகழ்வில் விரிவுரையாளர் வே.சேந்தன் பேருரைக்கான அறிமுக உரையாற்றினார் . உலகத்தாய்மொழி தின ஆசிரிய மாணவர்களின் உரை, கவிதை மற்றும் பாடல்கள் என்பனவும் ஆற்றுகை செய்யப்பட்டன.

# கடலட்டைகளுடன் 12 பேர் கைது

*யாழ்.விசேட நிருபர்*

யாழ்ப்பாணம் சாட்டி கடற்கரையை அண்மித்த பகுதிகளில், 21 ஆயிரத்து 175 கடலட்டைகளுடன்,12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவேறு சம்பவங்களில் கைது செய்யப்பட்ட 12 பேரையும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்படுத்திய12 பேரையும் தலா 50 ஆயிரம் ரூபாய் சரீர பிணையில் செல்ல நீதவான் அனுமதித்தார். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

சட்டவிரோதமான முறையில் கடலட்டைகளை கொண்டு செல்வதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலில் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், அப்பகுதிகளில் சோதனைகளை முன்னெடுத்த வேளை, உரிய அனுமதிகள் இன்றி கடலட்டைகளை கடத்திச் சென்ற குற்றத்தில் 11 சந்தேக நபர்களை கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து 9 ஆயிரத்து 875 கடலட்டைகளை மீட்டிருந்தனர். அதேவேளை மற்றுமொரு இடத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 11 ஆயிரத்து 300 கடலட்டைகளையும் மீட்டிருந்தனர். கைது செய்யப்பட்ட நபர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் ஊர்காவற்துறை நீதிமன்றில் அவர்களை ஆஜர்படுத்திய போது, நீதிமன்றத்தில் பிணையில் செல்ல அனுமதித்தது.

# நெல்லியடியில் விசேட சோதனை

*நாகர்கோவில் விசேட நிருபர்)*



நெல்லியடியில் மோப்ப நாய் சகிதம் போதைப்பொருளை கண்டறியும் சோதனை நடவடிக்கையில் நேற்று புதன்கிழமை(22) முற்பகல் பொலிஸார் ஈடுபட்டனர்.

பஸ் தரிப்பு நிலையம், முச்சக்கர வண்டி தரிப்பு நிலையம் ஆகியவற்றில் சோதனை நடவடிக்கை இடம்பெற்றபோதும் அப்பகுதியில் எவ்வித போதைப்பொருட்களும் மீட்கப்படவில்லை.

# தெல்லிப்பழை வைத்தியசாலை இயந்திரத்தில் கோளாறு; தேங்கிக் கிடக்கும் யாழ்.வைத்தியசாலை மருத்துவக் கழிவுகள்

*யாழ். விசேட நிருபர்*

யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவ கழிவுகள் வெளியேற்றப்படாது கடந்த இரண்டு நாட்களாக தேங்கிக் கிடப்பதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவ கழிவுகள் தெல்லிப்பழை வைத்தியசாலையில் எரியூட்டப்பட்டு வந்தது. எனினும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தெல்லிப்பழையில் மருத்துவக் கழிவுகளை எரிப்பதற்கான செயற்பாடு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே யாழ்ப்பாண வைத்தியசாலை நிர்வாகத்தினரால் யாழ்.நகரை அண்டிய கோம்பயன் மணல் பகுதியில் மாநகர சபையின் அனுமதியுடன் மருத்துவ கழிவுகளை எரியூட்டும் தொகுதியினை நிறுவுவதற்கான உடன்படிக்கை செய்யப்பட்டது. எனினும் அதனை செயற்படுத்த தயாராகவிருந்த போது மாகாண உயர் அதிகாரி ஒருவரின் தலையீட்டால் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் மருத்துவக் கழிவுகளை எரியூட்ட அனுமதிக்க முடியாது என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவ கழிவுகள் வெளியேற்றப்படாது லொறிகளில் ஏற்றப்பட்டு வைத்தியசாலை வளாகத்தில் தேங்கிக் கிடப்பதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.







அனைத்துலக மருத்துவநல அமைப்பு, மற்றும் றட்ணம் பவுண்டேசன் அனுசரணையில் கிளிநொச்சி வடக்கு கல்விவலயம், ஆரம்ப முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் முழு நிலா நாள் விழா மிகவும் சிறப்புற நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு 300ற்கும் மேற்பட்டவர்கள் வருகை தந்திருந்தனர். முழு நிலா நாள் நிகழ்வில் அரங்கநிகழ்வுகளாக குழந்தைகளின் கலைநிகழ்வுகள், ஆசிரியர்களின் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# நகர்வலம்



## விவசாய அமைச்சின் உதவியுடன்

# அநுராதபுரம் மாவட்டத்தில் உழுந்து, பயறு பயிர்ச்செய்கை வெற்றியளிப்பு

## பயிர் விதைகளும் இலவசமாக பகிர்ந்தளிப்பு

திறப்பனை தினகரன் நிருபர்



விவசாய அமைச்சின் கிராமிய பொருளாதார பயிர் சாகுபடி மற்றும் ஊக்குவிப்பு பிரிவின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்ட உழுந்து, பயறு பயிர்ச் செய்கை திட்டம் மிகவும் சிறப்பாக வெற்றியளித்து வருவதாக அநுராதபுரம் மாவட்ட விவசாய பணிப்பாளர் எச். எல். தேனுவர தெரிவித்துள்ளார். இதற்காக விவசாய அமைச்சு 8.9 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதாவும் அவர் தெரிவித்தார்.

உழுந்து, பயறு பயிர் சாகுபடி திட்டமானது அநுராதபுரம் மாவட்டத்தின் பதவிய பிராந்திய செயலக பிரிவு தவிர்ந்த ஏனைய மாவட்டத்தின் 21 பிரதேச செயலகப்பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டம் கடந்த நவம்பர் 2022 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக 1962 பயனாளிகளுக்கு 4197 கிலோ பயறு விதைகளும், 4379 கிலோ உழுந்து விதைகளும் இலவசமாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

இவ் விதைகள் அனைத்தும் விவசாய திணைக்களத்தின் மகா இலுப்பள்ளத்தில் உள்ள விதை மற்றும் நடுகைப் பொருள் பண்ணையில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டதால் இதன் வளர்ச்சி வெற்றியடைந்ததாக இந்தத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் மாவட்ட விவசாய இயக்குநர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், தற்போது பூச்சிக் கொல்லி மருந்து இல்லாததாலும், இரசாயன உரங்களின் விலை உயர்வதாலும் குறிப்பிட்ட வயல்களில் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காமல் போகக்கூடிய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தை வெற்றியடையச் செய்ய அரசு அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் சிறப்பான பங்களிப்பை மேற்கொண்டிருந்தனர். மகா இலுப்பள்ளம் விதை மற்றும் விவசாய பொருட்கள் அலுவலகத்தின் பிரதி விவசாயப் பணிப்பாளர் ஹேரத்தின் பங்களிப்பும் கணிசமான அளவு இதற்காக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அநுராதபுரம் மாவட்ட செயலகத்தின் மாவட்ட விவசாயப் பிரிவிற்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நிலுஷி ஹேரத் மற்றும் அனைத்து பிரதேச செயலகங்களின் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் திருமதி தேனுவர இதன் போது தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

## ரயில் பிரயாணிகளின் கையடக்கத் தொலைபேசிகளை சூட்சுமமாக திருடும் நபர் கைது

நீர்கொழும்பு தினகரன் நிருபர்



புகையிரதங்களில் பயணிக்கும் பிரயாணிகளின் கையடக்க தொலைபேசிகளை சூட்சுமமான முறையில் கொள்ளையடித்துச் செல்லும் திருடனை ராகம பொலிஸார் கைது செய்துள்ளனர். ராகம பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

சனநெருக்கமான நிலையில் ரயிலில் பயணம் செய்து கொண்டிருக்கும் போதே சந்தேக நபர் தனது கைவரிசையை காண்பிப்பதாகவும் பொலிசார் தெரிவித்தனர். சந்தேக நபரை பொலிசார் சோதனை செய்த போது சந்தேக நபரிடமிருந்து இரண்டு கிராம் ஹெரோயின் போதைவஸ்துடன் நவீன ரக 10 கையடக்கத் தொலைபேசிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

ராகம, வல்பொல, தலகொல்லவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய நபரையே பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த சந்தேக நபர் கடந்த 22 வருடங்களாக ஹெரோயின் போதைவஸ்து பாவனையில் ஈடுபட்டு வருவதாகவும், போதைவஸ்தை வாங்குவதற்காகவே ரயிலில் கையடக்க தொலைபேசிகளை கொள்ளையடித்துச் செல்வதாகவும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு எதிராக பொலிசார் நீதிமன்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

## பேராசிரியர் சோ. சந்திரசேகரம் ஞாபகார்த்த மன்றம் அங்குரார்ப்பணம்

பேராசிரியர் சோ. சந்திரசேகரம் ஞாபகார்த்த மன்றம் இம்மாதம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பின்வருவோர் மன்றத்தின் புதிய நிர்வாகக்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

# தலைவர் ; பேராசிரியர் தை. தனராஜ்

# துணைத் தலைவர்கள் : பேராசிரியர் அன்ரனி நோபேற், கலாநிதி உ. நவரத்தினம், திரு. எச்.எச். விக்கிரமசிங்க, திரு. க. குமரன், பேராசிரியர் தே. முகுந்தன்

# இணைச் செயலாளர்கள் ; தி. ச. இந்திரகுமார், கலாநிதி எஸ். அதிரதன்

# துணைச் செயலாளர்கள் ; கலாநிதி எஸ்.ரமேஷ், கலாநிதி எஸ். கருணாகரன் திருமதி எஸ். சுதர்ஷனி

# பொருளாளர் ; திருமதி பி. இராமதாஸ்

அத்துடன் பத்துபேர் கொண்ட மன்ற காப்பாளர் குழுவினரும் முப்பது பேர் கொண்ட நிர்வாகக் குழுவினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

பேராசிரியர் சந்திரசேகரம் ஞாபகார்த்த முதலாவது பேருரையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் எட்டாம் திகதி கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடத்துவது எனவும் முதலாவது ஞாபகார்த்த பேருரையை புரூணை தாருஸ்ஸலாம் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் பீ.ஏ.ஹுசைன்மியா அவர்கள் நிகழ்த்துவார்.

## கொழும்பு தமிழ்ச் சங்கங்கத்தில் இலக்கியக் களம்

கொழும்பு தமிழ்ச் சங்க பேரவை உறுப்பினர் காரைக்கவி கந்தையா பத்மானந்தன் தலைமையில் நாளை (24) வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ள இலக்கியக்களம் நிகழ்ச்சியில் "நானும் எனது எழுத்துருக்களும்" என்னும் தலைப்பில் 'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர் அவர்கள் உரை நிகழ்த்தவுள்ளார்.

## பாரதியார் கல்லூரியில் உலக தாய்மொழி தின விழா




பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் நேற்று முன்தினம் (21) உலக தாய் மொழி தினவிழா கொண்டாடப்பட்டது. பாரதியார் மகளிர் கல்வி நிறுவனங்களின் தலைவர் செ. இளையப்பன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கல்வி நிறுவன அனைத்து இயக்குநர்களும் கலந்து கொண்டனர். கல்வி நிறுவன செயலர் டாக்டர் ஏ.கே. ராமசாமி, பொருளாளர் எஸ். ஆர்.டி. செல்வமணி வாழ்த்துரை வழங்கினார்.

பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் டி. இராஜகுமாரி வரவேற்புரை வழங்க சிறப்பு விருந்தினர் சென்னை, ஜேப்பியார் பல்கலைக்கழகம், தமிழ்த் துறைத் தலைவர், முனைவர் பூ.மு. அன்புசிவா "செம்மொழியான தமிழ் மொழியே" என்ற தலைப்பில் தமிழின் சிறப்பும், தமிழரின் பெருமை, தமிழ் மொழியின் அருமையை மாணவிகளுக்கு எடுத்துரைத்தார்.

தாய்மொழியை பறைசாற்றும் விதமாக பாரதியார் மகளிர் கல்லூரி தமிழ்த்துறை மாணவிகள் தேசத் தலைவர்கள், தமிழ் அறிஞர்கள் என பல மாறு வேடங்கள் அணிந்து தாய் மொழி தினத்தை பெருமைப்படுத்தினர்.

## பிணையில் விடுதலையான நபர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

பல்வேறு குற்றச் செயல்களுக்காக சிறையில் இருந்து பிணையில் விடுதலையான நபரொருவர் துப்பாக்கியால் சுடப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக (20) வீரகெடிய பொலிஸார் தெரிவித்தனர்.

வீரகெடிய ஹீன்புன்ன பிரதேசத்திலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. வீரகெடிய வகமுல்லை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட அ. ஒ. ரத்னாயக்க எனும் (வயது 53) மூன்று குழந்தைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தனது உழவு இயந்திரத்தினை பழுதுபார்த்துக் கொண்டிருக்கும் போது வாகனம் ஒன்றில் வருகை தந்த குழுவொன்று துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பித்துச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மரணம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தெஹியங்க முஹ்யித்தீன் ஜும்ஆ பள்ளிவாசலில் கந்தூரி மஜ்லிஸ்

தெஹியங்க முஹ்யித்தீன் ஜும்ஆ பள்ளிவாசலில் வருடாந்தம் நடைபெற்று வரும் றாத்திப், புர்தா ஷரீப் மற்றும் மௌலித் ஷரீபின் தமாமும் விசேட துஆ பிரார்த்தனையும் எதிர்வரும் (25) சனிக்கிழமை மாலை நடைபெற்று மறுநாள் (26) ஞாயிற்றுக்கிழமை பகல் கந்தூரியுடன் நிறைவுபெறும்.

அண்மைக்காலமாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடை நிறுத்தப்பட்ட இம்மஜ்லிஸ் இம்முறை இடம்பெறுவதுடன் அன்று பகல் ஊர் ஜமாஅத்தார் குடும்பத்தார்களுக்கு பகல் உணவு விருந்தளித்து சிறப்பிக்கப்படவுள்ளதாகவும் ஆலிம்கள் உலமாக்களின் வழிகாட்டலுடனும் இம்மஜ்லிஸ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நிர்வாக சபை சார்பாக எம்.எஸ்.எம் இம்தியாஸ் தெரிவித்தார்.

## பங்களாதேஷ் உயர் ஸ்தானிகராலய ஏற்பாட்டில்

# அல் ஹுமைஸரா – பண்டாரநாயக்க தேசிய பாடசாலைகளிடையே இன்று கிரிக்கட் சுற்றுப்போட்டி

(அஜ்வாத் பாஸி)

**பிரதம அதிதியாக பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் பங்கேற்பு**




களுத்துறை மாவட்டத்தில் கடினப்பந்து கிரிக்கெட் விளையாட்டை பாடசாலை மட்டத்தில் ஊக்குவிக்கும் நோக்கில் பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன் பேருவளை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை மற்றும் பயாகல பண்டாரநாயக்க தேசிய பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளுக்குமிடையிலான கடினப் பந்து (Leather Ball) ஒருநாள் கிரிக்கட் சுற்றுப்போட்டி இன்று 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு மக்கொன சரே விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் முஹம்மத் ஆரிபுல் இஸ்லாம் கலந்துகொள்வார்.

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதியமைச்சர் அஹ்மத் ஸாதிக் அவர்களின் நல்லெண்ணத்தின் ஒரு அங்கமாகவே முதல்கட்டமாக மேற்படி இரு பாடசாலைகளுக்குமிடையில் நற்புறவை ஏற்படுத்தும் வகையில் இப்போட்டி நடாத்தப்படவுள்ளது. இதன் ஒருங்கிணைப்பாளராக அஹ்மத் ஸாதிக் செயற்படுகிறார். இன்றைய போட்டி நிகழ்வில் இரு பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்வர்.

இந்த செயற்திட்டம் களுத்துறை மாவட்டத்தில் பாடசாலைகளுக்கு மத்தியில் முன்னெடுத்துச் செல்ல பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் அமைப்பு மற்றும் நலன்விரும்பிகள் மற்றும் அனுசரணை நிறுவனங்கன் உதவி ஒத்தாசை வழங்க முன்வர வேண்டுமெனவும் பிரதியமைச்சர் அஹ்மத் ஸாதிக் மேலும் கேட்டுள்ளார்.

## முன்னாள் ரொய்ட்டர் செய்தியாளர் ஷிஹார் அனீஸின் தந்தையார் காலமானார்

(பேருவளை விசேட நிருபர்)



மக்கொனையை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற அதிபர் அல்ஹாஜ் அனீஸ் மக்கொனை இல்லத்தில் காலமானார்.

இவர் ஸேம் ரிபாய் தேசிய பாடசாலை முன்னாள் அதிபரும், அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை ஆசிரியருமாவார்.

மக்கொனை அல்ஹாஜ் ஸாலி, ஹாஜியானி பாத்துமாவின் புதல்வரும் முன்னாள் அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை ஆசிரியை ஹாஜியானி ஜிப்ரியாவின் கணவரும் முன்னாள் ரொய்ட்டர் செய்தி நிறுவன இலங்கை தலைவர் ஷிஹார் அனீஸ் மற்றும் டொக்டர் ஷாஹினாவின் தகப்பனாரும் டொக்டர் ஸஹ்ராக், டொக்டர் ருஸ்னா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று மக்கொனை ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## அல் மினா பாலர் பாடசாலையில் வருடாந்த கலைவிழா, கௌரவிப்பு

(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)



ஹோராபொள அல்மினா பாலர் பாடசாலையின் வருடாந்த கலை விழா கடந்த (19) ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இந்தக் கலை விழாவில் பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மேடையை அலங்கரித்தன. சிறார்கள், பெரியவர்கள் என அனைவரும் கலந்து சிறப்பித்ததுடன் அல் பலாஹ் சமூக முன்னேற்ற கழக உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தது தமது பங்களிப்புகளையும் வழங்கினர்.

இந்நிகழ்வின் முக்கிய நிகழ்வாக அல்மினா பாலர் பாடசாலையில் 1996 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியராகப் பணிபுரிந்து பாடசாலை சமூகத்திற்கு மாணவர்களை சிறப்பானவர்களாக வழியனுப்ப தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய பாலர் பாடசாலையின் ஆசிரியை வை.எஸ். முளாபராவின் 27 வருட கால ஆசிரிய சேவையை பாராட்டியும் அவருடன் இணைந்து 17 வருடங்களாக ஆசிரியைகளாக பணியாற்றிய எம். ஆர். ரஸ்கானா ஆகியோரின் சேவையையும் பாராட்டி இதன்போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.


## எலுவிலை ஜும்ஆ மஸ்ஜிதில் மிஃராஜ் கந்தூரி வைபவம்



பாணந்துறை, எலுவிலை வயக்கடை ஜும்ஆ மஸ்ஜிதில் வருடாந்தம் நடைபெற்று வரும் மிஃராஜ் கந்தூரி வைபவம் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை இரவு மஃரிப் தொழுகையின் பின் ஆரம்பமாகவுள்ளது.

இம் மஜ்லிஸில் கெச்சிமலை தர்காவின் முக்கியஸ்தர் அஷ்ஷெய்க் ஸக்கி அஹமட் பின் அஷ்ஷெய்க் காலிப் அலவி (அலவியதுல் காதிரி) அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இம்முபாரகான மஜ்லிஸில் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வயக்கடை ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

# மலைச்சாரல்



# சிவனொளிபாதமலையில் குவியும் பிளாஸ்டிக் கழிவுகள்







**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

சிவனொளிபாதமலைக்கு வரும் யாத்திரிகர்களின் அதிகரிப்பையடுத்து கடந்த இரண்டு வாரங்களாக நல்லதண்ணி நகரில் இருந்து மலைக்கு செல்லும் வழிகளில் பிளாஸ்டிக் பொருட்கள் அதிகளவில் வீசப்பட்டு காணப்படுவதாக தெரியவருகிறது.பொது சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால் சிவனொளிபாதமலையை அண்டியுள்ள வனப்பகுதியும் சேதமாக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி முழுமையாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கூறினார்.

இவ்வாறு யாத்திரிகர்கள் பிளாஸ்டிக் போத்தல்கள், பொலித்தீன் உறைகளை ஆங்காங்கே வீசி எறிந்து விட்டு செல்வதால் அப் பகுதியில் உள்ள வன ஜீவராசிகள் அழிந்து போகும் அபாயம் தோன்றியுள்ளது என வன பாதுகாப்பு அதிகாரிகள் கூறினர்.

# பதுளையில் தனிமையில் வாழ்ந்த முதியவரின் மரணத்தில் சந்தேகம்

பதுளை இரண்டாம் கட்டை சமகிபுர பிரதேசத்தில் 20ஆம் திகதி இரவு திடீரென உயிரிழந்த 66 வயது முதியவரின் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதென பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் 66 வயது தாத்தாவுடன் 15 வயது பேரனும் தங்கியிருந்த நிலையிலேயே இந்த மரணம் பதிவாகியுள்ளது.

முதியவரின் சடலம் மலர்சாலையில் ஒப்படைக்கப்பட்ட போது, முதியவரின் உடலில் பல இடங்களில் காயங்கள் காணப்பட்டதாக பதுளை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றுக்கு அறிவித்ததன் பின்னர், பதுளை நீதவான் டபிள்யு.என்.டீ. சில்வா சடலத்தைப் பார்வையிட்டதுடன் பிரேத பரிசோதனை அறிக்கையும் சமர்ப்பிக்குமாறு பதுளை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பதுளை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த முதியவருடன் தங்கியிருக்கும் சிறுவன் தனியார் பாடசாலையொன்றில் கல்வி கற்று வருவதுடன் அவரது தந்தை வெளிநாட்டிலும் தாய் நீர்கொழும்பு பிரதேசத்திலும் வசித்து வருகின்றமை தெரியவந்துள்ளது.

அத்துடன் விடுமுறையைக் கழிப்பதற்காக தாத்தாவின் வீட்டுக்கு சிறுவன் வந்துள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

# பதுளையில் முதல் தடவையாக முஸ்லிம் பெண்கள் சங்கம்

பதுளையில் முதல் தடவையாக முஸ்லிம் பெண்கள் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு சுயதொழில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல், அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பது இந்த சங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

பதுளை வை.எம்.எம்.ஏ மண்டபத்தில், கடந்த 19 மற்றும் 20 ஆம் திகதிகளில், உற்பத்தி பொருட்கள் விற்பனைச் செய்யப்பட்டது.

இந்த வேலைத்திட்டம் பதுளை மாவட்டம் முழுவதிலும் முன்னெடுக்கப்படும் வறுமையில் இருக்கும் முஸ்லிம் பெண்களை ஊக்கப்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும் என்று அகில இலங்கை முஸ்லிம் சம்மேளனத்தின் தேசிய தலைவர் இஷான் ஏ ஹமீட் தெரிவித்தார்.

# இரத்தினபுரி ஊடகவியலாளர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ செயலமர்வு

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தில் ஊடகத்துறையில் பணியாற்றி வரும் விசேடமாக அனர்த்த முகாமைத்துவம் சம்பந்தமாக ஊடகங்களுக்கு தகவல்களை வழங்குகின்ற ஊடகவியலாளர்களுக்கு அனர்த்த நிலைமைகள் சம்பந்தமாக முக்கிய விடயங்களை அறிவுறுத்தும் செயலமர்வு ஒன்றினை இரத்தினபுரி மாவட்ட செயலகமும் அனர்த்த முகாமைத்துவ பிரிவும் ஒன்றிணைந்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9:00 மணி முதல் நண்பகல் 12 – 30 மணி வரை இரத்தினபுரி புதிய நகரில் அமைந்துள்ள கேதுமதி உற்சவ மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இரத்தினபுரி மாவட்ட அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது.

# 35 வருட அரச கல்வி சேவையிலிருந்து ஓய்வு

**பதுளை தினகரன் விசேட நிருபர்**



ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ்ப் பிரிவில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய திருமதி. கலையரசி யோகநாதன் 2023 – 02 – 21 தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றுள்ளார்.

ஊவா மாகாணத்தில் இலங்கை கல்வி நிருவாக சேவையின் தமிழ் மொழி மூலமான முதலாவது கல்வி அதிகாரி என்ற பெருமையும் இவரைச் சார்ந்ததாகும். அதனைத் தொடர்ந்து இவர் பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தில் உப அதிபராகவும், பதுளை ஊவா ஹைலண்ட்ஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபராகவும் பணியாற்றினார். அதன் பின்னர் பதுளை வலயக் கல்விப் பணிமனையில் 9 வருடங்கள் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர் 2009ஆம் ஆண்டு ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இணைந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து 2015 முதல் 2021 வரையான காலப் பகுதியில் ஊவா மாகாண தமிழ்க் கல்வி அமைச்சின் மேலதிகக் கல்விப் பணிப்பாளராக தொடர்ந்து பணியாற்றினார்.



தமிழ் முற்போக்கு கூட்டணியின் இணைத் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஹாவேலியா ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான அறங்காவலர் சபை தலைவருமான பெ.இராதாகிருஷ்ணன் எம்.பிக்கு அந்த ஆலயத்தில் நடைபெற்ற விசேட ஹோம பூஜையின் பின்னர் சர்வதேச இந்துமத பீடத்தின் செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா அவர்கள் பொன்னாடை போர்த்தி ஆசிர்வதிப்பதை படத்தில் காணலாம்.

# சமனல நீர் மின் உற்பத்தி நிலையத்தில் மின்னுற்பத்திப் பணிகள் இடைநிறுத்தம்



கினிகத்தேனை பொல்பிட்டிய சமனல நீர் மின் உற்பத்தி நிலைய உபகரணங்களில் மேற்கொள்ளப்படும் திருத்தவேலைகள் காரணமாக கடந்த சனிக்கிழமையிலிருந்து (18) குறித்த நீர் மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மின் உற்பத்தி நிலையத்தின் பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

குறித்த நீர்மின் உற்பத்தி நிலையம் ஊடாக 75 மெகாவோட் மின் உற்பத்தி செய்யப்படுவதுடன் லக்ஸபான நீர்மின் உற்பத்திக்காக பெற்றுக்கொள்ளப்படும் நீர், லக்ஸபான நீர்த்தேக்கத்திலிருந்து சுரங்க வழியாக சமனல நீர்மின் உற்பத்தி நிலையத்துக்கு கொண்டு செல்லப்படுகின்றது.

சமனல நீர் மின் உற்பத்தி நிலையத்தின் மின்சார உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதால், லக்ஸபான நீர் மின் உற்பத்தி நிலையத்தின் மின்சார உற்பத்தியின் பின்னர் களனி ஆற்றுக்கு நீரைத் திறந்து விடுவதற்கு லக்ஸபான நீர் மின் நிலையத்தின் கட்டுப்பாட்டு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

# நாட்டில் அமைதி, சமாதானம் நிலவ மக்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும்

**அக்குறணை குறூப் நிருபர்**

மத்திய மாகாண சர்வமத சம்மேளனத்தின் வருடாந்த அமர்வு கண்டி கெட்டம்பே 'ஓக்ரே' ஹோட்டலில் நேற்று இடம்பெற்றது. நிகழ்வில் இந்து, இஸ்லாம், பௌத்த, கிறிஸ்தவ பெரியார்கள் பங்கேற்றனர்.

முன்னாள் கண்டி மாவட்ட அரசு அதிபர் ஏ.எம்.எல்.பி. பொல்கொல்ல தலைமையில் இடம்பெற்ற இவ் அமர்வில் கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், மல்வத்தை பீடத்தின் அனுநாயக்க தேரர் வண.நியங்கொட விஜித்த சிறி, உட்பட கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களைச் சேர்ந்த பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதக்குருக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

தேசிய சமாதான பேரவை மற்றும் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு என்பன இணைந்து இதனை ஒழுங்கு செய்திருந்தன.



நாட்டில் இன்றைய தேவையைக் கருதி இவ்வாறான சம்மேளனக் கூட்டங்கள் மற்றும் கருந்தரங்குகள் ஒழுங்கு செய்யப்படுவது அவசியம் என கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்த வண. நியங்கொட விஜித்த சிறி தெரிவித்தார்.

மேற்படி சம்மேளன அமர்வில் அமைதி, சமாதானம் தொடர்பாக பொதுமக்களை விழிப்படையச் செய்ய வேண்டும் என்றும் இதற்கு மதத் தலைவர்களின் பங்களிப்பு தவிர்க்க முடியாதது என்றும், அதற்காக சகல மதத் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

# இரத்தினபுரியிலுள்ள 10 தோட்ட பாடசாலைகளுக்கு இலவச பகலுணவு

இரத்தினபுரி தோட்ட மாணவர்களின் நலன்கருதியும், இடைவிலகலை தவிர்க்கும் நோக்குடனும், மாணவர்களுக்கு இலவசமாக பகலுணவு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் நிறைவேற்று அதிகாரி திருமதி குமாரி கொத்தலாவல கூறினார்.



சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களத்தின் வேண்டுக்கோளுக்கமைய இலங்கை செஞ்சிலுவை சங்கம் பிரித்தானியா செஞ்சிலுவை சங்கத்தின் ஒத்துழைப்புடன் இத் தோட்ட மாணவர்களுக்கு இலவசமாக பகலுணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக இரத்தினபுரி மாவட்ட தோட்டமக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இதன் காரணமாக பெரும்பாலான தோட்டப் பகுதி மாணவர்கள் தமது கல்வியை இடை நடுவில் கைவிடும் அபாய நிலை காணப்படுகின்றது.

தெரிவு செய்யப்பட்ட 10 தோட்ட மற்றும் தோட்ட மாணவர்கள் கூடுதலாக கல்விக்கற்கும் நகர பாடசாலைகள் ஆகியவற்றை உள்ளடக்கி சுமார் 1,300 பேருக்கு முதற்கட்டமாக இலவசமாக பகலுணவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்

இன்று தொடக்கம் வாரத்தில் இரு நாட்கள் பகலுணவு வழங்கப்படும். இதற்கென நாள் ஒன்றுக்கு மட்டும் சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது என்றார்.



கட்டுகஸ்தொட்டை கல்வி வலயத்திற்குட்பட்ட அக்குறணை அஸ்ஹர் மாதிரி ஆரம்பப் பாடசாலையிலிருந்து 2022 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் 22 பேர் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்த மாணவர்களுடன் பாடசாலை அதிபர் மற்றும் வகுப்பாசிரியர்களை படத்தில் காணலாம்.

படம்: மாத்தளை சுழற்சி நிருபர்

## தலவாக்கலை நகரில் அதிக விலைக்கு

# முட்டை விற்ற வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

தலவாக்கலை நகரில் கட்டுபாட்டு விலைக்கு அதிகமாக முட்டை விற்பனை செய்த பல வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நான்கு வர்த்தகர்களுக்கு எதிராக நுவரெலியா நீதவான் நீதிமன்றில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நுவரெலியா மாவட்ட நுகர்வோர் சேவை அதிகாரசபையின் பிரதானி அமில ரத்னாயக்க தெரிவித்தார்.

அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலுக்கமைய முன்னெக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, சிவப்பு நிற முட்டையை 50 ரூபாய்க்கும் வெள்ளை நிற முட்டையை 48 ரூபாய்க்கும் விற்கின்றமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு முட்டையை அதிக விலைக்கு விற்பனை செய்த நான்கு வர்த்தகர்களை இந்த மாதம் 28ஆம் திகதி நுவரெலியா மாவட்ட நீதிமன்றில் ஆஜராகுமாறு ஆலோசனை வழங்கப்பட்டதாக நுவரெலியா மாவட்ட நுகர்வோர் சேவை அதிகாரசபையின் பிரதானி அமில ரத்னாயக்க தெரிவித்தார். அத்துடன் இவ்வாறான சுற்றிவளைப்புகள் நுவரெலியா மாவட்டம் முழுவதிலும் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# இலங்கை

## வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சு

### இலங்கையில் கிறீஸ் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெயை இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், கலவை செய்தல், உற்பத்தி செய்தல், வழங்கல், விற்பனை செய்தல் மற்றும் விநியோகம் செய்வதற்கு தகுதியுடையவர்களிடமிருந்து கேள்வி மனுக்களைக் கோருதல்

இலங்கையில் உராய்வு நீக்கி எண்ணெய்ச் சந்தை கட்டுப்பாட்டு நிபந்தனை அடிப்படையின் கீழ் இயங்குவதோடு நுகர்வோருக்கு தரமான விலையில் உயர்ந்த தரத்திலான உராய்வு நீக்கி எண்ணெயை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். தற்போது இலங்கைச் சந்தையில் தெரிவுசெய்யப்பட்ட 26 நிறுவனங்களால் உராய்வு நீக்கி எண்ணெய் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதோடு, உராய்வு நீக்கி எண்ணெய் தரத்தில் சிறந்ததொரு போட்டியை உருவாக்குமுகமாக, பின்வரும் அடிப்படையில் தகுதியுடையவர்களிடமிருந்து கேள்வி மனுக்களை கோருவதற்கு (RFQ) இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

1. **கிறீஸ் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய்**
   - i. இலங்கையில் கிறீஸ் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெயை இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், கலவை செய்தல், உற்பத்தி செய்தல், வழங்கல், விற்பனை செய்தல் மற்றும் விநியோகம் செய்தல், அல்லது
   - ii. இலங்கையில் கிறீஸ் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெயை இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், வழங்கல், விற்பனை செய்தல் மற்றும் விநியோகம் செய்தல்
2. **OEM ஆல் சிபார்சு செய்யப்பட்ட சிறந்த தரம்மிக்க பரிமாற்றல் எண்ணெய் (Genuine Transmission oil) (CVT, ATF, கியர் எண்ணெய்)**
   - i. இலங்கையில் சிறந்த தரம்மிக்க பரிமாற்றல் எண்ணெயை(மாறும் பரிமாற்றல் எண்ணெய் (CVT), தன்னியக்க பரிமாற்றல் எண்ணெய் (ATF) அல்லது கியர் எண்ணெயை தொடர்ச்சியாக) இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், வழங்கல், விற்பனை செய்தல் மற்றும் விநியோகம் செய்தல்
3. **கப்பல்களுக்கான கிறீஸ் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய்**
   - i. இலங்கையில் கப்பல்களுக்கான கிறீஸ் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெயை இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், வழங்கல், விற்பனை செய்தல் மற்றும் விநியோகம் செய்தல்

அனைத்து கோரல்களும் தகுதியுடையவர்களிடமிருந்து கேள்வி மனுக்களை கோருவதற்கான (RFQ) ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட மாதிரியின் படி தயாரிக்கப்பட்டு 2023.04.06 ஆம் திகதி 1400 மணித்தியாலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது கடுகதி தபாலிலோ அல்லது அமைச்சின் பெறுகைக் பிரிவிலோ கிடைக்கக் கூடியதாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். RFQ ஆவணத்தை வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சிலோ அல்லது அமைச்சின் இணையத்தளமான www.energymin.gov.lk இல் தரவிறக்கம் செய்தோ பெற்றுக்கொள்ள முடியும். கேள்வி மனுக்களை சமர்ப்பிக்கும் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களால் எழுப்பப்படும் வினாக்களுக்கான விடைகளை வழங்கும் கூட்டம் 2023.03.23 ஆம் திகதி பி.ப. 10.00 மணிக்கு இவ் அமைச்சில் நடைபெறும்.

**தலைவர்**
**அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேரம் பேசும் குழு**
**வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சு**
**இல. 80, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 07.**
**2023 பெப்ரவரி 23**

---

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WP QZ-9568 Bajaj 2010 Threewheel அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0711 2 1 081 0. 011662

### 128 டயர்கள், டியூப்புகள் விற்பனைக்கு

டயர்டியூப் கொழும்பு 14 இல் மிகவும் சலுகை விலையில் உத்தரவாதத்துடன் சகல டயர்கள், போத்லிப்ட் டயர்கள் மற்றும் காற்று 600X9.700X12 28X9X15. 250X15 ஆர்பிடெக் 700X16.750X16 900X20, 1000X20, இல.155 கிரவுன் டயர் கொழும்பு 14. 0773134060. 010355

## காணி/தோட்டம்

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

கண்டி, திகன வீதி, 12.1 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட அரைவாசி கட்டி முடிக்கப்பட்ட இரு மாடி வீடு விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.02.06 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு குறைந்த பட்ச கோரிக்கை 9.7 மில்லியன். 0773427535. 011725

### 623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

பண்டாரவளை, வெலிமடை பிரதான வீதியில் 24.7 பேர்ச் இல் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.02.26 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு குறைந்த பட்ச கோரிக்கை 2.5 மில்லியன். 0773427535. 011723

### 627 வீடு சொத்து மொனராகலை மாவட்டம் விற்பனைக்கு

மொனராகலை, புத்தள வீதி 40 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட இரு மாடி வீடு விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.02.26 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழு ம்பு02 என்ற முகவரி க்கு குறைந்த பட்ச கோரிக்கை 17.2 மில்லியன். 0773427535. 011728

### 628 வீடு சொத்து கேகாலை மாவட்டம் விற்பனைக்கு

தெரணியகல, 434 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.02.26 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு குறைந்த பட்ச கோரிக்கை 4.7 மில்லியன். 0773427535 011726

### 630 வீடு சொத்து காலி மாவட்டம் விற்பனைக்கு

எல்பிட்டிய, எத்கந்துர 377.6 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.02.26 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு குறைந்த பட்ச கோரிக்கை 22 மில்லியன். 0773427535. 011721

### 632 வீடு சொத்து ஹம்பாந்தோட்ட மாவட்டம் விற்பனைக்கு

எம்பிலிப்பிட்டிய 300 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.02.26 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்த பட்ச கோரிக்கை 34.2 மில்லியன். 07734227535. 011719

---

**Marriage Proposals**
*Decades of Trusted Service*
For 15 Words - Rs. 1,000/- For each additional word Rs. 25/-
SUNDAY OBSERVER For 15 Words - Rs. 800/- For each additional word Rs. 25/-
வாரமஞ்சரி For 15 Words - Rs. 300/- For each additional word Rs. 25/-

**COLOMBO DISTRICT**

AVISSAWELLA 036-2230446
Famous Bake House, No. 31, Seethawakapura

ANGODA 011 3069404
Kotikawatte Junction, Kudabuthgamuwa,

ATHURUGIRIYA 011 2760479, 011 4876968
267, Godagama Road,

BATHTHARAMULLA 011 2866705, 077 0736770
West Town, Bake House, Sweet House,

BORALESGAMUWA 071 6505533, 011 2519954
No. 17, Wewa Rd,

HANWELLA 011 4967962, 011 4967960
Sithumina Newspaper Agency, 144, High Level Rd, Pahathgama,

HOKANDARA 071 8685437
No. 501, North Hokandara,

HOMAGAMA 011 2892262, 077 7304046
"Aradanas", Senanayake Shopping Complex, Station Road,

KADUWELA 011 2579609
Nayana Bake House

KADUWELA 011 2412291, 011 4443566
375/1, Pahala Bomiriya, Yakkala,

KALUBOWILA 077 3551145, 011 2767259
No 195, Hospital Road,

KESBEWA 011 2703415
Seedevi Newspaper Office, 19, Horana Rd,

KIRULAPONE 071 5439396, 011 2514166
Ramani Book Shop, 27-A High Level Rd,

KOTTAWA 011 2842569, 071 2510950
Srisara Groceries, No. 101/2,

MAHARAGAMA 077 7686683, 011 2896373
Supermarket Complex, 88, High Level Rd,

MALABE 011 2791782
Kumudu Stores,

MEEGODA 011 2858290, 011 2831120
Nandana Stores, No. 635/3, Padukka Rd.,

MORATUWA 011 2647410, 077 5486719
Wijesekara Stores,

MORATUWA 0112 657326, 0114 212989
S.J.M. Fareed, 222, Egoda Uyana, Modera

MT. LAVINIA 011 2724820
Dayal Stores, Galle Rd,

NUGEGODA 077 3458785, 011 2811833
Ekwaththa Rd, Mirihana,

NUGEGODA 011 2846100, 077 1652800
No. 4, High Level Plaza, Delkanda,

PADUKKA 011 2859186, 011 5638677
No. 03, Hanwella Road,

PILIYANDALA 011 2619967, 072 8069487
No. 05, Seeko Gardens, Gedabuwana,

PITAKOTTE 011 2823960, 077 0858585
No. 435, Pothgula,

RAJAGIRIYA 011 2861338
No. 51/2A, Rajahewavitharana Road,

RATHMALANA 011 2626106, 011 2632006
Thusitha Newspaper Agency, Galle Rd,

RAWATHAWATTE 011 2655153, 071 4274689
No. 3, Soysa Road, Galle Road

UDAHAMULLA 077 6859780, 011 2810042
No 138, Station Rd,

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380

---

# நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

## பெறுகை அறிவித்தல்

### NEC MB-H மேசைக் கணனிகள் மற்றும் அது சார்ந்த சகல பொருட்களுக்கான விரிவான பராமரிப்பு

**செயற்றிட்டத்தின் பெயர்** : NEC MB-H மேசைக் கணனிகள் மற்றும் அது சார்ந்த சகல பொருட்களுக்கான விரிவான பராமரிப்பு

**செயற்றிட்ட இலக்கம்** : IR/PAM/20/28/93/2023

**தேவையான விலைமனுப் பிணை** :
1. விலைமனு பிணைத் தொகை 85,920.00 ரூபா
2. செல்லுபடியாகும் காலம் 2023-07-01ஆம் திகதி வரை

1. ‘‘2023ஆம் வருடத்தில் NEC MB-H மேசைக் கணனிகள் மற்றும் அது சார்ந்த சகல பொருட்களுக்கான (537 எண்ணிக்கை) விரிவான பராமரிப்பு’’ எனும் பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் சிறிய அளவிலான பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.
2. இதில் உள்ளடங்கும் பராமரிப்பு சேவைக் காலமானது பின்வரும் திகதியில் ஆரம்பித்து 2024-03-31ஆம் திகதியில் நிறைவடையும்.

| கணனிகளின் எண்ணிக்கை | ஆரம்பிக்கப்படும் திகதி | நிறைவடையும் திகதி |
|---|---|---|
| 537 | 2023-04-01 | 2023-03-31 |

3. தேசிய போட்டி ரீதியிலான செயற்பாடுகளுக்கமைய விலைகோரல் நடைமுறைகள் இடம்பெறும்.
4. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெறுவதற்கு விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   - i. விலைக்கோரும் நேரத்தில் மற்றும் ஒப்பந்தத்தைக் கையளிக்கும் நேரத்தில் ஒப்பந்தக்காரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இது தொடர்பில் சத்தியக் கடதாசி ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   - ii. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வியாபார நிறுவனாகவிருத்தல் வேண்டும்.
   - iii. இலங்கையின் அரசாங்கத் திணைக்களங்கள்/ அரச பொறுப்பேற்றல்கள் / தன்னாட்சி அமைப்பு / கூட்டு நிறுவனங்களுடன் குறைந்தபட்சம் 3 வருடங்கள் முன்னைய பராமரிப்பு சேவை ஒப்பந்தக்காரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   - iv. விலைமனுதாரர் கொழும்பு மற்றும் ஏனைய பிராந்திய கிளைகளில் பரீட்சித்தல் / திருத்தவேலை நிலையத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - v. விலைமனுதாரர்கள் LAN கீழ் Windows சூழலைக் கொண்ட 100 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட கணனிகள் சார்புடையவற்றை பராமரிப்பதை குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் திருப்திகரமாக நிறைவேற்றியிருத்தல் வேண்டும் என்பதுடன் அதில் ஒன்று NEC கணனிகளுக்காகவிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 7ஆம் மாடியிலுள்ள தகவல் தொழில்நுட்ப நிர்வாக சேவைக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி: 011-2134708) மற்றும் 2023-03-23ஆம் திகதி முதல் 2023-03-15ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பின்வரும் முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வம் கொண்ட விலைமனுதாரர்கள் கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்துருவிலான விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்து மற்றும் 3000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்தியதன் பின் 2023-03-23ஆம் திகதி முதல் 2023-03-15ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை 2023-03-16ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், சிறிய அளவிலான பெறுகைக் குழு, பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவு, 15ஆம் மாடி, உள்நாட்டு இறைவரி திணைக்களம், ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாடித்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல்கள் முடிவுற்ற உடனடுத்து அவைகள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது விலைக்கோரலின் கலந்துகொள்ள தெரிவுசெய்யப்பட்ட அவரது பிரதிநிதியொருவர் இதன்பொருட்டு கலந்துகொள்ளலாம்.
8. விலைமனுக்கள் 2023-06-16ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
9. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்ட விலைமனு ஆவணத்தின் பிரகாரம் வங்கி உத்தரவாதமாக மட்டும் எண்பத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து இருபது ரூபா (85,920.00 ரூபா) பெறுமதியான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை முறியானது 2023-07-16ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (சிறியளவு),**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**கொழும்பு 02.**

---

# 2023ஆம் வருடத்திற்கு சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## (எழுத்து வேலைகள் மற்றும் ஏலவிற்பனைகளை எளிதாக்குவதற்கு)

தேசிய சேமிப்பு வங்கி சார்பில் எழுத்துவேலை (வெளியேற்றங்கள் உட்பட) மற்றும் ஏலவிற்பனைகளை எளிதாக்குவதற்கு சேவை வழங்குநராக பதிவு செய்துகொள்ள விரும்பும் அனுபவம் வாய்ந்த நிறுவனங்கள் / தனிப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகவுத் திறன்கள்:**

1. கீர்த்தி வாய்ந்த நிதி நிறுவனங்கள் சார்பில் இதனையொத்த விடயங்களைக் கையாள்வதில் ஆகக் குறைந்தது 20 வருட அனுபவத்தை விண்ணப்பதாரர் கொண்டிருக்க வேண்டும்.
2. விண்ணப்பதாரர், தேவையான ஆவணங்களைத் தயாரித்தல், வெளியீடுகளைக் கையாளுதல், நீதிமன்ற ஊழியர்களுடன் ஒருங்கிணைதல், குறைந்தபட்ச மேற்பார்வையுடன் முழு செயல்முறைகளையும் சுயாதீனமாகவும் நேர்மையாகவும் கையாளும் நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தை விண்ணப்பதாரர் நிரூபித்துள்ளார் என தேசிய சேமிப்பு வங்கியை விண்ணப்பதாரர் திருப்திப்படுத்த வேண்டும்.
3. விண்ணப்பப் படிவத்துடன் கீர்த்தி வாய்ந்த நிதி நிறுவனங்களிலிருந்து குறைந்தபட்சம் இரண்டு குறிப்புகளையாவது வழங்குவது அவசியமாகும்.

விண்ணப்பங்களை இந்த விளம்பரம் பிரசுரமாகி ஏழு நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பலாம்.

**தேசிய சேமிப்பு வங்கி,**
**சட்டப் பிரிவு,**
**இல. 255, காலி வீதி, கொழும்பு-03.**

---

# பெறுகை அறிவித்தல்

## போப்பெ போத்தல பிரதேச சபை

போப்பெ போத்தல பிரதேச சபையின் பெறுகைக்குழுத் தலைவரினால் கீழ் குறிப்பிடப்படும் கருமத்திற்காக 2023.03.17 அன்று மு.ப. 9.30 வரை முத்திரையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் அதே நேரத்தில் அவ் அலுவலகத்தில் கேள்விதாரர்களின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

| விபரம் | தேவையான பதிவு | மீளளிக்கப்படாத கேள்வி வைப்பு ரூபா | கேள்விப் பிணைத் தொகை ரூபா |
|---|---|---|---|
| போப்பெ போத்தல பிரதேச சபையின் தகனக் கட்டிடம் மற்றும் தகனக் கூடத்தை நிர்மாணிக்கும் கைத்தொழில் UP DRAUGHT (SP/G/BPPS/2021/001) | CIDA C5 அல்லது அதற்கு மேல் (கட்டிடங்களுக்கானவை) & NERDC | 2,000.00 | 500,000.00 |

2. 2023.03.16 அன்று பி.ப. 3.00 வரை போப்பெ போத்தல சபை அலுவலகத்தில் இதற்கான கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. மேற்படி கட்டிடத்திற்கான பதிவு அல்லது அதற்கு மேற்பட்ட பதிவுடைய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிற்கு இவ் ஒப்பந்தம் வழங்கப்படும். மேலும் ஒப்பந்தக்காரர்கள் இலங்கை நிர்மாணத்துறை சங்கத்தில் அங்கத்துவம் பெற்றிருத்தல் வேண்டும்.
4. குறித்த ஒப்பந்தக்காரர்கள் NERDC நிறுவனத்தின், தகனச்சாலை நிர்மாணிப்பு தொடர்பான பதிவைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் UP DRAUGHT தொழில்நுட்பம் தொடர்பான 05 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
5. இது தொடர்பான மேலதிக விபரங்களை வார வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் போப்பெ போத்தல பிரதேச சபையின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
6. அனைத்துக் கேள்விகளுடனும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணையமொன்று சமர்ப்பித்தல் வேண்டும். இப் பிணையமானது, இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அது நிபந்தனைகளற்ற மற்றும் உடன் மாற்றக்கூடியதாக இருத்தல் வேண்டும். இப்பிணையமானது, கேள்விப் படிவத்தின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரமாக இருத்தல் வேண்டும்.
7. கேள்விப் பிணையத்தின் செல்லுபடிக்காலமானது, 2023.06.17 வரையாகுதல் வேண்டும்.
8. கேள்விகளை உள்ளடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விகள் இரண்டு பிரதிகளாகத் தனித்தனியாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் இறுதியில் ஒருறையில் உள்ளிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
9. கேள்விகளின் செல்லுபடிக்காலம் 90 நாட்களாகும்.
10. பெறுகைக்குழுவின் தலைவரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

**2023.02.23**
**தலைவர்,**
**பெறுகைக் குழுத் தலைவர்,**
**போப்பெ போத்தல பிரதேச சபை,**
**கலேகான, காலி.**

**தொ.பே.** :- 091-2222437
**தொலைநகல்** :- 091-2231115
**மின்னஞ்சல்** :- bopepoddala@gmail.com
SP/G/RPPS/2021/001 5

**Trusted Marketplace of Classified Advertisers**
Sunday Observer adz it's what you want Classified
Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted
For 15 Words Rs. 500/-
* Cost of each additional word Rs. 20/-
Ramani - 077 7 278 948 / Gayani - 011 2 429 342/ 343 / Piyumi - 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

## விலைமனுக்கோரல் (IFB)

### பொது பாதுகாப்பு அமைச்சு
### இலங்கை பொலிஸ்

இலங்கை காவல்துறையின் கொள்முதல் குழுவின் தலைவரினால், பொலிஸ் தலைமையகத்தின் கட்டிடப் பிரிவின் பணிப்பாளரிடம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கு பொருத்தமான தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றது.

| இல. | வேலைத்திட்டம். | செயற்திட்ட காலம் (நாட்கள்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்) | மனுக்காப்புறுதிப் பிணைத்தொகை (ரூ.) | CIDA தர நிறுவனப் பதிவு | மீளச்செலுத்தப் படாத தொகை (ரூ). |
|---|---|---|---|---|---|---|
| 01 | Laying carpets for the internal road around C-46 official quarters at Police Officers' Mess in Keppetipola Mawatha, Colombo 06 **LA/B1(B)/04/18** | 60 | 2.91 | 30,000.00 | C7 அல்லது C8 மட்டும். (கட்டிடங்கள்) | 1,200.00 |
| 02 | Renovation of the section where the garage is located at official housing complex Ketawalamulla **LA/B1(B)/64/21** | 120 | 7.53 | 80,000.00 | C6 அல்லது C7 மட்டும். (கட்டிடங்கள்) | 2,750.00 |
| 03 | Renovation of Official Quarters No. 101/23 at the Official Housing Complex situated in Kew Road, Colombo 02 **LA/B1(B)/25/20** | 120 | 5.00 | 55,000.00 | C6 அல்லது C7 மட்டும். (கட்டிடங்கள்) | 2,000.00 |

01. மனுக்கோரலானது தேசிய மனுக்கோரல் போட்டி முறைக்கமைய இடம்பெறுகின்றது. இந்த திட்டங்களுக்கு பொது நிதி சுற்றறிக்கை எண் **04/2016 (ii)** விதிகள் பொருந்தும், மேலும் அந்த சுற்றறிக்கையின் விதிகளின்படி மாகாணத்திற்குள் பதிவுசெய்யப்பட்ட மனுதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. மேலே உள்ள அட்டவணையின் எண். 02 முதல் 03 வரையிலான திட்டங்கள் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டவை. அத்தகைய திட்டங்களுக்கான மனுக்களை கொள்வனவு செய்ய விரும்பும் மனுதாரர்கள் மனு திறக்கும் நேரத்தில் மனு ஆவணங்களுடன் இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்த PCA/03 சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
03. கொழும்பு 01 பொலிஸ் தலைமையகத்தில் அமைந்துள்ள பணிப்பாளர் (கட்டிடம்) அலுவலக தொலைப்பேசி எண் **0112013184** இற்கு அழைப்பினை ஏற்படுத்தி மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதுடன், மனு ஆவணங்களை, வாரத்தில் அலுவலக நாட்களில் **2023.02.23** ஆம் திகதி முதல் **2023.03.15** வரை காலை **09.00** மணி முதல் மாலை **03.00** மணி நேரம் வரை இலவசமாக பரிசீலனை செய்ய முடியும். மீள் செலுத்தப்படாத கட்டணத்தை பணிப்பாளருக்கு (கட்டிடம்) செலுத்துவதன் மூலம் மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
04 மனுக்கள் செல்லுபடியாகும் காலம் **91 நாட்கள்** வரையாகும்.
05. மேல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு நிகரான மனு பாதுகாப்பு செல்லுபடியாகும் காப்புறுதிப்பிணையுடன் மனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களிலிருந்து மட்டுமே பெற்றுக்கொண்ட "காவல் துறைத் தலைவர்" (IGP) என்ற பெயரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், அவை **2023.07.12** ஆம் திகதி வரை செல்லுபடியாகும். (மனு ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து **119 நாட்கள்** வரையாகும்).
06. முத்திரையிடப்பட்ட மனு ஆவணங்களை **இரண்டு பிரதிகளுடன் 2023.03.16 ஆம் திகதி** மு.ப.10.00 மணித்தியாலங்களுக்கு முன் **கொழும்பு 01 "பொலிஸ் தலைமையகம்" ஐந்தாம் மாடியில் அமைந்துள்ள கணக்காளர் (கட்டிடம்) அலுவலகத்தில்** வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

**இலங்கை காவல்துறையின் கொள்முதல் குழு சார்பாக,**
**பணிப்பாளர் (கட்டிடம்),**
**பொலிஸ் தலைமையகம்,**
**கொழும்பு 01.**

---

### இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
### ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்

## விலைமனுக்கோரல் (IFB)

### 50 எண்ணிக்கையிலான மேசை கணினிகளை (Desktop Computers) வழங்கல் மற்றும் பராமரித்தல்

### IFB இலக்கம் : DRP/ACC/07/05/2023

01. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திற்கு **மேசை கணினிகளை** (Desktop Computers) **வழங்க மற்றும் பராமரிப்பதற்கு** தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.
02. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும் (NCB)
03. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான மனுதாரர்கள் **வாரத்தில் வேலைநாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி** வரையான காலப்பகுதியினுள் வேலை நாட்களில் 0115226172 மூலம் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் கணக்காளரிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் மேலும் மனு ஆவணங்களை நிதிப்பிரிவில், **"சி" பகுதி, 12 வது மாடி, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், சுஹுருபாய, பத்தரமுல்லையில்** எமது அதிகாரப்பூர்வ வலைத்தளம் **(www.drp.lk)** மூலமாக **2023.02.23** முதல் **2023.03.16** வரையான காலப்பகுதியினுள் இலவசமாக பரிசீலனை செய்யலாம்.
04. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2023.02.23** ஆம் திகதியிலிருந்து **2023.03.16** ஆம் திகதி **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.03.00** மணி வரையான காலப்பகுதியினுள் எழுத்து மூல விண்ணப்பத்தை **பத்தரமுல்லை, சுஹுருபாயவில் அமைந்துள்ள ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் "சி" பகுதி, 12 வது மாடியில் கணக்காளரிடம் மீள் செலுத்தப்படாத கட்டணமாக** (ரூ.5,000.00) மனுக் கட்டணத்தை பணமாகச் செலுத்துவதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
05. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் **(அசல் மற்றும் நகல்) 2023.03.17** ஆம் திகதி **பி.ப.02.00** மணித்தியாலங்களுக்கு முன் உருப்படி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். அல்லது **கணக்கு கிளை, ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "சி" பகுதி, 12 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** எனும் முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். **மனுக்கள் கோரப்படும் திகதியில் இருந்து அல்லது நீட்டிக்கப்பட்ட திகதியிலிருந்து 77 நாட்கள் வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.** காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
06. மனு தொடர்பான முன்மனுகூட்டம் **2023.03.07 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு **ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள அரங்கம், "சி" பகுதி, 13 வது மாடி, சுஹுருபாய,** பத்தரமுல்லையில் இடம்பெறும்.
07 மனுக்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் IFB இலக்கம் என்பவற்றை குறிப்பிட வேண்டும். அனைத்து மனுக்களும் இலங்கையில் செயல்படும் ஏதேனும் உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்பட **ரூ.ஒரு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் (175,000.00)** மனுப் பாதுகாப்பு பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தலைவர்
திணைக்களத்தின் பெறுகைக் குழு,
**ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,**
12 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்லை.

The easiest & convenient way to send your
Marriage Proposal Ads,
classified@lakehouse.lk
SUNDAY OBSERVER Marriage Proposals
for 15 Words - Rs. 1,000/- Easy way to make your payment :- 000000377 Online Transfer
For Inquiries - Piyumi - 011 2 429 383 | Ramani - 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343

---

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் விதிகளுக்கமைய ரோயல் கிரவுன் டிரேடிங் (பிரைவட்) லிமிட்டட் ஆனது தனது பெயரை பெரகன் ஜப்பான் (பிரைவட்) லிமிட்டட் (PV 00214757) என 2023 பெப்ரவரி 10ம் திகதி மாற்றம் செய்ததாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

**செயலாளர்**

### பெயர் மாற்றம்

கம்பஹா மாவட்டத்தின் கடான பிரதேச செயலகப் பிரிவில் கடான கிழக்கு (63) கிராம சேவகர் பிரிவில் இலக்கம் 205/3/பி, புனித அந்தோனி மாவத்தை, கடான முகவரியில் வசிக்கும் ஷெய்னப் இத்ரீஸ் மறுபெயர் செய்னப் இத்ரீஸ் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை ரீடா ஷெ ரீன் கொஸ்டர் என்பதாகப் பயன்படுத்துவேன் என்பதனை இலங்கை குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிந்தருகின்றேன்.

**ரீடா ஷெரீன் கொஸ்டர்**

### நிறுவனத்தை இணைப்பதற்கான பொது அறிவிப்பு

2007ஆம் ஆண்டின் எண். 07, நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 9(1) இன் படி. குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் பெப்ரவரி 6, 2023 முதல் இணைக்கப்பட்டுள்ளது என்று இதன் மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

பெயர்:
**மெக்னஸ் என்ட் அம்ப்ரோஸ் குரூப் (பிரைவட்) லிமிட்டட்**

நிறுவனத்தின் எண்:
PV**00270818**

பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : 74/2, பொமலுவ வீதி, வடபுலுவ, கண்டி
அஞ்சல் குறியீடு: 20000

**அவிஷ்க குலரத்ன**
**நிறுவனத்தின் செயலாளர்**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

## பெறுகை அறிவித்தல்

### நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையின் உணவகத்தை நடாத்திச் செல்வதற்கான விலைமனுக் கோரல்

நாவலப்பிட்டி, மாவட்ட பொது வைத்தியசாலையின் உணவகத்தை ஒரு வருடகால எல்லைக்கு நடத்திச் செல்வதற்காக மற்றும் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையின் செயலமர்வுகளுக்காக உணவு பானங்களை வழங்கும் சேவைகளுக்காக தகைமையுடைய சிறந்த அனுபவமுள்ள நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களிடமிருந்து நாவலப்பிட்டி, மாவட்ட வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட விலைமனுக்களுடனான கேள்விகள் ஏற்கப்படும்.

02. 2023.02.23 முதல் 2023.03.04 வரை வேலை நாளில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.30 வரை மிளளிக்கப்படாத ரூ. 2000.00 கட்டணத்தை நாவலப்பிட்டி, மாவட்ட பொது வைத்தியசாலையின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்து நாவலப்பிட்டி, மாவட்ட பொது வைத்தியசாலையின் தலைமையகத்தில் குறித்த கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
03. பொறியிடப்பட்ட விலைமனுக்களுடனான கேள்விகள் 2023.03.10 பி.ப. 11.00 இற்கு முன் பதிவுத் தபாலில் பணிப்பாளர் மாவட்ட பொது வைத்தியசாலை நாவலப்பிட்டி என்ற முகவரிக்கு அனுப்பலாம் அல்லது தலைமையகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடலாம்.
04. கேள்விகளைத் திறத்தல் 2023.03.10 பி.ப. 11.30 இற்கு இடம் பெறும்
05. விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் நாவலப்பிட்டி, மாவட்ட பொது வைத்தியசாலை 'உணவகத்தை நடத்திச் செல்வதற்காக விலைமனுக்கள் 2023' என்று குறிப்பிடுதல் வேண்டும்.
06. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.
07. **மேலதிக விபரங்களுக்கு:** தொலைபேசி இலக்கம்: 054-2222261 மூலம் விசாரித்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**நாவலப்பிட்டி.**

---

### மினுவங்கொட நகரசபை

### மின்பிறப்பாக்கி இயந்திரத்தை வழங்கிப் பொருத்துவதற்கான கேள்வி கோரல்

மினுவாங்கொட நகரசபை தகனசாலைக்காக 12KVA வலுவுடைய மூன்றுசுற்று மின்பிறப்பாக்கி இயந்திரத்தை வழங்கிப் பொருத்துவதற்காக உள்ளூர் வழங்குநர்கள்/பிரதிநிதிகளிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்விப் படிவக் கட்டணத்தை காசாக செலுத்தி இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும் கேள்விப் படிவத்தின் மூலம் மாத்திரம் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகளை சமர்ப்பிக்கும்போது அட்டவணையில் தரப்பட்டுள்ள கேள்விப் பிணையுடன் சம்பந்தப்பட்ட கட்டணத்தை நகரசபை அலுவலகத்திற்கு காசாக செலுத்தி பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டு அல்லது அதற்காக அங்கீகரிக்கப்பட்ட வங்கிப் பிணையொன்றுடன் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

2023.03.15 பி.ப.3.00 வரை கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் 2023.03.16 பி.ப.2.00 வரை மட்டுமே. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் 2 பிரதிகளுடன் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென குறிப்பிடப்பட்டு, 02 உறைகளில் இட்டு, அந்த 2 உறைகளையும் கேள்வி சமர்ப்பிக்கப்படும் உறையில் இட்டு, அக்கேள்வி சமர்ப்பிக்கப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரையும் குறிப்பிட்டு "தலைவர், மினுவங்கொட நகர சபை" என்று குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். எந்த கேள்வியையும் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை மினுவங்கொட நகர சபையின் பெறுகைகுழுவின் பரிந்துரைக்கு அமைவாக மினுவங்கொட நகரசபைக்கு உரியது.

மேலதிக விபரங்களை தொலைபேசி இலக்கம் : 011-2295275 ஐ அழைத்து சபையின் செயலாளர் மூலம் அறிந்துகொள்ளலாம்.

**அட்டவணை**

| | செயற்றிட்டத்தின் பெயர் | கேள்விப் பிணை (ரு) | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (ரு) | கேள்விதாரர் உடனான முன் கலந்துரையாடல் |
|---|---|---|---|---|
| 01 | மினுவங்கொட நகர சபை தகன சாலைக்கான மின் பிறப்பாக்கி இயந்திரத்தை வழங்கிப் பொருந்துதல் | 50,000.00 | 2000.00 | 2023.03.07 பி.ப.2.00 |

**எச்.கே.என்.நீல் ஜயசேக்கர**
**தலைவர்,**
**மினுவங்கொட நகரசபை**
**2023.02.23**

---

### பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
### ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை

### பலகை மரங்களை வெட்டிச் சாய்பதற்கான பெறுகை அறிவித்தல்

ஜனதா தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான ரஹதுன்கொட மற்றும் கிரேட்வெலி தோட்டங்களில் உள்ள கீழ்க்காணும் பலகை மரங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தோட்டம் | பிரிவு | துறைசார் இலக்கம் | மர வகைகள் | மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| ரஹதுன்கொட ஹேவாஹெட்ட | ரிவடேல் | 02 | இயூகலிப்டஸ் (கலப்பு) | 400 |
| கிரேட்வெலி தெல்தொட்ட | பட்டவீர | 12 | இயூகலிப்டஸ் (கலப்பு) | 28 |
| | | 05 | இயூகலிப்டஸ் (கலப்பு) | 35 |
| | | 13 | இயூகலிப்டஸ் (கலப்பு) | 93 |

கேள்வி விண்ணபங்களை குறித்த தோட்ட அலுவலகங்களிலிருந்து ரூ.25,000/- மீளளிக்கப்படாத கேள்விக்கட்டணத்தை செலுத்தி 2023.02.23 முதல் 2023.03.15 பி.ப.3.00 வரை வாரத்தின் வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 2023.03.16 பி.ப.2.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது இதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினம் அந்த நேரத்திலேயே திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை**
**55/75, வொக்ஷோல் ஒழுங்கை,**
**கொழும்பு - 02**

# கேள்வி அறிவித்தல்

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, வடமாகாணம்.**
**உழவு இயந்திரங்கள் மற்றும் உழவு இயந்திரப் பெட்டிகளுக்கான பெறுகை.**

1. கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள புதிய உழவு இயந்திரங்கள் மற்றும் உழவு இயந்திரப் பெட்டிகளுக்கான பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, வடமாகாணம் சார்பில் உள்ளூர் அதிகார பெறுகைக் குழு தலைவர் கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தவிசாளர்/ வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் (தொலைபேசி, தொலைநகல்** : 021 205 8867) இல் இருந்து மேலதிக தகவல்களை **2023.02.23** ஆம் திகதியிலிருந்து **2023.03.09** ஆம் திகதி வரை **09:00** மணி முதல் **15:30** மணி வரை வரையான காலப்பகுதியில் பொது வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அதே காலப் பகுதியில் மேற்குறித்த நேரத்தில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
   தொலைபேசி: 021 205 8867, 021 205 8883
   தொலைநகல்: 021 205 8866
4. குறிப்பிட்ட வகை துறை குறியீட்டுப்பெயரில் விற்பனை மற்றும் நாடளாவியரீதியில் பராமரித்தல் தொடர்பாக குறைந்தபட்சம் மூன்று வருட அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும். மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணத்தில் வழங்கப்படுகின்றது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்தினை அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் பூரணமான ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணமொன்றை தலைவர், **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** எனும் இடத்திலிருந்து **2023.02.23** ஆம் திகதியிலிருந்து **2023.03.09 ஆம்** திகதி வரை **09:00** மணியிலிருந்து **14:00** மணிக்கிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2,000.00** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, மற்றைய பிரதியை தனித்தனி உறைகளிட்டு, இடதுபக்க மேல்மூலையில் கேள்வி ஆவண இலக்கத்தினை குறிப்பிட்டு **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** எனும் முகவரிக்கு **2023.03.09 ஆம்** திகதி **14:00** மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். இலத்திரனியல் முறையிலான பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் **2023.03.02** ஆம் திகதி 14:00 மணிக்கு **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** தலைமையலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றலாம்.
8. கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிந்து **77 நாட்கள்** வரை செல்லுபடியாகும். அத்துடன் கேள்விப் பிணைவைப்பானது நிபந்தனையற்றதும் தேவைக்கேற்ப வங்கி உத்தரவாதமாகக் காணப்படுவதுடன் **2023.06.22** ஆம் திகதி வரைசெல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
9. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு அமையும்.
10. தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** என்னும் முகவரியில் வாகனங்களை விநியோகித்தல் வேண்டும்.

| தொ. இல | கேள்ளி ஆவண இலக்கம் | பொருளின் பெயர் | ஒப்பந்தக் காலம் | கேள்வி செல்லுபடிக் காலம் | கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/41(13)/3/1/15/ (NCB) /2023(1) | Tractors (04 nos) | 1 month | 77 Days | 275,000.00 | 22.06.2023 |
| 2 | NP/14/41(13)/3/1/15/ (NCB) /2023(2) | Trailers (04 nos) | 1 month | 77 Days | 65,000.00 | 22.06.2023 |

தலைவர்
உள்ளூர் அதிகார பெறுகைக் குழு
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
வடக்கு மாகாணம்

**23.02.2023**

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/02/ PT/6434(EL) | Spares for the Medium Voltage Switchgear Panelsof ZPMC Cranes | 80,000.00 | 1,000.00 | 2023.03.23 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6435(MP) | Hydraulic SNAG Cylinder Assy. & Repair Kits for Anti SNAG & T/L/S Device of ZPMC 65 T on STS Cranes at ECT | 40,000.00 | 1,000.00 | 2023.03.23 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6437(MP) | Main Hoist Wire Ropes for Mitsui RTG Cranes | 108,000.00 | 3,500.00 | 2023.03.23 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/ PT/6438(MP) | 30 Nos. Main Hoist Wire Ropes Ø26MM X L280M for ZPMC RTG Cranes | 150,000.00 | 3,500.00 | 2023.03.23 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/ PT/6441(MP) | 08 Nos. Main Hoist Wire Rope 28MM DIA and 540M Length for 50 T ZPMC STS Cranes | 144,000.00 | 3,500.00 | 2023.03.28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6440(EL) | Spares for Public Address System of ZPMC Cranes | 40,000.00 | 1,000.00 | 2023.03.28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/ PT/6439(MP) | 24 Nos. Main Hoist Wire Ropes for HH RMT Cranes at JCT (14 MM X 85 M.S- Lay & Z-Lay) | 20,000.00 | 1,000.00 | 2023.03.28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/22/ PT/20/009-F | 35 Nos. Desk Top Computer | 253,000.00 | 3,500.00 | 2023.03.16 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/22/ PT/17/030 | CCTV Items | 50,000.00 | 1,000.00 | 2023.03.16 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/12/051 | 40 Nos. Wheel Rim Tubeless Size 8.25 X 22.5 ISO for the Terberg Yard Tractor | 25,000.00 | 1,000.00 | 2023.03.16 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/14/051 | Spares for stern Tube Sealing Arrangement of M/T Kanchadewa | 30,000.00 | 1,000.00 | 2023.03.17 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குனரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 பெப்ரவரி 24 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள் : 2381652, 2470443.**

# விலைமனுக் கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனுக் கோரல் முடிவு திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம் ICB NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/031** வாடகைக்கு மோட்டார் கார் /டபிள்கப் (திட்டமிடல்)- பிரதம மின் பொறியியலாளர் (சக்தி முகாமைத்துவம்) (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை (இரண்டு வருட காலம்) | 08-03-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித்தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவுசெய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணிமுதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்து மூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி.சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை.பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 500/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377
Call :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## விலைமனுக்கோரல்

### சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான விலைமனுக்கோரல் - 2023

01. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் அலுவலகத்தின் சிற்றுண்டிச்சாலையை 2023.05.01 ஆம் திகதி முதல் ஒருவருடகாலத்திற்கு நடாத்திச்செல்வதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
    - குறைந்தது 2 வருட காலங்கள் அரச அல்லது அரசுடன் இணைந்த 02 நிறுவனங்களில் அண்மித்த காலப்பகுதியில் சிற்றுண்டிச்சாலை நடாத்தியிருக்க வேண்டும். அவற்றுள் ஒரு நிறுவகத்தில் குறைந்தது 02 வாருட காலம் சேவை வழங்கியிருத்தல் வேண்டும்.
    - அரச ஒப்பந்த நிபந்தனைகளை நிராகரித்து அபரகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருக்காதவராக இருத்தல் வேண்டும்.

02. இதற்காக ஆர்வமுள்ள மனுதாரர்கள் மீள் செலுத்தப்படாத **ரூ.1,000/-** கட்டணம் மற்றும் மீள்செலுத்தப்படும் கட்டணம் **ரூ.5,000/-** னை **2023.02.23** ஆம் திகதி முதல் **2023.03.15** ஆம் திகதி அலுவலக **பி.ப.09.00 முதல் பி.ப.3.00** மணி வரை **இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின்** சரப்பிடம் செலுத்துவதன் மூலம் முகவரி மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் மனு ஆவணக்கட்டணத்தை செலுத்துவதன் மூலம் நிர்வாகப் பிரிவில் ஆவணங்களை பரிசீலனை செய்யமுடியும்.

03. மனு கோரல் நேரம் **2023.03.16** ஆம் திகதி **பி.ப.2.00** ஆகும். அதன் பின்னர் கிடைக்கபெறும் மனுக்கள் நிராகரிக்கப்படும். முடிவடைந்த பின்னர் உடனடியாக, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

04. விலைமனுக்கோரலின் **இரண்டு பிரதிகளுடன் (அசல்** மற்றும் **நகல்)** முறையாக பூர்த்தி செய்யப்பட்ட மனு அடங்கிய கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் **"சிற்றுண்டிச்சாலை விலைமனுக்கோரல்"** எனக் குறிப்பிட்டு மனுக்கள் முடிவடையும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு **"சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான விலைமனுக்கோரல் - 2023", இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைப்பதன் மூலமாகவோ அல்லது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் வைக்கப்பட்டுள்ள மனுப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

05. இது தொடர்பான மேலதிக விபரங்களை **011-2669789** எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகப் பணிப்பாளர் (நிர்வாகம்) பெற்றுக் கொள்ள முடியும்.

**தலைவர்,**
**சிரேஷ்ட கொள்முதல் குழு,**
**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**
**இல-276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 8.**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர் /கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ME/MT/BN/ 28/2023 | கொழும்பு-13, கொட்டாஞ்சேனை, குணானந்த மாவத்தை வீடமைப்புத் திட்டத்தின் உத்தேச புதுப்பித்தல் வேலைகள் | 5,750.00 | 105,278.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | C 06 மற்றும் C 07 CIDA தரத்தைக் கொண்ட கட்டிட ஒப்பந்தக் காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (செயற்றிட்டங்கள்) தொலைபேசி: 011-2692403 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 -** கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

➢ வட்டார அலுவலகம் 04,
இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
கொழும்பு 06.

➢ வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,
மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணைய தளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@Colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 -** நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2023-03-15ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. கொடுப்பனவுகளை 2023-03-15ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2023.10.12ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.09.12ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். ரொக்கப் பணமாகச் செலுத்தப்படும் பிணை முறிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023-03-16ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2023-03-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

ஊ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட விலைமனுக்களுக்கு விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

it's what you want
www.adz.lk

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

| | |
|---|---|
| **Loan No. and Title** | 3699-SRI: Science and Technology Human Resource Development Project |
| **Contract No.** | **Title** |
| **MOE/STHRD/CRG/ R2/SJ/01/E1:** | Procurement of supply, delivery and installation of Elevated Temperature Thermal Conductivity Measuring Apparatus for the Department of Civil Engineering (Fire Safety of Building ) **(the "Goods")** |
| **MOE/STHRD/CRG/ R2/SJ/01/E2** | Procurement of supply, delivery and installation of Laser Flash Apparatus for the Department of Civil Engineering (Fire Safety of Buildings), Faculty of Engineering, University of Sri Jayawardenepura) **(the "Goods")** |
| **MOE /STHRD/CRG/R2/ SJ/01/E3** | Procurement of supply, delivery and installation of Thermo Gravimetric Analyzer (TGA) and Differential Scanning Calorimetry (DSC) Apparatus for the Department of Civil Engineering (Fire Safety of Buildings) (Faculty of Engineering, University of Sri Jayawardenepura **(the "Goods")** |
| **MOE/STHRD/CRG/ R2/SJ/01/E4** | Procurement of supply, delivery and installation of Thermo mechanical Analyzer for the Department of Civil Engineering (Fire Safety of Buildings) Faculty of Engineering , University of Sri Jayawardenepura **( the "Goods")** |
| **MOE/STHRD/CRG/ R2/SJ/01/E5** | Procurement of supply, delivery and installation of Electric Furnace for the Department of Civil Engineering (Fire Safety of Buildings) Faculty of Engineering , University of Sri Jayawardenepura. **(the "Goods")** |
| **Deadline for submission of Bids** | **31.03.2023 10:00 hrs (local time)** |

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) 145 மில்லியனுக்கு சமமான நிதியை கல்வி அமைச்சின் கீழுள்ள விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட அமுல்நடாத்தலின் (STHRD Project) ஆகுசெலவிற்காக பெற்றிருப்பதுடன், இந்த நிதியிடல் பெறுகையின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. விலைமனுக்கோரலில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுள்ள வள நாடுகளின் விலைமனுதாரர்கள் பங்கு பெற்றலாம்.

2. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக (''பண்டங்கள் என அழைக்கப்படுவது'')பொறியியல் பீட, சிவில் பொறியியல் திணைக்களத்திற்காக மேலே குறிப்பிட்டுள்ள பெறுகைகளுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக (''கொள்வனவுக்காரர் என அழைக்கப்படுவது'') விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலப்பகுதியானது 90 நாட்களாகும்.

3. இந்த விலைமனுக்கோரலில் பங்கு பெறுவதற்காக விலைமனுதாரர் பின்வரும் முக்கிய தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

| பெறுகை செயற்பாட்டு இலக்கங்கள் மற்றும் விளக்கம் | கடந்த 5 வருடங்களில் பிரதான வழங்குநராக கீழே குறிபிட்டுள்ள பெறுமதியில் ஆகக் குறைந்தது 2 ஒப்பந்தங்களை 6 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மையில் சித்திகரமாக பூர்த்தி செய்திருத்தல்- இ.ரூபாவில். (2018.01.01 ஆம் திகதியிலிருந்து 2022.12.31 ஆம் திகதி வரையிலான 5 வருடங்களுக்கானது) | கடந்த 5 வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்டு கொண்டிருக்கும் ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள பின்வருவனவற்றிக்கான ஆகக் குறைந்த வருடாந்த சராசரி நிதிப்புரள்வு. (2018.01.01 ஆம் திகதியிலிருந்து 2022.12.31 ஆம் திகதி வரையிலான 5 வருடங்களுக்கானது) - இ.ரூபாவில். |
|---|---|---|
| MOE/STHRD/CRG/R2/SJ/01/E1: Elevated Temperature Thermal Conductivity Measuring Apparatus | 30 மில்லியன் | 48 மில்லியன் |
| MOE/STHRD/CRG/R2/SJ/01/E2: Laser Flash Apparatus | 40 மில்லியன் | 60 மில்லியன் |
| MOE/STHRD/CRG/R2/SJ/01/E3: Thermo Gravimetric Analyzer (TGA) and Differential Scanning Calorimetry (DSC) Apparatus | 15 மில்லியன் | 22 மில்லியன் |
| MOE/STHRD/CRG/R2/SJ/01/E4: Thermo mechanical Analyzer | 40 மில்லியன் | 60 மில்லியன் |
| MOE/STHRD/CRG/R2/SJ/01/E5: Electric Furnace | 20 மில்லியன் | 30 மில்லியன் |

4. பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக்கோரலானது ஆஅவ இன் பண்டங்களின் பெறுகை தனி-கட்ட – ஒரு-உறை நடைமுறைக்கமைவாக நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கு பெற்றலாம்.

5. மேலதிக தகவலை பெறுவதற்காகவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிப்பதற்காகவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**பெறுகைக்கான சிரேஷ்ட அலுவலர்,**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**பொறியியல் பீடம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**இல. 41, லும்பினி அவென்யு, இரத்மலான,**

**இலங்கை ZIP code: 10390.**
**தொலைபேசி: 071-4415052/077-2846811/011-2721271**
**மின்னஞ்சல்: spopiu_foe@sjp.ac.lk**

6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர் ஒவ்வொரு ஆவணத்திற்கும் ரொக்கப் பணத்தில் ஐயாயிரம் இலங்கை ரூபாவை மாத்திரம் (5000 இ.ரூபா) செலுத்திய பின்னர், மேலே குறிப்பிட்டுள்ள பெறுகை இலக்கங்களை குறிப்பிட்டு விலைமனுக்கோரல் ஆவணங்களை கோரி மேலேயுள்ள முகவரிக்கு எழுதுதல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் 2023.03.30 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையுமே வேலை நாட்களில் வழங்கப்படும். இழப்பு அல்லது தாமதமான ஒப்படைத்தல் ஆகியவற்றிற்கான கடப்பாடானது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

7. விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையின் மூலப்பிரதியுடன் 2023.03.31 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு உங்கள் விலைமனுவை ஒப்படைக்கவும்.

**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
**STHRD செயற்றிட்டம்,**
**பொறியியல் பீடம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**இரத்மலான.**

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் ஒவ்வொரு பெறுகைக்கும் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் ஒரு உறையில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு அடையாளமிடப்படல் வேண்டும்.

| Contract No. | Title |
|---|---|
| **MOE/STHRD/CRG/R2/ SJ/01/E1:** | Procurement of supply, delivery and installation of Elevated Temperature Thermal Conductivity Measuring Apparatus for the Department of Civil Engineering (Fire Safety of Building ) |
| **MOE/STHRD/CRG/R2/ SJ/01/E2** | Procurement of supply, delivery and installation of Laser Flash Apparatus for the Department of Civil Engineering (Fire Safety of Buildings), Faculty of Engineering, University of Sri Jayawardenepura) |
| **MOE/STHRD/CRG/R2/ SJ/01/E3** | Procurement of supply, delivery and installation of Thermo Gravimetric Analyzer (TGA) and Differential Scanning Calorimetry (DSC) Apparatus for the Department of Civil Engineering (Fire Safety of Buildings) (Faculty of Engineering, University of Sri Jayawardenepura ( |
| **MOE/STHRD/CRG/R2/ SJ/01/E4** | Procurement of supply, delivery and installation of Thermo mechanical Analyzer for the Department of Civil Engineering (Fire Safety of Buildings) Faculty of Engineering , University of Sri Jayawardenepura |
| **MOE/STHRD/CRG/R2/ SJ/01/E5** | Procurement of supply, delivery and installation of Electric Furnace for the Department of Civil Engineering (Fire Safety of Buildings) Faculty of Engineering , University of Sri Jayawardenepura |

2023.03.10 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு இரத்மலான, லும்பினி அவென்யு 41 ஆம் இலக்கத்திலுள்ள பொறியியல் பீட சபை அறையில் அனைத்து பெறுகைகளுக்குமான விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.

8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரத்தின் பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**நுகேகொட.**

**திகதி: 23.02.2023**

# இலங்கை ஒருநாள் குழாத்தில் மத்தியூஸ்

## உத்தியோகபூர்வ அணி இன்று அறிவிப்பு




நியூசிலாந்துக்கு எதிராக வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான இலங்கை குழாத்தில் முன்னாள் அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் சேர்க்கப்படவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாத ஆரம்பத்தில் நியூசிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணி இரு டெஸ்ட் போட்டிகளைத் தொடர்ந்து மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடவுள்ளது. இந்த ஆண்டு கடைசியில் இந்தியாவில் நடைபெறும் ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டிக்கு இலங்கை அணி நேரடி தகுதி பெறுவதற்கு இந்த ஒருநாள் தொடர் தீர்க்கமானதாக உள்ளது.

இந்நிலையில் இலங்கை ஒருநாள் அணியில் மத்திய வரிசை பலவீனமடைந்திருக்கும் நிலையில் அனுபவ வீரர் மத்தியூஸை அணியில் இணைப்பது குறித்து சாதகமான கருத்துகள் வெளியாகி வருகின்றன.

இதனை ஒட்டி இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரின் முதல் இரு போட்டிகளிலும் மத்தியூஸ் இடம்பெற்றார். இதன் முதல் போட்டியில் மத்தியூஸ் 13 ஓட்டங்களையே பெற்றபோதும் இரண்டாவது போட்டியில் 53 பந்துகளில் 4 பௌண்டரிகளுடன் 50 ஓட்டங்களை பெற்றார்.

மத்தியூஸ் இதுவரை 218 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடி 3 சதங்கள் 40 அரைச்சதங்களோடு 5835 ஓட்டங்களை பெற்றுள்ளார். எனினும் அவர் இலங்கை அணிக்காக கடைசியாக ஒருநாள் போட்டியில் ஆடியது 2021 மார்ச் 10 ஆம் திகதி மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியிலாகும்.

இந்நிலையில் மத்தியூஸ் ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்குத் திரும்ப அவருக்கு வாய்ப்பு அளிப்பதற்கு தேர்வாளர்கள் விரும்புவதாக இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழு தலைவர் பிரமோத்ய விக்ரமசிங்க அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் இளம் ஒருநாள் அணிக்கு மத்தியூஸின் பரந்த அனுபவம் சாதகமாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இலங்கை குழாம் இன்று (23) காலை அறிவிக்கப்படும் என்று கிரிக்கெட் சபை வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது. இதில் மத்தியூஸ் தவிர, இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் சோபித்த ஆரம்ப துடுப்பாட்ட வீரர் லசித் குரூஸ்புள்ளே உட்பட இளம் வீரர்கள் சிலருக்கும் வாய்ப்பு வழங்கப்படவிருப்பதாகவும் இலங்கை கிரிக்கெட் உயர் அதிகாரி தெரிவித்தார்.

24 வயதான வலது கை துடுப்பாட்ட வீரர் குரூஸ்புள்ளே இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிரான இரண்டாவது உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் சர்வதேச போட்டியில் 67 பந்துகளில் 12 பௌண்டரிகளுடன் 73 ஓட்டங்களை பெற்றார். தவிர அவர் இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிரான இரண்டாவது உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் சதம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## விமானப்படை சைக்கிளோட்ட போட்டி மார்ச் 2இல் ஆரம்பம்

இலங்கை விமானப் படையின் 72 ஆவது ஆண்டு நிறைவுக்கு இணையாக 24ஆவது முறையாக விமானப் படை சைக்கிளோட்டப்போட்டி வரும் மார்ச் 2,3 மற்றும் 4 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இலங்கை சைக்கிளோட்ட சம்மேளனத்துடன் இணைந்து இலங்கை விமானப் படையால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் விமானப்படை சைக்கிளோட்டப் போட்டிக்காக "நிப்பொன் பெயின்ட்" நிறுவனம் பிரதான அனுசரணை வழங்குவதோடு அபான்ஸ், மெலிபன் மற்றும் டெலிகொம் மொபிடெல் நிறுவனங்கள் இணை அனுசர வழங்குகின்றன.

இலங்கையின் முன்னணி சைக்கிளோட்டப் போட்டியாக மாறியிருக்கும் விமானப் படை சைக்கிளோட்டப் போட்டி ஆடவர் மற்றும் மகளிர் இரு பிரிவுகளிலும் நடைபெறவுள்ளது. இதில் மூன்று நாட்கள் நடைபெறும் ஆடவர் பிரிவு போட்டிகள் கொழும்பில் ஆரம்பித்து அநுராதபுரத்தில் நிறைவடையவுள்ளது. போட்டியின் மொத்த தூரம் 396 கி.மீற்றர்களாகும். மகளிர் போட்டி ஒரு நாளைக்கு மட்டுப்படுத்தப்பட்டு இடம்பெறவுள்ளது.



படம்: கயான் புஷ்பிக

போட்டிக்கு கழக மட்டத்தில் விண்ணப்பங்கள் ஏற்கப்படுவதோடு https://www.airforce.lk/ghps_23/ என்ற முகவரியில் வரும் பெப்ரவரி 27 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும்.

இம்முறை போட்டிகளில் ஆடவர் பிரிவில் 180 வீரர்கள் வரையும் மகளிர் பிரிவில் 35 வீரர்கள் வரையும் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் போட்டியில் ஆடவர் பிரிவில் முதலிடம் பெறுபவருக்கு 400,000 ரூபா மற்றும் மகளிர் பிரிவில் முதலிடம் பெறுபவருக்கு 100,000 ரூபா பரிசு வழங்கப்படவுள்ளது.

## பாக். பிரீமியர் லீக்கிலிருந்து வனிந்து ஹசரங்க விலகல்

இலங்கை அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்கவின் பணிச்சுமையை குறைப்பதற்கு இலங்கை கிரிக்கெட் சபை திட்டமிட்டிருக்கும் நிலையில் பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் குவெட்டா கிளாடியேட்டர்ஸ் அணியுடன் அவர் இணைய மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்தத் தொடரின் முதல் ஆறு போட்டிகளில் ஆடிய பின்னர் மார்ச் 3 ஆம் திகதி அவர் இலங்கை திரும்புவார் என கூறப்பட்ட நிலையில் தொடர் முழுவதும் அவர் இடம்பெற மாட்டார் என அந்த அணி குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில் கிளாடியேட்டர்ஸ் அவருக்கு மாற்று வீரரை தேடி வருகிறது.



உள்ளூரில் தேசிய சுப்பர் லீக் போட்டி மற்றும் நியூசிலாந்தில் சர்வதேச தொடரில் ஆட வேண்டிய நிலையில் ஹசரங்க (பாகிஸ்தானில் ஆட) தடையில்லா சான்றிதழைக் கோரவில்லை என்று இலங்கை கிரிக்கெட் தலைமை நிர்வாக அதிகாரி ஆஷ்லி டி சில்வா, கிரிக்கின்போ இணையதளத்திற்கு தெரிவித்துள்ளார்.

எனினும் பணிச்சுமைக்கு அப்பால் அதிக வருவாய் ஈட்டக் கூடிய எதிர்வரும் இந்திய பிரீமியர் லீக் தொடரை கருத்தில் கொண்டு அவர் இந்த முடிவை எடுத்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இதேநேரம் பாகிஸ்தான் பிரீமியர் லீக்கில் ஜோர்டன் கொக்ஸுக்கு பதில் லாகூர் கலன்டர்ஸ் அணியில் ஒப்பந்தமான குசல் மெண்டிஸும் இம்முறை தொடரில் பங்கேற்க மாட்டார் என குறிப்பிடப்பட்டுள்ளது. குசல் மெண்டிஸ் இலங்கையின் நியூசிலாந்து சுற்றுப்பயணத்திற்கு தயாராகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எயிட்ஸ் நோயில் இருந்து மேலுமொருவர் குணமடைவு

எயிட்ஸ் நோயில் இருந்து உலகின் மூன்றாவது நபர் ஒருவர் குணமடைந்துள்ளார். இரத்தப் புற்று நோய்க்கு சிகிச்சை பெற்றபோதே அந்த ஜெர்மன் நாட்டவர் எயிட்ஸ் நோயில் இருந்து விடுதலை பெற்றுள்ளார்.

53 வயதான அந்த ஆடவருக்கு எச்.ஐ.வி தொற்றி இருப்பதாக 2008ஆம் ஆண்டு உறுதிசெய்யப்பட்டது. அவருக்குப் பின்னர் இரத்தப் புற்றுநோய் இருப்பதாக 2011ஆம் ஆண்டில் உறுதியானது.

2013ஆம் ஆண்டில் அவருக்கு மூல உயிரணு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. மூல உயிரணுக்களில் உருமாற்றம் பெற்றிருந்த ஓர் அரிய மரபணு இருந்தது. அது அந்த ஆடவரின் உடலில் எச்.ஐ.வி வைரஸ் பாதிப்பை நிறுத்த உதவியதாக நேச்சர் மெடிசின் எனும் சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டது. இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் ஆடவரிடம் எயிட்ஸ் நோய் இல்லை என்பது உறுதிசெய்யப்பட்டது.



முன்னதாக இதேபோன்ற மூல உயிரணு மாற்று அறுவை சிகிச்சை செய்துகொண்ட பெர்லின் மற்றும் லண்டனைச் சேர்ந்த மேலும் இருவர் இவ்வாறு எயிட்ஸ் நோயில் இருந்து முழுமையாக குணம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க நகரில் சாதி பாகுபாட்டுக்குத் தடை



சாதி அடிப்படையிலான பாகுபாட்டுக்கு வெளிப்படையாக தடை விதிக்கும் அமெரிக்காவின் முதல் நகராக சியாட்டில் பதிவாகியுள்ளது.

வொஷிங்டன் மாநிலத்தில் உள்ள இந்த மாநகரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பாகுபாட்டு எதிர்ப்புச் சட்டத்தில் சாதி அமைப்பு சேர்க்கப்பட்டுள்ளது.

61 என்ற வாக்கு வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்ட இந்த அவசரச் சட்டத்தை ஆதரிப்பவர்கள், சாதி அடிப்படையிலான பாகுபாடு, தேசிய மற்றும் மத எல்லைகளை மீறுவதாகவும், அத்தகைய சட்டம் இல்லாமல், சாதிய பாகுபாட்டை எதிர்கொள்பவர்களை பாதுகாக்க முடியாது என்றும் தெரிவித்தனர்.

சியாட்டில் நகர சபையில் இந்து பிரதிநிதி ஒருவரால் ஒரு முன்மொழிவு அறிமுகப்படுத்தப்பட்டது, அது இந்திய வம்சாவளி மக்களிடையே விவாதத்தைத் தூண்டியது. இது தொடர்பாக தெற்காசிய சமூகத்தினரிடையே மாறுபட்ட கருத்து காணப்படுகின்றது. இந்த சமூகத்தின் மக்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும், அவர்கள் செல்வாக்கு மிக்க குழுவாக காணப்படுகிறார்கள். அமெரிக்காவில் 42 இலட்சத்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள் உள்ளனர்.

இந்தியாவில் சாதிய அமைப்பு 3,000 ஆண்டுகளுக்கு மேல் பழைமையானது என்றபோதும் அந்நாட்டில் சாதி அடிப்படையிலான பாகுபாடு 1948 ஆம் ஆண்டில் தடைசெய்யப்பட்டது மற்றும் 1950 இல் இந்தக் கொள்கை அரசியலமைப்பிலும் சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# புட்டினின் அணு எச்சரிக்கை இடையே பைடன் வார்சோவில் முக்கிய சந்திப்பு

முக்கியம் வாய்ந்த அணு ஆயுத கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தில் இருந்து ரஷ்யா விலகிக் கொண்ட நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேட்டோவின் கிழக்கு பிராந்திய தலைவர்களை நேற்று சந்தித்துள்ளார்.

ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்து நாளையுடன் (24) ஓர் ஆண்டு பூர்த்தியான நிலையில் பைடன் கடந்த திங்கட் கிழமை எதிர்பாராத விஜயமாக போலந்து தலைநகர் வார்சோ சென்றடைந்தார்.

பனிப்போருக்குப் பின்னர் ரஷ்யா மற்றும் மேற்கத்திய நாடுகள் இடையே பதற்றம் உச்சம் பெற்றிருக்கும் சூழலில் வார்சோவில் செவ்வாயன்று (21) உரை ஒன்றை நிகழ்த்திய பைடன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் போன்ற "சர்வாதிகாரிகளை" எதிர்க்க வேண்டும் என்றார்.

பைடன் உரைக்கு சில மணி நேரத்திற்கு முன்னர் மொஸ்கோவில் முக்கிய உரை ஒன்றை நிழ்த்திய புட்டின், மேற்கத்தேய சக்திகளை கடுமையாக சாடினார். அத்தோடு அணு ஆயுத கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தில் இருந்து தற்காலிகமாக விலகுவதாக அறிவித்த புட்டின், புதிய அணு ஆயுத சோதனைகளை மேற்கொள்வதற்கான சாத்தியங்கள் பற்றியும் பேசினார்.

இந்நிலையில் வார்சோவில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் வைத்து அமெரிக்க ஜனாதிபதி, நேட்டோவின் கிழக்கு பிராந்தியத்தின் ஒன்பது நாடுகளைச் சேர்ந்த தலைவர்களை சந்தித்தார். பனிப்போர் காலத்தில் மொஸ்கோவின் ஆதிக்கத்தில் இருந்த இந்த நாடுகள் அதன் பின் மேற்குலக இராணுவ கூட்டணியில் இணைந்தமை குறிப்பிடத்தக்கது.





இதில் பெரும்பாலான நாடுகள் ரஷ்ய படையெடுப்பில் உக்ரைனுக்கு இராணுவ உதவிகளை வழங்கி வரும் நிலையில் வான் பாதுகாப்பு அமைப்பு உட்பட உக்ரைனுக்கு மேலதிக உதவிகளை வழங்கவும் இந்த நாடுகள் கோரி வருகின்றன.

இந்த நாடுகளின் பாதுகாப்புக்கு உறுதி அளித்திருக்கும் பைடன் உக்ரைனின் பாதுகாப்புக் குறித்தும் வாக்குறுதி வழங்கி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுவீடன் மற்றும் பின்லாந்துக்கும் விரிவாக்கம் அடைந்து வரும் நேட்டோவை பெரும் அச்சுறுத்தலாக ரஷ்யா கருதுகிறது. அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான அணு அயுத கட்டுப்பாட்டு ஒப்பந்தம் 2010 ஆம் ஆண்டு கைச்சாத்தானது. 2011 ஆம் ஆண்டு தொடக்கம் அமுலுக்கு வந்த இந்த ஒப்பந்தம் பைடன் ஆட்சிக்கு வந்த பின் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. தற்போது அதன் ஆயுள் காலம் 2026 வரை உள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி 1550 அணு ஆயுதங்கள் மற்றும் அத்தகைய ஆயுதங்களை ஏந்தி நீண்ட தொலைவு பாயக்கூடிய 700 ஏவுகணைகள் ஆகிவற்றுக்கு மேல் இருப்பு வைத்துக்கொள்வதில்லை என்று இரு நாடுகளும் உறுதியளித்தன.

இந்த வரம்பு மீறப்படாததைக் கண்காணிப்பதற்காக இரு நாட்டு அணுசக்தி மையங்களிலும் ஆண்டுதோறும் 18 முறை நிபுணர்கள் பரஸ்பரம் ஆய்வு செய்வதற்கும் இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது.

எனினும், கொரோனா நெருக்கடி காரணமாக இந்த பரஸ்பர ஆய்வு நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டன. ஆய்வுகளை மீண்டும் ஆரம்பிப்பதாக அமெரிக்கா–ரஷ்யா இடையே எகிப்தில் வரும் நவம்பர் மாதம் பேச்சுவார்த்தை நடைபெறுவதாக இருந்தது. ஆனால் அந்த திட்டத்தை ரஷ்யா தள்ளி வைத்தது. இது தொடர்பான பேச்சுவார்த்தைக்கான புதிய திகதியை இரு தரப்புமே பரிந்துரைக்கவில்லை.

உக்ரைன் போர் காரணமாக அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே அணு ஆயுதப் போர் மூள்வதற்கான அபாயம் கடந்த 60 ஆண்டுகளுக்குப் பின் மிக அதிகமாக இருப்பதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் அமெரிக்காவும் ரஷ்யாவும் இந்த ஒப்பந்தத்தை மீண்டும் முழுவீச்சில் பின்பற்ற வேண்டும் என்று ஐக்கிய நாட்டு சபை கூறுகிறது. ரஷ்யா அந்த அணுவாயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்திலிருந்த தற்காலிகமாக விலகியது குறித்து நேட்டோ கூட்டணித் தலைவர் யென்ஸ் ஸ்டோல்ட்டன்பர்க் கவலை தெரிவித்தார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்டனி பிளிங்கன் ரஷ்யாவின் நடவடிக்கை பொறுப்பற்றது எனச் சாடியுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி மாதம் 23ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.